பக்கங்கள்: முப்பத்துஇரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 23 திங்கட்கிழமை (06.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 192



02
வன்னியில் கொலையுண்டவருக்கு ஏதுமில்லை



18
நீங்க வேறு நாடய்யா! நாங்கவேறு நாடு



22
வங்கிக் கணக்கு வைத்திருக்கும் 100 வயது மூதாட்டி

## அரச நிகழ்வுகளில் இனிவரும் நாள்களில் பழங்கள், மூலிகைப் பானங்கள் ருசிக்கலாம்

### யாழ். செயலகத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்டத்தில் அரச நிகழ்வுகளில் இனிமேல் போசணை மிகுந்த பழங்கள் மற்றும் மூலிகைப் பானங்களை ருசித்து அருந்தி மகிழ முடியும். தற்போது வழங்கப்பட்டு வரும் ஆரோக்கியமற்ற சிற்றுண்டிகளுக்குப் பதிலாகவே இவை வழங்கப்படவுள்ளன.

மாவட்டத்தில் நிலவும் போசணையின்மையை முழுமையாக ஒழிக்கும் திட்டத்தின் முன்னோடிச் செயற்பாடாகவே இந்தப் புதிய நடைமுறை வருகிறது.

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போசாக்குக் கருத்தரங்கு நிகழ்வில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (32 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி வருகிறார் மஹிந்த; பாதுகாப்பு உச்சக் கட்டத்தில்!

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு நாள் விஜயம் மேற்கொண்டு இன்று முற்பகல் கிளிநொச்சிக்கு வருகைதருகிறார்.

ஜனாதிபதியின் வருகையை ஒட்டி வன்னியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று முற்பகல் 11 மணிக்கு கொக்காவிலில் தொலைத்தொடர்புக் கோபுரத்தைத் திறந்து வைக்கும் ஜனாதிபதி, அதன் பின்னர் நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சி பொது மைதானத்தில் இடம் பெறும் (31 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் போராளிகள் 337 பேரே விடுவிப்பு வவுனியாவில் மக்கள் வீதியில் அமர்ந்து எதிர்ப்பு

### 900 பேர் விடுவிக்கப்படுவர் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததால் ஏமாற்றம்

வவுனியா, ஜூன் 06

அறிவிக்கப்பட்டபடி 900 முன்னாள் போராளிகள் விடுவிக்கப்படாததால் வவுனியாவில் நேற்று பெரும் களேபரம் ஏற்பட்டது. 337 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்டிருந்தனர்.

முன்னாள் போராளிகளின் பெற்றோர், குடும்பத்தினர், உறவினர்கள் ஆகியோர் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். இதனால் வவுனியாவில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. (32 ஆம் பக்கம் பார்க்க)



வவுனியா கலாசார மண்டபத்தில் 337 முன்னாள் போராளிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் தனது மனைவி, குழந்தை ஆகியோருடன் காணப்படுகிறார்.

## புனர்வாழ்வு பெறும் போராளிகள் அனைவரையும் வருட இறுதிக்குள் விடுவிக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜூன் 6

இந்த வருடத்திற்குள் புனர்வாழ்வு பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் அனைவரையும் விடுவிக்குமாறு ஜனாதிபதி எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இதற்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

- இவ்வாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்றுத் தெரிவித்தார்.

(32 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை யுத்த அனுபவ மாநாட்டில் கேள்விகளுக்கு மழுப்பல் பதில்

### 'த எக்கனோமிக்ஸ்' சஞ்சிகை கூறுகிறது

கொழும்பு, ஜூன் 06

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற யுத்த வெற்றி அனுபவங்கள் குறித்த மூன்றுநாள் கருத்தரங்கில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எழுப்பிய கேள்விகளுக்கு முறையாகப் பதில் அளிக்கப்படவில்லை என்று 'த எக்கனோமிக்ஸ்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'த எக்கனோமிக்ஸ்' சஞ்சிகை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டிருந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

மனித உரிமைகள் குழுக்கள் இந்தக் கருத்தரங்கு யுத்தக் குற்றங்களை மறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி என வர்ணித்திருக்கின்றன.

(32 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா-மிலிந்த இரகசியச் சந்திப்பு இலங்கை-தமிழக உறவில் திருப்பம்?

சென்னை, ஜூன் 6

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் சுமுக உறவுகளைப் பேணும் முயற்சியில் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதன் ஒருபடியாக முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தமிழக முதலமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவிடம் ஜெயலலிதாவைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு இலங்கை அரசு இரகசியமாகக் கேட்டிருந்தது. அதன்பின்னர் சந்திரபாபு நாயுடு (32 ஆம் பக்கம் பார்க்க)

# எமது வாழ்வாதாரத்தைத் தேர்தலுக்காகப் பணயம் வைக்க அரசும் அதுசார்ந்த கட்சிகளும் முயற்சித்து வருகின்றன

### கூட்டமைப்பு எம்.பிக்களிடம் வலி.வடக்கு மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

அவலத்துடன் கூடிய எங்கள் வாழ்வாதாரத்தைத் தமது தேர்தலுக்காகப் பணயம் வைக்கும் முயற்சியில் அரசும் அரசு சார்ந்த கட்சிகளும் முனைப்புக் காட்டுகின்றன. அதேசமயம், வலி. வடக்கில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையிலேயே அரசு எம்மைக் குடியமர்த்தி உள்ளது. சீரான பாதைகள் இல்லை, குடிதண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை. எமது குடியிருப்புகளையும் காணிகளையும் அடையாளம் காணக்கூட முடியவில்லை. வன்னிக் காட்டைவிட பெரிய காடாக வலி. வடக்கு காட்சியளிக்கிறது.

- இவ்வாறு வலி. வடக்கு மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிட்டனர்.

வலி. வடக்கில் தந்தை செல்வா ஞாபகார்த்த தொடக்கப் பாடசாலை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே பொது மக்கள் இவ்வாறு கூறினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன் ஆகியோருடன் பாடசாலை அதிபர் மற்றும் பொது அமைப்புகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

காலை 10 மணிக்கே மண்டபம் நிறைந்து வழியுமளவுக்கு மக்கள் கூடிவிட்டனர். வலி. வடக்குப் பிரதேச செயலர், பிரதேச சபை செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதும், குறிப்பிட்ட அதிகாரிகள் எவரும் கடைசி வரையும் வரவில்லை. இதனால் கூட்டம் சிறிது தாமதமாகவே ஆரம்பமானது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு தமது தேவைகள் தொடர்பாகக் கருத்து தெரிவித்த பலரும் 25 வருடங்களின் பின் தமது நிரந்தர மண்ணில் காலடி எடுத்து வைக்கச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

எமது காணிகளும் வீடுகளும் பெரிய வனங்களாக - காடுகள் போல் - இருக்கின்றன. (32 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான "கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

## யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கும்

# கூட்டமைப்பு உறுப்பினர்கள் 8 பேரும் இனி ஓரணியில் செயற்படுவதாக உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாநகர சபையின் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் றெமிடியஸ் உட்பட எட்டுப் பேரும் - ஓரணியில் செயற்படுவர் என்று நேற்று உறுதியளித்துள்ளனர்.


மாநகரசபையில் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பின் உறுப்பினர்களில் முடியப்பு றெமிடியஸ் தவிர்ந்த ஏனையோர் ஓரணியில் செயற்படுவதாக வெளிவந்த தகவல்களை அடுத்து கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்று நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் இணைச் செயலாளருமான மாவை சேனாதிராசா தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனும் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தை அடுத்து சபையின் உறுப்பினர்கள் எட்டுப் பேரினதும் கையொப்பங்களுடன் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

* கலந்தாலோசனையை மாவை சேனாதிராசா ஆரம்பித்து வைத்து, கடந்த 6 மாதங்களாக மாநகர சபையில் நடைபெற்று வரும் விடயங்கள் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒரே அணியாகச் செயற்படாதமை போன்ற தோற்றப்பாடு பத்திரிகைச் செய்திகள் மூலம் வெளிவருவது மி க வும் வேதனையளிப்பதாகத் தெரிவித்தார்.

* அதைத் தொடர்ந்து மாநகரசபை உறுப்பினர்களை மனந்திறந்து கருத்தைத் தெரிவிக்கும்படி கேட்கப்பட்டதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.



விசேட கூட்டம் 04.06.2011 சனிக்கிழமை பி.ப.06.00 மணி

| பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|
| திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா | மாநகர முதல்வர் | |
| திரு.து.இளங்கோ | பிரதி முதல்வர் | |
| திரு.அ.ம.மங்களநேசன் | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு.மா.கனகரத்தினம் | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு.சு.விஜயகாந் | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு.அ.கிளபோடாசியஸ் | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு.பி.எ.கிறேசியன் | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு.மீராசாஹிப் ரமீஸ் | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு.மொஹமட் முஸ்தப்பா | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு. அஸ்கர்தமி பதுார்தீன் | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு. அஜ்மயீன் அஸ்பார் | மாநகர சபை உறுப்பினர் | |
| திரு. முடியப்பு றெமிடியஸ் | | |

* உறுப்பினரான றெமிடியஸ், ஏனைய 6உறுப்பினர்களும் தமக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்றும் அதனால் சங்கடம் ஏற்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

* தொடர்ந்து உறுப்பினர் விந்தன் முரண்பாடுகள் ஏற்பட்டமைக்கான காரணங்களை விளக்கினார்.

* கடந்த சனிக்கிழமை மாநகரசபையில் நடைபெற்ற கலந்துரையாடலில் றெமிடியஸ் கலந்து கொண்டு, அரசு சார்பு கட்சிகளுடன் சேர்ந்து நிஷாந்தனுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் கையொப்பமிட்டதாகக் கூறப்பட்டதை அவர் (றெமிடியஸ்) மறுத்து தாம் அவ்வாறு செய்ய வில்லையெனத் தெரிவித்தார். கடந்த காலத்தில் சில பத்திரிகைகள் தமக்கு எதிராகச் செய்திகள் வெளியிட்டு வந்தமை தமக்குக் கவலையளிப்பதாகத் தெரிவித்தார்.

* மாநகர சபை ஏற்பாடு செய்த 2010ஆம் ஆண்டின் ஒளி விழாவைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் புறக்கணித்தபோது, றெமிடியஸ் கலந்துகொண்டமையே முரண்பாட்டுக்குவித்திட்டது எனவிந்தன், பரஞ்சோதி, திருமதி மேரியம்மா ஆகியோர் தெரிவித்தனர். எங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்த ஆளும் தரப்பினர் செயற்பட வாய்ப்பளிக்கப்பட்டமை கவலைக்குரியதுனைத்தெரிவித்தனர்.

* நீண்ட நேர கலந்துரையாடலின் பின்னர் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசாவி[illegible] ஆலோசனைக்கமைய, கூட்டமைப்பு மாநகரசபை உறுப்பினர்கள் எட்டுப்பேரும் ஒரே அணியாக - ஒற்றுமையாக - எமது இலட்சியங்களுக்கமைய செயற்படுவதாக உறுதியளித்தனர் - என்றுள்ளது.

(ஒ-ஐ)

# கட்டுநாயக்காவில் பலியானவருக்கு ரூ. 10 லட்சம்; வன்னியில் கொலையுண்ட எம்மவருக்கு ஏதுமில்லை

## இதுதான் நல்லிணக்கத்துக்கு அழைக்கும் அரசின் நிலைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 6

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பொலிஸாரால் கொல்லப்பட்ட தொழிலாளர் ஒருவருக்கு பத்து லட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக வழங்கிய அரசு, அரச படையினால் வகை தொகையின்றி காட்டுமிராண்டித்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு நஷ்ட ஈடாக எதையும் வழங்கத் தயாராக இல்லை - இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

விதவைகளாக்கப்பட்டவர்களுக்கு விமோசனம் இல்லை. காணாமற்போன ஒரு லட்சத்துக்கும் அதிகமானோரின் நிலை என்னவென்றும் தெரியவில்லை. இப்படி நாம் கண்ணீர் வடித்துக்கொண்டு இருக்கும் போது நமது தமிழ் அமைச்சரின் ஏற்பாட்டில் தமிழ் யுவதிகளை மேடைகளில் ஏற்றி களியாட்டம் போட அழைக்கின்றனர்.

1943ஆம் ஆண்டில் தமிழ் தேசியம் என்ற சிந்தனையை ஆரம்பித்த தந்தை செல்வா, 'கிழக்கைக் காப்பாற்ற வேண்டும்' என்றார். இப்போது தந்தை செல்வாவின் சொந்த மண்ணைக் காப்பாற்றுவதற்காகப் போராட்டம் நடத்தவும், உண்ணாவிரதம் இருக்கவும் வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாம் எப்பொழுதும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றுபவர்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எமக்கு ''ஐந்து அமைச்சுப் பதவிகளைத் தருகிறோம். அரசுடன் இணைந்து செயற்பட வாருங்கள்'' என எமக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் நாங்கள் அதனை நிராகரித்து விட்டோம். பட்டம் பதவிகளுக்காகவும் அமைச்சுகளுக்காகவும் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கவும், அரசுக்கு வால்பிடிக்கவும் நாம் தயாராக இல்லை.

இரண்டு தசாப்தங்களுக்குப் பின் நாம் நமது சொந்த மண்ணில் காலடி வைத்துள்ளோம். இதனை மீட்டெடுக்க எத்தனை போராட்டங்களை நடத்தினோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.



இன்று மக்களின் ஆதரவு எங்களுக்கு உண்டு. உங்களுடைய பலத்தால் இன்று சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்புகின்றோம். உண்மை நிலையை உலகறியச் செய்துள்ளோம்.

அரசு வடக்கையும் கிழக்கையும் பிரித்து விட்டதாகக் கருதலாம். ஆனால் கிழக்கில் மக்கள் அதனை ஏற்கவில்லை. ஒற்றுமை உணர்வுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்தனர்.

நாம் கடைசிவரை ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். நமது தியாகமும் 20 வருடப் போராட்டமும் வீணாகிவிடக் கூடாது என்றும் மாவை சேனாதிராசா கூறினார்.

(ஐ-02)

# யோகர் சுவாமி திருவடி நிலைய பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 5

கிளிநொச்சி யோகர் சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்ல அபிவிருத்தி சார்ந்த பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு இடம் பெறும்.

கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பழைய, புதிய அங்கத்தவர்கள், நிர்வாகிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மகாதேவா ஆச்சிரம நிலையத் தலைவர் தி. இராசநாயகம் கேட்டுள்ளார்.

(ஐ-302)

# நிகழ்வுகள்

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 6

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2009, 2011 கல்வியாண்டில் பயிற்சி பெற்ற தாதிய மாணவர்களுக்கான இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ற-313)

## மணிமண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 6

வண்.வடகிழக்கு கலட்டி எச்சாட்டி அம்மன் மணிமண்டபத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம் பெறவுள்ளது. ஆலய பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கனேடிய முன்னாள் தூதர் சி.எஸ். பூலோகசிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ்.ஸ்ரீரங்கநாதக் குருக்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா அழுத்தங்கள் கொடுத்தாலும் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு இல்லை

இந்திய அரசாங்கத்தின் வலியுறுத்தலின் அடிப்படையில், வடக்கு,கிழக்கு தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்கும் வகையில் கொண்டு வரவிருந்த சட்டமூலத்தை இலங்கை அரசு திரும்பப்பெற்றுக்கொண்டது

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அரசியலமைப்பின் 20 ஆவது சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருந்தது. எனினும் அதனை தற்போது இலங்கை அரசு சமர்ப்பிக்கப் போவதில்லை என்று தீர்மானித்துள்ளதாக லங்காதீப செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

தனியார் ஓய்வூதிய திட்டத்துக்கு கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் காட்டப்பட்ட எதிர்ப்பைப் போன்று இந்த அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கும் எதிர்ப்பு ஏற்படலாம் என்ற காரணத்தினால் அதனை திரும்பப்பெற்றுக்கொண்டதாக இலங்கை அரசுத் தரப்பு தெரிவித்தது.

அதிகாரப் பகிர்வு யோசனைத் திட்டமொன்றை முன்வைப்பதனால் பல்வேறு தரப்பினர் மத்தியில் இருந்தும் எதிர்ப்புகள் ஏற்படும். இந்நிலையில் இந்தியா எவ்வாறான அழுத்தங்களை பிரயோகித்தாலும் தற்போதைக்கு அதிகாரப் பகிர்வு குறித்த சட்ட மூலங்களை சமர்ப்பிப்பதில்லை என்று இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுக்கும் நோக்கில் முன்வைக்கப்படவிருந்த 19ம் திருத்தச் சட்ட மூலமும் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமக்கு சாதகமான அடிப்படையில் பிரதம நீதியரசராக ஷிரானி பண்டாரநாயக்கவை நியமித்த நிலையிலேயே அந்த 19 ஆம் அரசியல் அமைப்பு சீர்திருத்தமும் மீள்ப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை அரசுத் தரப்பு தெரிவித்துள்ளது.

(தமிழ்வின்)



இராணுவ முகாம்களில் தலைமைத்துவ பயிற்சி பெறும் பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று சீகிரியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில் மாணவர்களும் இராணுவ உத்தியோகஸ்தர்களும் ஓய்வெடுத்த காட்சி இது. (தமிழ்மிரர்)

இணையச் செய்திகள்

## போர்க்குற்றங்கள்; புதிய ஆதாரம்

ஏற்கனவே கைகளும் கண்களும் கட்டப்பட்ட நிலையில் தமிழ் இளைஞர்களைச் சுடும் காட்சிகளை வெளியிட்ட சனல் 4 தொலைக்காட்சி தற்போது புது ஆதாரங்கள் அடங்கிய வீடியோ ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அதில் குற்றுயிரும் குறையுயிருமாக உள்ள பெண் போராளிகளை சிங்கள இராணுவம் மற்றைய இறந்த உடலங்களோடு தூக்கிப் போடுவதும், அப் பெண்களின் அங்க..கள் குறித்து பாலியல் ரீதியாக கொச்சையான தகாத வார்த்தைகளில் கதைப்பதும் பதிவாகியுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள இக்காணொளிகளில் பலவற்றை உலகத் தமிழர் பேரவை (GTF) வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இக்காணொளிகளை உலகத் தமிழர் பேரவை மிகுந்த சிரமத்தின் மத்தியில் சேகரித்து அதனைஐரோப்பாவுக்குக்கொண்டு வந்துள்ளனர்.

(தமிழ்ஈஎன்என்)

## காதலிக்காக இளம் மனைவியை உயிருடன் புதைத்த கணவன்!

கள்ளக் காதலிக்காகத் தனது இளம் மனைவியை அடித்து குற்றுயிராகப் புதைத்த கணவன் ஒருவர் காத்தான்குடிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாகத் தெரியவருவது:

காத்தான்குடிப் பிரதேசவாசியான குறித்த சந்தேக நபருக்கு அண்மையில்தான் திருமணமாகியிருக்கிறது. சந்தேக நபருக்கு திருமணத்துக்கு முன்பே வேறெரு பெண்ணுடன் தொடர்பிருந்துள்ளது.

திருமணத்தின் பின் தனது கள்ளக்காதலியுடன் தொடர்பைப் பேணுவதற்கு தடையாக இருந்துள்ளார் இவரது 24 வயதுடைய இளம் மனைவி.

இதனால் இருவருக்குமிடையே சிறுசிறு சண்டைகள் வந்துள்ளது. கடந்த ஒரு வாரத்துக்கு முன் இவ்வாறு சண்டை வந்தபோது தனது மனைவியை கொலை செய்யும் அளவுக்கு சந்தேகநபர் தாக்கியுள்ளார்.

இதன்போது இளம் மனைவி மயக்கமுற்று விழுந்துள்ளார். மயக்கமுற்று விழுந்தவர் இறந்துவிட்டார் என எண்ணிய கணவன் தனது வளவினுள் யாருக்கும் தெரியாமல் புதைகுழி ஒன்றைக் தோண்டியுள்ளார்.

பின்னர் தனது குற்றுயிராகக் கிடந்த மனைவியை உயிருடன் அப்புதைகுழியில் புதைத்துவிட்டார்.

பின்னர் உறவினர்களிடம் தனது மனைவி வேறேரு ஆணுடன் தொடர்பு வைத்துள்ளார். அந்நபருடன் ஓடிவிட்டார் என தெரிவித்துள்ளார்.

அப்பெண்ணைக் காணாதால் அவர்களும் கணவர் சொல்லியதை நம்பி பிரதேசமெங்கும் தேடியுள்ளனர். இதில் ஒன்றுமே நடவாதது போல் கணவனும் தேடுவது போன்று நாடகமாடியுள்ளார்.

பெண் காணாமல் போனது தொடர்பாகக் காத்தான்குடிப் பொலிஸுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. காத்தான்குடிப் பொலிசார் தீவிர விசாரணையை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த பெண் தனது வளவிலேயே புதைக்கப்பட்டுள்ளதை கண்டுபிடித்தனர். (தமிழ்ஈஎன்என்)

## ஐ.நா. அரங்கில் ஆபாச சைகை காட்டிய இலங்கை அதிகாரி!

கடந்த 3ஆம் திகதி ஜெனிவாவில் சனல் 04 'இலங்கையின் கொலைக்களம்' என்ற பெயரில் இலங்கையின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்தும் ஆவணப் படத்தை திரையிட்டது.

இந்த ஆவணப்படம் கூடியிருந்த உறுப்பினர்களை மட்டுமல்ல அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியதை நேரடியாகப் பார்க்க கூடியதாக இருந்தது.

பலர் கண்ணீர் விட்டு கதறி அழுதார்கள். பல உறுப்பினர்கள் இந்தக் காணொளியை தொடர்ந்து பார்க்க முடியாமல் அரங்கைவிட்டு வெளியேறினர்.

இலங்கை அரசின் இனப்படுகொலை காணொளியை பார்த்து ஆத்திரமுற்ற பார்வையாளர்களும் சில ஊடகவியலாளர்களும் கூடியிருந்த இலங்கைப் பிரதிநிதிகளை நோக்கி தமது அதிருப்தியை தெரிவிக்க முனைந்தபோது கீழ்த்தரமான முறையில் அநாகரிமாக நடந்து கொண்ட இலங்கை பிரதிநிதி ஒருவர் ஐ.நாவிற்கு அனுப்பப்பட்ட ஒரு பிரதிநிதியே இவ்வளவு கீழ்த்தரமாக ஐ.நா. அரங்கில் நடந்து கொள்ளும்போது இலங்கைப் இராணுவத்தினர் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை தனியாகச் சொல்லவும் வேண்டுமா என்று ஒரு சர்வதேச ஊடகவியலாளர் கருத்து வெளியிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

மனித இனமே வெட்கித் தலைகுனியும் ஈனச்செயல்களை இலங்கை அரசு ஒரு இனத்திற்கெதிராக இழைத்ததை சனல் 04 ஆவணப்படுத்தியிருந்ததை பார்த்து பல நாட்டு உறுப்பினர்கள் அதிர்ந்து போயிருந்த தருணம் எந்தவித குற்றவுணர்வும் இன்றி இலங்கையின் பிரதிநிதி ஊடவியலாளர்களையும் பார்வையாளர்களையும் பார்த்து இப்படி அநாகரிகமாக நடந்து கொண்டது இலங்கையின் உண்மை முகத்தை ஐநா அரங்கில் வைத்து தோலுரித்திருக்கிறது.

(தமிழ்ஈஎன்என்)

# திருமலையில் கடனட்டை மோசடி 78 கோடி ரூபா பணம் மீட்பு

திருகோணமலை நகரத்தை அண்டிய பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 78 கோடி பெறுமதியான பண மூட்டைகள் சிறிலங்கா சிறப்பு புலனாய்வுக் குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது: கொழும்பு நான்காம் மாடி விசாரணைப் பிரிவுக்கு பொறுப்பான புலனாய்வுத்துறையினரிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த பணமூட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்துதிருகோணமலைக்கு வந்த சிறப்புப் புலனாய்வுத்துறை அணி ஒன்று குறித்த வீட்டைச் சுற்றி வளைத்து சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்து விசாரணை நடத்தியதன் பின்னர் குழி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பண மூட்டைகளை மீட்டுச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

குறித்த நபர் சொந்தமாக அச்சகம் ஒன்றை நடத்திவந்துள்ளதாகவும் பல கடனட்டைகளை வைத்திருந்துள்ளதாகவும் கடனட்டை மோசடியின் மூலம் பெறப்பட்ட பணமே இவ்வாறு வீட்டினுள் மறைத்து வைத்திருந்ததாக விசாரணையில் தெரிவித்துள்ளதாகவும் மேலும் அறியமுடிகிறது.

இந்த பணவிடயம் தொடர்பாக தெரிந்தவர்கள் சிறப்பு புலனாய்வுத்துறையினருக்கு வழங்கிய தகவலை அடுத்தே இந்த பெரும் தொகை பணத்தை பறிமுதல் செய்ததோடு குறித்த நபரையும் கைது செய்து சென்றுள்ளனர். இதன்போது பறிமுதல் செய்யப்பட்ட பணத்தின் மதிப்பு சுமார் 78 கோடி இருக்கும்.

(தமிழ்ஈஎன்என்)

## ஐ.நா. பிரதிநிதிக்கு இலங்கை தடை!

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, காணாமல் போன, தாக்குதல்களுக்கு உள்ளாகி வரும் ஊடகவியலாளர்கள் குறித்து விசாரணை நடத்தி வரும் ஐ.நாவின் சிறப்பு பிரதிநிதி பிராங்க லா றூ இலங்கை வருவதற்கான அனுமதியை இரண்டாவது தடவையாகவும் அரசாங்கம் மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கருத்துச் சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பிரதிநிதி பிராங்க லா றூவை இலங்கைக்கு அழைத்து காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத், படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க, உட்பட காணாமல் போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய விசாரணை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 37 சர்வதேச ஊடக மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் கேட்டுள்ளன.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றையும் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கூடிய இந்த அமைப்புகள் எடுத்துள்ளன.

37 சர்வதேச ஊடக மற்றும் மனித உரிமை அமைப்புகளை உள்ளடக்கிய சர்வதேச சுதந்திரமான கருத்துக் கூறல் பரிவர்த்தனை அமைப்பு International Freedom Expession Exchange (IFEX) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது.

(தமிழ்வின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் தமிழ் உலகுக்கு பெருமை சேர்க்கும் வரலாற்று நிகழ்வு காரைநகர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று இடம்பெறும் கும்பாபி ஷேகம் காரைநகர் மண்ணுக்கும் சைவத் தமிழ் உலகுக்கும் பெருமை சேர்க்கும் வரலாற்று நிகழ்வு

யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கும்பாபிஷேகத்தையொட்டி அவர் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

எழில்மிகு இலங்கையின் நெற்றித் திலகமென இலங்கும் காரைநகர் திருப்பதி அனைத்து வளங்களுடன் வரலாற்று வளமும் நிறையப் பெற்ற திருத்தலமாகும். இங்கு எழுந்தருளியிருந்து அனைவருக்கும் அருள் பாலிக்கும் கூத்தபிரான் தில்லை நடராஜப் பெருமானின் ஆலய திருப்பணிகள் நிறைவேறி இன்று மகாகும்பாபிஷேகம் காண்பது மகோன்னதமான நிகழ்ச்சியாகும்.

மனித வாழ்வில் உயர் நிலையைத் தரக்கூடியது இறை வழிபாடு. அதனை நமக்கு ஏற்படுத்துவது ஆலயங்கள். இந்த ஆலயங்களில் நடைபெறும் பூசைகளும் விழாக்களும் மனிதன் சிந்தித்து நல்ல படி வாழ நல்ல சிந்தனைகள் ஊற்றெடுக்க வழி வகுக்கின்றன. இந்தச் சிந்தனையை தமது வாழ்நாளில் அன்று முதல் இன்று வரை கடைப் பிடித்து வருபவர்கள் காரைநகர் மக்கள்.

காரைநகர் மக்களின் வாழ்வு சைவ வாழ்வு. இன்னொரு வகையில் கூறின் சைவ ஆசாரங்களுடன் கூடிய வாழ்வு எந்த நாளும் விரதம், அநுட்டானம், அறப்பணி என்று சிந்தித்து வாழ்பவர்கள் அவர்கள்.

இவ்வாறு தமக்கென தாமே சமய வாழ்வை உருவாக்கி அதன் வழியில் தமது சந்ததியையும் வாழ வைக்கும் காரைநகர் மக்கள் தம்மை நாளந்தம் வாழவைக்கும் ஈழத்துச் சிதம்பரப் பெருமானுக்கு அவனது விருப்பப்படியே ஆலயத்தை அழகு றப் புனரமைத்து இன்று குடமுழுக்கு விழாவைக் காண்கின்றனர். இன்று நடைபெறும் பெருஞ் சாந்திப்பெருவிழா காரைநகர் மண்ணுக்கும் "சைவத்தமிழ் உலகுக்கும் பெருமை சேர்க்கும் வரலாற்று நிகழ்வும் கூட.

இவ்வாலயத்தில் எனது கணவரும் முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான தியாகராசா மகேஸ்வரனின் முயற்சியால் ஆலய மூன்றாம் வீதியில் அறப்பணி நிலையம் அமைக்கப்பட்டு அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்ததுடன் நடராசப் பெருமானுக்கும், ஐயனாருக்கும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்பத் தேர்கள் அமைத்து இவ்விரு தேர்களுக்குமான தேர் இருப்பிடங்களையும் அமைத்தும் பல்வேறு திருப்பணிகளை மேற்கொண்டார்.

ஈழத்துச் சிதம்பரத்தில் கோயில் கொண்டுள்ள கூத்தப்பிரான் அற்புதங்கள் பல புரிவன். தன்னை நம்பி வருவோருக்கு வேண்டு வன ஈயும் பெருந்தகை. அத்தகைய சிறப்பு வாய்ந்த தில்லைக் கூத்தன் ஆலயத்தின் திருப்பணிக் கைங்கரியங்கள் நிறைவெய்தி இன்று நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்படையவும் அதனைத் தரிசித்து மக்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழவும் இறையாசியை வேண்டிப் பிரார்த்திக் கின்றேன் -என்றுள்ளது. (ஐ)

# டெங்கு, எலிக்காய்ச்சலால் 100 பேர் 5 மாதங்களில் மரணம்

கொழும்பு, ஜூன் 6

கடந்த ஐந்து மாதங்களுள் டெங்கு தாக்கம் மற்றும் எலிக் காய்ச்சலுக்கு உள்ளாகி 101 பேர் உயிரிழந்துள்ளனர்.

மழையோடு கூடிய சீரற்ற காலநிலை காரணமாக டெங்கின் தாக்கத்துக்கு 6 ஆயிரத்தி 380 பேரும் எலிக்காய்ச்சலால் 3 ஆயிரத்தி 695 பேரும் பாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதேவேளை, இந்த ஆண்டில் இக்காலப் பகுதியில் அதிகளவான எலிக்காய்ச்சல் நோயாளர்கள் குருநாகல் மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தகவல் தெரிவிக்கிறது.

அம்பாந்தோட்டை, கம்பஹா, இரத்தினபுரி, அனுராதபுரம் மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் எலிக்காய்ச்சல் தீவிரமடையும் அபாயநிலை அறியப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே டெங்கு நோயாளர்கள் அதிகளவில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறை, கம்பஹா, அம்பாந்தோட்டை, காலி, புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை, இரத்தினபுரி, குருநாகல் மற்றும் மாத்தறை மாவட்டங்கள் டெங்கு நோய் கடுமை யாகப் பரவும் மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளனஎன்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-22)

SHAMROCK யாழ். கல்லூரி
A/L 2013, 012
பொருளியல்: V.ஞானவேல் B.BA.
தமிழ்: S சிவா B.A
அளவை: S.றோகேசியன் B.A
புவி: S. டென்சியா B.A
அரசியல்: S.S.செந்துரன் B.A

## தவறிவிட்டது

மாவிட்டபுரம் தெற்கு, கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சொரூபினி முருகையா என்பவரின் (866063052V) தேசிய அ.அ. 01.06.2011 அன்று யாழ்.பஸ் நிலையத்துக்கும் பண்ணை வைத்தியசாலைக்கும் இடையில் சிறு பேர்சுடன் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
0772487832, 0776162853

## நீங்கா நினைவில் எட்டாம் ஆண்டு

வையத்துள் 09 ★ 02 ★ 1932



வானுலகில் 04 ★ 06 ★ 2003

### அமரர் கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், சோலைவரிப் பகுதி - யாழ். மாநகரசபை)

திதி: 06.06.2011

உண் என்பீர் உபசரிப்பீர் ஊர்மேற்பாசம்
ஒளிவடி வேல் முருகனொடு உறைந்தீர் நேசம்
வழி முறையும் நெறி முறையும் வகுத்து வாழ்ந்தீர்
வாழ்வாங்கு வாழ்ந்த பின்பு வானோர் கேட்க
விழி மூடிக் கண்துயின்று தேகம் விட்டு
விரைந்தீரோ இறைவனுக்குத் தொண்டர் ஆகி
அருந்தவத்தோர் சிவபாத சுந்தரனார் ஐயா!
அகன்றெம்மை விட்டாண்டு எட்டும் ஆச்சு

118/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (4933)

என்றும் நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.

# உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு பிரான்ஸில்

யாழ்ப்பாணம், ஜூன் 6

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றிய பிரான்ஸ் கிளை நடத்தும் 11 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு செப்ரெம்பர் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் பிரான்ஸில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு உலகத் தமிழர் மொழி, பண்பாடு, வாழ்வியல் மேம்பாடு என்ற கருப்பொருளில் அமையவுள்ளது.

மேலும் தமிழ் வழி இறைவழிபாடு, தமிழ் மரபுகளை நிலைப்படுத்தல், தமிழர் இறையாண்மை, தமிழ்ப் பாதுகாப்பு, தமிழ் கலை மீட்பு, தமிழ்க் கல்வி, தமிழர் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு மறைந்த மறைக்கப்பட்ட தமிழர் வரலாற்றுத் தேடல்கள், எதிர்காலத் தமிழனம் எதிர் நோக்கும் சவால்கள், தமிழ் ஊடகங்கள் போன்ற விடயங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படும்.

மாநாட்டு ஆய்வுகளும் தமிழ் அறிஞர்கள் துறை சார் புத்தாய்வுகளும் கொண்ட மாநாட்டு மலர் இந்த மாநாட்டில் வெளியிடப்படவுள்ளது.

இந்த மாநாடு 1977 இல் சென்னையிலும், 1980 இல் மொரீஸிசியசிலும், 1985 இல் சேலத்திலும், 1989 இல் மலேசியாவிலும், 1992 இல் அவுஸ்திரேலியாவிலும், 1996 இல் கனடாவிலும், 1999 இல் சென்னையிலும், 2001 இல் தென் ஆபிரிக்காவிலும், 2004 இல் புதுவையிலும், 2007 இல் மலேசியாவிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2228 திகதி 04-06-2011
ஆங்கில எழுத்திற்கும் X
வெற்றி எண்கள் 04 18 55 58
போனஸ் இல: 11
ஜக்பொட் பரிசு ரூ. 14,301,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 199070 | 20/- | 3,981,400/- |
| 2 இல | 14337 | 100/- | 1,433,700/- |
| 3 இல | 309 | 1,000/- | 309,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7980 | 40/- | 319,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 477 | 1,000/- | 477,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,301,700/- | - |
| 1 இல + போனஸ் இல | 9499 | 100/- | 949,900/- |
| 2 இல + போனஸ் இல | 437 | 500/- | 218,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கு + போனஸ் இல | 344 | 200/- | 68,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கு + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கு + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | 232483 | | 9,468,500/- |
| ரத்தரங்வரம் மொத்த பரிசு | 317 | | 258,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 232800 | | 9,726,500/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 14,844,600/-

ரத்தரங் வரம்
தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை
வெற்றி எண்கள் 59 62 63 68
ஆங்கில எழுத்திற்கும் D

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 316 | 500/- | 158,000/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுண் தங்கக்காசு 05 | - |

இந்த புதன்கிழமை தங்கக் காசுப் பொதி 07 தங்க நாணயங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபை

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது. 420/=
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

## தவறிவிட்டது

பாஸ்கரன் விஜிகரன் என்பவரின் தேசிய அ.அ. (880092898V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ATM காட் என்பன அடங்கிய பேர்ஸ் முள்ளியவளை ஆலடிச் சந்திக்கும், தண்ணீரூற்று பிள்ளையார் கோயிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 3 ஆம் வட்டாரம் முள்ளியவளை, முல்லைத்தீவு என்னும் முகவரியுடனோ அல்லது 0777301989, 0243249216 என்ற தொ.பே. இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளவும்.

ஃபுபே செட்
வீட்டுக்கும்
மற்றும்
ஹோட்டலுக்கு



ரூபா 3950/-யிலிருந்து
2439422

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர் பொலிஸ் திணைக்களம்)

பருத்தித்துறை புலோலி கிழக்கு சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் 70, கற்குழி, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மு.சிவசுப்பிரமணியம் 04.06.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுகன்யாவின் அன்புக் கணவரும் சுசீந்திரன், சுஜீவன், தேனுகா ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - செல்லப்பாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர்- லட்சுமிதேவி தம்பதியரின் மருமகனும் சிவானந்தன், சிவநேசன், சிவயோகம், தங்கராணி, சிவகெங்கா ஆகியோரின் சகோதரனும் தேவகன்யா, வரராஜசிங்கம், தில்லையம்பலம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கல்லடி ஒழுங்கை, தும்பளை வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள அவரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெறும். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி
திருமதி சுகன்யா சிவசுப்பிரமணியம்

தொ.பே.இல: 0775788609 (சி/496)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நிகாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொறுப்புக் கூறும் பொறுப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் பதினேழாவது கூட்டத் தொடர் கடந்த மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகி ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. சென்ற வெள்ளிக்கிழமையன்று (03.06.2011) இடம்பெற்ற பேரவையின் கூட்டத்தின்போது, இலங்கையின் வன்னிப் பெருநிலப்பரப்பில் அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனிதப் பேரவலங்கள் குறித்த காணொளிப் (வீடியோப்) படங்கள் காண்பிக்கப்பட்டன.

அந்த ஆவணப் படத்தைப் பார்த்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ராஜதந்திரிகள், பேரவையில் அங்கம் வகிக்கும் உலக நாடுகளின் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த முக்கிய புள்ளிகள் மற்றும் மனிதாபிமான அமைப்புகளின் பிரதிநிதிகள் அதிர்ச்சி வெளியிட்டனர்; கவலையும் தெரிவித்ததாகச் சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

அங்கு பிரசன்னமாகி இருந்தவர்களில் பலர் வீடியோக் காட்சிகளைப் பார்த்துக் கண்ணீர் சிந்தினர். மற்றும் பலர் அந்தக் கொடூரக் காட்சிகளைப் பார்க்கச் சகிக்காமல் கண்களை மூடிக் கொண்டனர் என்றும் ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டத் தொடரில் உரையாற்றிய சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைவர், காண்பிக்கப்பட்ட வீடியோப் படங்கள் உண்மையானவை என்றும், அதனால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு இலங்கை மீது சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

கூட்டத்தில் பேசிய இலங்கைப் பிரதிநிதிகள் (இருவர்) காண்பிக்கப்பட்ட வீடியோப் படங்கள் போலியானவை என்றும் அது குறித்துத் தாம் ஆராய வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

அங்கு உரையாற்றிய பல நாடுகளின் பிரதிநிதிகள், போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச மட்டத்திலான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இலங்கைப் போரின்போது இடம்பெற்ற சர்வதேச மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித நேய சட்டங்களுக்கு எதிரான செயல்கள் குறித்து விசாரணை தேவை என்பதனை வீடியோப் படங்கள் புலப்படுத்துவனவாக பல தரப்புகளின் பிரதிநிதிகளும் வலியுறுத்தினர்.

எந்தத் தரப்புக் குற்றம் செய்திருந்தாலும் இலங்கை அரசு உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்று மனித உரிமைகள் பேரவையின் மூன்றாம் திகதிய கூட்டத்தில் பல நாடுகளின் பிரதிநிதிகளும் வலியுறுத்தியிருந்தனர்.

தமது நாட்டில் இனங்களுக்கு இடையே சமாதானத்தைக் கொண்டு வருவது குறித்து இலங்கைப் பிரதிநிதிகள் தேனொழுகப் பேசுகிறார்கள். ஆனால் வடக்கு, கிழக்கு மக்களின் பிரதிநிதிகளோடு பேசும்போது, போரின் போது எதுவுமே நடக்கவில்லை என்ற தொனியில் பேசுகிறார்கள் -

பொதுமக்களைத் தாக்கிய இராணுவம், தமிழ்ப் பகுதிகளில் 'ஆட்சி செய்யும்' போது, போர்க்குற்றங்கள் குறித்துப் பொறுப்புக்கூறும் பக்குவத்தை அந்த நாட்டிடம் எவ்வாறு எதிர்பார்ப்பது? அதனாலேயே சர்வதேச மட்ட விசாரணையைக் கோருகின்றோம் - என்கிறார் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளில் ஒருவரான பீற்றர் ஸ்பிலின்ரர்.

எனினும், இலங்கைத் தரப்பு, சனல் 4 இன் ஒரு மணித்தியால வீடியோக் காட்சிகள் பொய்யானவை என்ற தமது தரப்பை நிலைநிறுத்த முயன்றன என்றும் -

உள்நாட்டில் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு ஊடான ஒரு விசாரணையை நடத்துவது குறித்தே வலுவாக வாதிட்டனர் என்றும் அறியப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், சர்வதேசப் பிரதிநிதிகள் அதனை ஜீரணிக்கவில்லை என்று அவதானிகள் மற்றும் விமர்சகர்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், ஏன் இந்தியா உள்ளிட்ட பல தேசங்கள், வெளிநாட்டுச் சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய நம்பகத்தன்மை கொண்ட விசாரணைக் குழுவை இலங்கை அரசு நியமித்தால் மட்டுமே உண்மைகள் தெரியவரும் - ஊர்ஜிதப்படுத்தப்படும் - என்று கருதுகின்றன; வற்புறுத்துகின்றன.

இலங்கை அரசு நியமித்திருக்கும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்குப் போர்க்காலச் சம்பவங்களை விசாரிப்பதற்கான ஆணை (Mandate) வழங்கப்படவில்லை. அவ்வாறிருக்க, மனித உரிமைகளில் புலமையாளர்களான சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளோ, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் பிரதிநிதிகளோ, இலங்கையின் தற்போதைய நல்லிணக்க ஆணைக்குழுவை, ஒரு விசாரணைப் பொறிமுறையாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இதனை இலங்கை அரசும், அதன் நிபுணர்களும் உணரத் தலைப்படாதிருப்பது ஏன்? அதற் கான உட்சூட்சுமம் எது என்பதைத் தர்க்க ரீதியாக எவரும் புரிந்து கொண்டுவிடுவர்.

வன்னிப் போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களைச் சனல் - 4 தொலைக்காட்சியின் வீடியோப் படங்கள் அப்பட்டமாக எடுத்துக் காட்டுவதால், அவற்றைப் பொய்யானவை என்று எளிதில் தட்டிக் கழித்துவிட முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதனைக் கறுப்புத் திரை போட்டு மறைக்க முடியாத இக்கட்டு இலங்கை அரசுக்கு இப்போது உருவாகி உள்ளது.

புதிய ஆதாரங்கள் கிடைத்த பின்னரும் இலங்கை அரசின் நிலைப்பாட்டைத் தூக்கிப் பிடிக்கக் கூடாது. அந்த ஆதாரங்களின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச சமூகமும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் -

அவ்வாறு செய்யாதிருப்பின் இனிவரும் காலங்களில் ஏனைய நாடுகளும் மனிதப் படுகொலைகளிலும் கொடூரமான, அநாகரிகமான மனிதச் சித்திரவதைகளிலும் ஈடுபடுத்துவதற்குத் தூண்டுதலும் ஆதரவும் அளிப்பதாக முடியும். மனித உரிமை நிபுணர்களும் ஆர்வலர்களும் இது குறித்து எச்சரித்திருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தத்தில், ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள இலங்கை மீதான குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு பதில் அளிக்க வேண்டும் என்ற அழுத்தம் பலமுறும் என்று எதிர்பார்க்கலாம்.

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வு இந்த மாதம் பதினேழாம் திகதி முடிவுற்றாலும், இலங்கை மீதான அழுத்தம் தொய்ந்துவிடாது என்றே எதிர்பார்க்கலாம். சர்வதேச அரசியல் புலத்தில் நிலவும் கன்னைப்பிரிவுகளைப் பயன்படுத்தி, வெளிநாட்டு நிபுணர்களை உள்ளடக்கிய விசாரணை ஆணைக்குழுவை நியமிப்பதில் இலங்கை அரசு ஆர்வம் காட்டாவிடில்-

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவது குறித்து பான்-கீ-மூனுடன் ஜனாதிபதி செய்து கொண்ட இணக்கப்பாடு என்ற அம்பை, சர்வதேசம் இலங்கைக்கு எதிராக எந்த வேளையும் எய்துவதற்கு வாய்ப்புண்டு என்பதனை மறந்துவிடுவதற்கில்லை.

# ஓய்வூதியத் திட்டத்தின் நன்மைகள் குறித்து மக்களுக்கு விரிவாக அரசு விளக்கும்

**நேற்று 05-06-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.**

தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் தொடர்பான ஆர்ப்பாட்டங்கள் இவ்வளவு மோசமாக மாறும் என்று அரசு எதிர்பார்க்கவில்லை. சுதந்திர வர்த்தக வலயத்தைச் சுற்றியே பெரும்பாலும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தப்பகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் கடந்தவாரம் முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இங்கு அதிகமானவர்களும் பெண்களே ஊழியர்களாக இருந்துவருகின்றனர்.

ஆர்ப்பாட்டங்கள் அங்கு பெரும் வன்செயலாக மாறிவிட்டது. இந்த ஆர்ப்பாட்டங்களின் போது நீர்கொழும்பு - கொழும்பு வீதிச்சந்தியில் நிறுத்தப்பட்டிருந்த ஜனாதிபதியின் பெரிய உருவம் (கட்அவுட்) கிழித்து கீழே இறக்கிவிடப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குவருபவர்கள் முதன் முதலில் காணும் காட்சிப்பொருளாக ஜனாதிபதியின் இந்த உருவம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சி உயர் மட்டத்தில் உள்ளவர்களின் கோபத்தைக் கிளறிவிட்டது. இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து கைது செய்வதற்கு பொலிஸ் படைகள் அனுப்பிவைக்கப்பட்டன. அன்றிரவு சந்தேகப்பேர்வழிகள் என்று கருதப்பட்ட பலரது வீடுகளின் கதவுகள் தட்டப்பட்டன. அவ்வாறு அந்த பயங்கர இரவு நேரத்தில் சுமார் 55 பேர் சுற்றி வளைத்து விசாரணைக்காக கொண்டுவரப்பட்டனர். விசாரணையின் பின் விடியற்காலையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் இது நிலைமையைத்தணியச் செய்வதற்கு பதிலாக மோசமாக்கவே செய்தது.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பெண் ஊழியர்களும் பெண் தலைவர்களும் முன்னிலையில் நின்று போராட்டங்ளை நடத்தியுள்ளார்கள். தங்களின் சிறிய சேமிப்புக்களை அரசு அபகரிக்க முற்படுவதாக அவர்கள் கருதியிருந்தார்கள்.

ஊழியர்கள் ஒரு குறித்த வயதை எட்டியதும் தமது சேமலாப நிதியையும் ஊழியர் சேவைக்கால நிதியையும் பெறலாம் என்ற நம்பிக்கையில் இருந்த இவர்கள் ஏமாற்றப்பட்டு விடுவார்களோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. சேமலாப நிதிபோன்ற நிலையான ஒருதிட்டத்தை மாற்றி அமைத்து ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அவர்கள் எதிர்க்கிறார்கள்.

நிதியமைச்சினால் உருவாக்கப்பட்டுள்ள இந்தத்திட்டம் செயற்படுத்துவதற்காக தொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் சாதக நிலைமைபற்றி தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றில் கருத்துத் தெரிவித்த தொழில் அமைச்சர் காமினி லொக்குகே சங்கடப்படுபவராகத் தெரிந்தார். அவர் கூறிய காரணங்கள் ஊழியர்களை திருப்திசெய்வனவாக இருக்கவில்லை.

ஏற்கனவே சேமலாப நிதியில் [illegible] நிதியினை தனியார் துறைகளில் தனியார் வங்கிகள் போன்றவற்றில் முதலீடுசெய்ய அரசு முய்ன்றிருப்பதாக தகவல்கள் வெளியாகி ஊழியர்களின் சந்தேகங்களை அதிகரித்துள்ளன.

இந்தச் சூழ் நிலையில் தான் தனியார்துறை ஊழியர் ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக ஆலோசிப்பதற்காக குறிப்பாக சுதந்திர வர்த்தக ஊழியர்கள் விடயம் பற்றி ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களின் கூட்டமொன்றை அலரி மாளிகையில் கூட்டியிருந்தார்.

சட்ட முன்வரைவை தற்போதைய அமைப்பில் ஊழியர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பாவிடில் அதனை தாம் மீளாய்வு செய்ய ஆயத்தமாக இருப்பதாக ஜனாதிபதி கூட்டத்தில் கூறினார். ஏற்கனவே இந்தச் சட்ட மூலத்தின் சில பிரிவுகளை ஆட்சேபித்து இலங்கை வங்கி ஊழியர் சங்கம் உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருக்கிறது. அதன் ஆலோசனைகள் சிலவற்றை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வதாக அரசும் அறிவித்துள்ளது. சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் போது எதிர்க்கட்சியினரின் கருத்துக்களையும் இணைத்துக்கொள்ளமுடியும் என்று அமைச்சர் லொக்குகே கோடிகாட்டியுள்ளார்.

தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தின் முழு விவரங்களையும் அறிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள், அவர்கள் ஓய்வு பெறும்போது தமது சேமிப்புக்களை அரசு அபகரித்துக் கொள்ளத் திட்டமிடுகிறது என்று அஞ்சுகிறார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறினார்கள்.

அரசு தரப்பில் தகவல்கள் முழுமையாக வெளியிடப்படாமையும், எதிர்க்கட்சித் தரப்பில் தவறான பிரசாரங்களும் தொழிலாளர் போராட்டங்களுக்கு குறிப்பாக சுதந்திர வர்த்தக வலயத்தில் பல மில்லியன் வருமானத்தைத் தேடித் தரும் ஆடை தொழில்துறை ஊழியர்களின் அமைதியின்மைக்கும் வழிகோலியது என்றும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். வரும் நாள்களில் மேலும் ஆலோசனைகளை நடத்த விருப்பதாக ஜனாதிபதி அறிவித்தார் - அத்துடன் முடிவு எதுவும் இல்லாமலே கூட்டம் கலைந்தது.

அடுத்த நாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அவசர கூட்டமொன்றுக்காக ஜனாதிபதியால் அழைக்கப்பட்டது. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தைச் சுற்றிய பிரதேசத்தில் சுதந்திர வர்த்தக வலய மற்றும் ஏற்றுமதி தனியார் வர்த்தக வலய ஊழியர்களின் போராட்டங்கள் புதிதாக மீண்டும் வலுவடைந்ததையடுத்து இந்தக் கூட்டம் அழைக்கப்பட்டிருந்தது. இந்தப் போராட்டங்கள் மோசமாக தீவிர மடைந்ததால் 250 தொழிலாளர்களும் பல பொலிஸாரும் மோதல்களில் காயமுற்றனர். பலர் நீர் கொழும்பு வைத்திய சாலைக்குச் சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்டனர்.

பொலிஸார் உண்மையான தோட்டாக்களால் சுட்டதனால் பரபரப்பு அதிகரித்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தை ஆக்கிரமித்து தமது ஆயுதங்களைக் கைப்பற்ற முயற்சிசெய்ததால் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்ததாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் கூறினார். இந்தக் கருத்து ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவ்வாறு பொலிஸார் உண்மையான தோட்டாக்களை வெடிக்க செய்தமையே அரசு எதிர்கொள்ள நேர்ந்த ஏனைய சிக்கல்களுக்கு காரணமாகின. ரொய்ட் சர்வதேச தனியார் நிறுவனத்தில் ஊழியராகச் சேர்ந்து நான்கே மாதங்களான 22 வயதுடைய தொழிலாளர் சுடப்பட்டு உயிராபத்து ஏற்படும் வகையில் காயமடைந்தார். ஆனால் அதற்கு முன்பே சுதந்திர வர்த்தக வலய ஊழியர் களுக்கு இந்தத் திட்டத்திலிருந்து விலக்களிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தார். இந்தத் தகவலை போராட்டக்காரர்களிடம் தெரிவிக்க பொலிஸார் முயற்சி எடுத்திருந்த போதும் அவர்கள் அதற்கு செவிசாய்க்கும் நிலையில் இருக்கவில்லை. பொலிஸ் துப் பாக்கிச் சூடு அவர்களை ஆத்திரம் கொள்ளச் செய்திருந்தது. அடுத்த நாள் முழு வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டு அந்தப் பிரதேசமே கொந்தளிப்புக்குள்ளானது.

காயமடைந்திருந்த ரோஷான் சானக்க இந்த குழப்பங்களுக்கிடையில் றாகம ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

மத்தியக்குழு கூட்டத்தில்

## இப்போதைக்கு திட்டம் கைவிடப்பட்டாலும் பின்னர் வேறுவழியில் கொண்டுவரப்படும்

ஜனாதிபதி கருத்து வெளியிடுகையில் தனியார்துறை ஊழியர் ஓய்வூதியத்திட்டம் சாதகமான ஒரு திட்டமாக இருந்தபோதிலும் முறையான விளக்க பிரசார வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வில்லையென்று குறிப்பிட்டார். சட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன் அவ்வாறன ஒரு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றார் ஜனாதிபதி.

சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவ்வாறு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை முன்னெடுக்காமல்

**தொகுப்பு: கோகுலன்**

போனமைக்காக ஜனாதிபதி கண்டித்தார். இந்தத்திட்டம் பற்றி சில அமைச்சர்கள் ஒன்றுமே அறியாதவர்களாய் இருக்கிறார்கள் என்று அவர் கடிந்து கொண்டார். அரசில் இருக்கும் கூட்டணிக் கட்சியினர் அனைவரும் போராட்டம் நடத்தும் ஊழியர் சங்கங்களுடன் ஆலோசனைகள் கலந்து திட்டத்தின் நன்மை தீமைகளை விளங்கிக்கொள்ளவேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மத்தியக் குழு கூட்டத்தில் கருத்து வெளியிட்ட சுற்றுச் சூழல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, இந்தத் திட்டத்துக்கு பாதகமானதாக பெரிதும் பிரசாரங்கள் இடம்பெற்றுவிட்டதால் அதனை அப்படியே

(31 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
06 ஜூன் 2011 திங்கட்கிழமை

# குடிதண்ணீரில் கிருமித் தொற்றுகள்; எவரும்பரிசோதனை மேற்கொள்ளலாம்

## ஆனால் மக்கள் ஆர்வம் காட்டாத நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.குடாநாட்டில் குடிதண்ணீரில் தொற்றுகள் இருப்பது தொடர்பாகப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் இந்த விடயத்தில் மக்கள் அக்கறை காட்டாது உள்ளனர்.

யாழ்.மாவட்டத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய ஆய்வுகூட இரசாயனவியலாளர் எஸ். சரவணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.பிராந்திய ஆய்வுகூடத்தில் குடிதண்ணீர் மாதிரிகளுக்கான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடிதண்ணீரில் உள்ள 21 விடயங்கள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

நிறம், கலங்கல் தன்மை, கார அமில பெறுமானம், மின் கடத்து திறன், குளோரைட், காரயியல்பு, நைதிரேற், நைதிரைற், முழுவன்மையின் அளவு, முழு இரும்பு அளவு, கரைந்துள்ள திண்மத்தின் அளவு, சல்பேற், பொஸ்பேற், குளோரின் அளவு, மலக் கிருமித் தொற்று ஆகியவை தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் ஆனால் எவரும் இதில் அக்கறை காட்டுவதில்லை.

இந்த நிலையில் குடாநாட்டு மக்கள் தமது குடிதண்ணீர் விடயத்தில் அக்கறைகாட்டாது உள்ளமை கவலையளிக்கின்றது.

யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக உள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய ஆய்வு கூடத்துக்கு நேரில் வருகை தந்து இந்தப் பரிசோதனைகளுக்கான அறிவுரைகளைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும்- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வலி.வடக்கில் அபிவிருத்திப் பணிகள்

வலி. வடக்கில் இரண்டாம் கட்டமாக மீளக்குடியமர்வு மக்கள் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

கடந்த மே மாதம் 9ஆம் திகதி வலி.வடக்கில் 13 கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். இந்தப் பிரதேசங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக வைத்தியசாலை மற்றும் பிரதேச செயலகம் என்பன புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன. இதற்காகப் பொருளாதார அபி விருத்தி அமைச்சினால் வடக் கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 28.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வித்தகபுரம் சுகாதார நிலையம் மீள் புனர் நிர்மாணம் செய்வதற்கு 5.5 மில்லியன் ரூபா நிதிஒதுக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புனரமைப்புக்கு 15 மில்லியன் ரூபாவும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைப் புனரமைப்பதற்கு 8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிதி ஒதுக்கீடுகளுக்கான புனரமைப்பு வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்புட்டு இடம்பெற்று வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

# குடாநாட்டில் கடந்த ஐந்து மாதங்களில் 60 இற்கும் மேற்பட்டோர் தற்கொலை

## யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.குடாநாட்டின் இந்த ஆண்டில் கடந்த ஐந்து மாதங்களில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


அத்துடன் நெருப்பில் எரிந்து 21 பேர் மரணமாகியுள்ளனர். இதில் ஜனவரி மாதம் 2 பேரும் பெப்ரவரி மாதம் 4 பேரும், மார்ச் மாதம் 4 பேரும் ஏப்ரல் மாதம் 6 பேரும் மே மாதம் 5 பேரும் மரணமாகியுள்ளனர்.

தூக்கில் தொங்கி 18 பேர் மரணமாகியுள்ளனர். இதில் ஜனவரி மாதம் 5 பேரும், பெப்ரவரி மாதம் 2 பேரும் மார்ச் மாதம் ஒருவரும் ஏப்ரல் மாதம் 6 பேரும் மே மாதம் 4 பேரும் மரணமாகியுள்ளனர்.

நஞ்சருந்தி ஜனவரி மாதம் 2 பேரும் பெப்ரவரி மாதம் 2 பேரும் மார்ச் மாதம் 9 பேரும் ஏப்ரல் மாதம் 2 பேரும் மே மாதம் 8 பேரும் பலியாகியுள்ளனர்.

மேலும் நீரில் மூழ்கி 35 பேர் இறந்துள்ளனர். இதில் ஜனவரி மாதம் 6 பேரும் பெப்ரவரி மாதம் 9 பேரும் மார்ச் மாதம் 10 பேரும் ஏப்ரல் மாதம் ஒருவரும் மே மாதம் 9 பேரும் இறந்துள்ளனர். (ம-15)

## விழிப்புணர்வு....



சூழல் பாதுகாப்பு: யாழ்.விஞ்ஞான சங்கம் உலக சூழலியல் தினத்தை முன்னிட்டு 'உயிர்ப் பல்வகைமை' என்னும் தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று கண்காட்சி ஒன்றை நடத்தியது. யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை பேராசிரியர் பி.ரவிராஜன் தலைமையில் விஞ்ஞான பீட மாணவர்கள் கண்காட்சியை நடத்தினர். இதில் யாழ்.பல்கலைக்கழக தாவரவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப.செல்வேள், விஞ்ஞான சங்க பிரிவு 'ஏ' செயலாளர் திருமதி அ. சிவரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். கண்காட்சியை மாணவர்கள் பார்வையிடுகின்றனர். (ம-311)

# காரைநகர் பிரதேச செயலக கட்டடத்தின் இரண்டாம் கட்டப் பணிக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் , ஜூன் 6

காரைநகர் பிரதேச செயலகக் கட்டடத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்காகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு 30 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பிரதேச செயலகத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் நடைபெறவுள்ளன.

கடந்த பல மாதங்களுக்கு முன்னர் காரைநகர் பிரதேச செயலகத்துக்கான கட்டடத்தை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நிதி ஒதுக்கீடு இன்மையால் இரண்டாம் கட்டப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்து வரும் ஒன்பது மாத காலப்பகுதிக்குள் கட்டடப் பணியைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வருகை தந்த பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்னவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 6

ஓட்டோவும் கனரக வாகனமும் நேருக்குநேர் மோதியதால் ஓட்டோவில் சென்றவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் முகமாலையில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இந்த விபத்தில் வத்தளையைச் சேர்ந்த வை.ஹேமச்சந்திர (வயது-35) என்பவரே படுகாயமடைந்தார். ஓட்டோவும் சேதத்துக்குள்ளாகியது. (ம-4)

# அடிப்படை வசதிகளின்றி சேந்தான்குளம் மக்கள்

வலி. வடக்கு, ஜூன் 6

கீரிமலை சேந்தான்குளம் பகுதியில் மீளக்குடி யமர்ந்துள்ள மக்கள் அடிப் படை வசதிகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சேந்தான்குளம் பகுதியில் சுமார் 103 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் இந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிதண்ணீர்,மலசல கூட வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள முன் வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ம-86)

# நாவற்குழியில் அத்துமீறி குடியேறியுள்ள சிங்கள மக்கள் சனசமூக நிலையம் அமைப்பு

யாழ்ப்பாணம் , ஜூன் 6

நாவற்குழியில் அத்துமீறி குடியேறியுள்ள சிங்கள மக்கள் தமக்கென சனசமூக நிலையத்தை அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பிலிருந்து வருகை தந்த பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவொன்று அந்தப் பகுதியில் உள்ள சிங்கள மக்களைச் சந்தித்து கலந்துரையாடி இந்தச் சனசமூக நிலையத்தை அமைத்துக் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மக்களின் குடியேற்றம், கல்விச் செயற்பாடுகள் என்று பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த சனசமூக நிலையத்தின் ஊடாக உரிய தரப்பினருக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாகவே இந்தச் சனசமூக நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள கொட்டிலில் இது இயங்கிவருகின்றது.

எதிர்காலத்தில் நிரந்தர கட்டடம் ஒன்றை அமைக்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் சனசமூக நிலையத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.(ம-9)

# தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் மீள்பரிசீலனை

யாழ்ப்பாணம்,ஜூன் 6

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் மீள்பரிசீலனை செய்யப்படுகிறது.

வாக்களிக்கும் திகதி அறிவிக்கப்பட்டதும் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் அதனை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னர் கிடைத்த தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் யாவும் கடந்த 31ஆம் திகதி வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பின் பிரகாரம் ஒப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

இதில் நீக்கப்படுகின்ற வாக்காளர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டு ஏனையவர்களுக்கு தபால் மூல வாக்களிப்புத் திகதி அறிவிக்கப்பட்டதும் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை:

# வடக்கிலிருந்து சென்ற பரீட்சார்த்திகள் கொழும்புக்கு வெளியே திண்டாட்டம்

### தூர இடங்களில் நிலையங்கள் இருந்ததால் அவதி

நாவற்குழி, ஜூன் 6

இலங்கை கல்வி நிர்வாக சேவையினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெற்கில் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு வடக்கில் இருந்து சென்ற பரீட்சார்த்திகள் பெரும் நெருக்கடிகள், சிரமங்களைச் சந்தித்துள்ளனர். கொழும்புக்கு வெளியே தூர இடங்களிலும் பரீட்சை நிலையங்கள் இருந்ததால் சிங்கள மொழி தெரியாத பலர் திண்டாட வேண்டி ஏற்பட்டது. குறிப்பிட்ட இடத்தைத் தேடிப் பிடிப்பதிலும் அவர்கள் அவஸ்தைப்பட்டார்கள் என்று கூறினர்.

கொழும்புக்கு வெளியே மாலபே, கடவத்த, முல்லேரியா மற்றும் களுத்துறை போன்ற இடங்களில் கூட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டதால் அதிகாலை வேளையிலேயே நீண்ட தூரம் பயணம் செய்து களைப்படைந்ததாகவும் சில பாடசாலைகளின் பெயர்களைக் காட்டும் அறிவித்தல் பலகைகள் தனிச் சிங்கள மொழியில் இருந்ததால் தமிழ்ப் பரீட்சார்த்திகள் அவற்றை இனம் காண்பதிலும் மிகவும் சிரமப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

பரீட்சை மண்டபங்களில் மேற்பார்வையாளர்களாகச் சிங்களம் மட்டும் தெரிந்த ஆசிரியர்கள், அதிகாரிகள் செயற்பட்டதால் தனிச் சிங்கள மொழியிலேயே பரீட்சை தொடர்பான அறிவுறுத்தலை வழங்கியதால் தமிழ் மட்டும் தெரிந்த பல பரீட்சார்த்திகள் மிகவும் குழப்பமடைந்தனர். காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை பரீட்சை நடைபெற்றபோது மதிய உணவு இடைவேளை ஒரு மணித்தியாலம் இருந்தது. ஆயினும் அருகில் நல்ல சாப்பாட்டுக் கடைகள் இல்லாததால் சிரமத்துடன் 3 ஆவது பாடப் பரீட்சைக்குப் பல பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு பஸ்ஸில் ஆசிரியர், அதிபர், கல்வியாளர் புறப்பட்டதால் மிகுந்த பயண நெருக்கடியையும் எதிர்நோக்கியதாகத் தெரிவித்தனர்.

தற்போதைய அரசு கடவுச்சீட்டு வழங்குதல், மத்திய வங்கியின் சேவைகள் எனப் பலவற்றையும் பிராந்திய அலுவலகங்கள் ஊடாகச் செய்து வருகின்றது. அதுபோல அகில இலங்கைச் சேவைப் பரீட்சைகளையும் மாகாண மட்டத்தில் நடத்த வேண்டு மென பரீட்சார்த்திகள் கோருகின்றனர். (ஒ-எ-121)

## இது ஓர் ஆரம்பம்....




அபிவிருத்தி: காரைநகர் அபிவிருத்திச் சபையால் காரைநகர் புதுவீதிச் சந்தியில் அமைக்கப்படவுள்ள நூலக கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்து வைக்கின்றனர். (ம-250)

# சிங்கள மகா வித்தியாலயத்தை இயங்க வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6

நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த மக்கள் விடுத்துள்ள கோரிக்கையின் விவரம் வருமாறு:-

நாவற்குழியில் குடியேறி ஒரு வருடத்தை எட்டியுள்ள நிலையிலும் இதுவரை தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இங்கு குடியேறியுள்ள சிங்கள மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய பாடசாலை இல்லாததால் அவர்கள் முன்னர் கற்ற அனுராதபுரம், கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்கள மகா வித்தியாலயத்தை மீளவும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# யாழ்.நகர் சென்ற மாணவன் நேற்று வரை திரும்பவில்லை

யாழ்ப்பாணம்,ஜூன் 6

கடந்த மாதம் 30 ஆம் திகதி வேலணையிலுள்ள தமது வீட்டிலிருந்து யாழ்.நகர் நோக்கிச் சென்ற மாணவன் நேற்று வரை வீடு திரும்பவில்லை. வேலணை மேற்கு அப்பிகை நகரைச் சேர்ந்த சுந்தரலிங்கம் அனுஷ்டன் (வயது - 16) என்ற மாணவனே இதுவரை வீடு திரும்பவில்லை.

இது குறித்து மாணவனின் தந்தை நேற்று முன்தினம் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். வேலணை நடராஜா மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் இந்த மாணவன் கல்வி கற்று வந்துள்ளார். இவர் கடந்த மாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைக்குச் செல்லாமல் தாம் யாழ். நகருக்கு செல்வதாகக் கூறிச் சென்றிருந்தார். (ஒ-14)

# சுற்றுச் சூழலை சீர்குலைப்பவர்கள் மீது மானிப்பாய் பொலிஸார் சட்ட நடவடிக்கை

சண்டிலிப்பாய், ஜூன் 6

சுற்றுச்சூழல் பாதுகாப்பை சீர்குலைப்பவர்கள் மீதும் போக்குவரத்து விதிமுறைகளை மீறுபவர்கள் மீதும் சட்ட நடவடிக்கைகளை மானிப்பாய் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

சிலர் பொறுப்பற்ற வகையில் வீதிகளில் குப்பைகளைக் குவித்து வருபவர்கள் மீதும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மரங்கள், கல், மண் போன்ற பொருள்களைக் குவிப்பவர்கள் மீதும் சட்ட நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பொறுப்பற்ற செயலில் ஈடுபட்டவர்கள் சிலர் பொலிஸார் வீசிய வலையில் சிக்கி நீதிமன்றில் நிறுத்தப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையைத் தொடர்ந்து குடாநாட்டில் டெங்குநோய், மலேரியா போன்ற பயங்கர நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள போதும் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் மானிப்பாய் பொலிஸார் இந்த நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-115)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் மலசலகூடம்; சங்கானைச் சந்தையில் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

சங்கானை மரக்கறிச் சந்தை வளாகத்தினுள் அமைந்துள்ள பொது மலசலகூடம் சுகாதாரச் சீர்கேட்டுடன் உள்ளமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

சந்தை வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள இந்த மலசலகூடம் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளதால் சந்தையில் பணிபுரியும் வியாபாரிகள் உட்பட பொதுமக்கள் பலர் இந்த மலசல கூடத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இருந்தும் மலசல கூடத்தைப் பயன்படுத்துவோர் தண்ணீர்ப்பாவனையில்லாமல் சுகாதாரச் சீர்கேடான பாவனைக்கு உட்படுத்தி வருகின்றனர். அத்துடன் மலசலகூடத்தின் சுற்றுப்புறத்தையும் அசுத்தமான முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் மூக்கைப் பொத்திய வண்ணமே வியாபாரம் செய்ய வேண்டியுள்ளது.

அத்துடன் சந்தையின் ஓடக்கரை வீதியால் செல்வோரும் துர்நாற்றமான காற்றைச் சுவாசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதிகளவான மக்கள் இந்தப் பொதுச்சந்தையைத்தான் அத்தியாவசியப் பொருள்கள், மரக்கறிகள் வாங்குவதற்குப் பயன்படுத்துகின்றார்.

இந்த நிலையில் சந்தை சுகாதார சீர்கேடான சூழலில் இயங்குவதால் வியாபாரம் நடைபெறுவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக சங்கானை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பாதிப்படைந்துள்ள மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.(ம-313)

## தே.அ.அட்டைக்கு விண்ணப்பித்த படிவத்தை

# இரண்டு வருடங்கள் அலுவலகத்திலேயே பாதுகாப்பாக வைத்திருந்த கிராமசேவகர்

யாழ்ப்பாணம், ஜூன் 6

தேசிய அடையாள அட்டையைப் புதிதாக எடுப்பதற்கு விண்ணப்பித்த ஒருவரின் விண்ணப்பப்படிவத்தைக் கிராம சேவையாளர் ஒருவர் இரு வருடங்கள் தனது அலுவலகத்தில் வைத்திருந்துவிட்டு பின்னர் பிரதேச செயலகத்திடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது: புலோலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சேதமடைந்த தனது தேசிய அடையாள அட்டையைப் புதிதாக எடுப்பதற்காக சேதமடைந்த தனது தேசிய அடையாள அட்டையையும் விண்ணப்பத்துடன் இணைத்து மேற்படி கிராம சேவையாளரிடம் 2009 ஆம் ஆண்டில் ஒப்படைத்ததாகவும் அதனைப் பெற்றுக் கொண்ட கிராம சேவையாளர் தனது அலுவலகத்திலே இரண்டு வருடங்கள் வைத்திருந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தேசிய அடையாள அட்டை வரும் வரும் எனக் காத்திருந்த விண்ணப்பதாரர் அது வராததன் காரணமாகக் கடந்த மாதம் கொழும்பிலுள்ள ஆள்பதிவுத் திணைக்களத்துக்குச் சென்று கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவ இலக்கத்தைக் காட்டி அடையாள அட்டை சம்பந்தமாகக் கேட்டபோது அங்கிருந்த உத்தியோகத்தர்கள் விண்ணப்ப இலக்கத்தை கணினியில் பார்வையிட்டு அந்த இலக்கத்துக்குரிய படிவம் இன்னும் வரவில்லை என்று கூறியுள்ளனர். இது சம்பந்தமாக யாழ். செயலகத்திலுள்ள ஆள்பதிவு திணைக்கள அலுவலகத்திலும் கொழும்பில் இருந்து கேட்ட போது அவர்களும் இந்த இலக்கத்துக்கான படிவம் தங்களிடமும் வரவில்லை என்று தொலைபேசி மூலம் கூறியுள்ளனர்.

உடனடியாக கொழும்பிலிருந்து பருத்தித்துறை பிரதேச செயலகம் வந்த விண்ணப்பதாரி அங்கு இது பற்றி விசாரித்த வேளை கிராம சேவையாளர் இரண்டு நாள்களுக்கு முன்னரேயே மேற்படி விண்ணப்பத்தை அங்கு கையளித்த விடயம் தெரியவந்தது.

இது சம்பந்தமாகப் பிரதேச செயலகம் கிராம சேவையாளரிடம் விளக்கம் கேட்ட வேளை விண்ணப்பதாரர் சில ஆவணங்களைத் தராததன் காரணத்தினாலேயே அனுப்ப முடியாமல் வைத்திருந்ததாகக் கூறியுள்ளார்.

ஆனால் விண்ணப்பதாரியோ நான் சகல ஆவணங்களையும் விண்ணப்பித்த அன்றே கையளித்ததாகவும் கையளித்த பின்னரே கிராம சேவையாளர் தனக்கு தனது படம் ஒட்டிய விண்ணப்பப்படிவ இலக்கம் கொண்ட சான்றிதழ் ஒன்றைத் தந்ததாகவும் [illegible]. (எ-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் கறிவேப்பிலையாகத் தமிழ் அமைச்சர் காரியம் முடிந்ததும் தூக்கி எறியப்படலாம்!

## சரவணபவன் எம்.பி. உரை



யாழ்ப்பாணம், ஜூன் 6

இலங்கை அரசாங்கம் தனது தேவை முடிந்த வுடன் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி எறிந்து விடும். தனது அமைச் சரவையில் ஒரு தமிழன் இருக்க வேண்டும் என்பதற்காகவே டக்ளஸைத் தமது அமைச்சரவையில் அரசு வைத்துக் கொண்டுள்ளது. உண்மையைச் சொல்லப் போனால் டக்ளஸைக் கறிவேப்பிலையைப் போன்றே ஜனாதிபதியும், அரசத் தரப்பினரும் பயன்படுத்துகின்றனர் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கூறினார்.

வலி. வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் குறைநிறைகளைக் கேட்டறியும் வகையில் வலி-வடக்கு தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியில் மக்கள் சந்திப்பு ஒன்று நேற்று நடைபெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மக்களுக்குச் சேவை புரிய வேண்டிய அரச ஊழியர்கள் இங்கு அமைச்சரின் அட்டவணைப்படியே செயற்படுகின்றனர். 25 வருடங்களின் பின் வலி. வடக்கில் மீள் குடிமர்த்தப்பட்டுள்ள மக்கள் பல் வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர். அடிப்படைத் தேவைகள் எதுவும் இல்லாத நிலையிலேயே மக்கள் குடிமர்த்தப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் இனப்பற்றுடன் உதவ வேண்டியது கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் என்போரின் கடமை. இன்று அவர்கள் இங்கு சமுகமளித்திருந்தால் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன, மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் என்ன, இவ்விடயங்களில் தாம் எப்படி உதவ முடியும் என்பதை மக்கள் முன்னிலையிலேயே பரிசீலனை செய்யக் கூடியதாக அமைந்திருக்கும்.

ஆனால், அரச அதிகாரிகள் அதி முக்கியமான இந்தச் சந்திப்பை உதறித் தள்ளி- உதாசீனப்படுத்திவிட்டு நாளை கிளிநொச்சிக்கு வருகை தரும் ஜனாதிபதியைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் இருந்து ஆள்களைத் திரட்டிக்கொண்டு போவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யும் கூட்டத்துக்கும் போய்விட்டார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இங்கு மக்கள் படும் வேதனை யைத் துடைப்பதை விட அமைச்சர்களுக்கு வால் பிடிப்பதும், கொடி பிடிப்பதும் அரச அதிகாரிகளின் முக்கிய கடமையாகிவிட்டது.

அரசு வடக்கில் தனது தேவைக்காகவும், தமிழர்களைச் சரிசமமாக நடத்துவதாக வெளி உலகுக்குக் காட்டுவதற்காகவுமே தனது அமைச்சரவையில் வைத்துள்ளது. அரசின் தேவை முடிந்ததும் டக்ளஸ் தூக்கி எறியப்பட்டு விடுவார் என்பதை இந்த அதிகாரிகள் கருத்தில் கொள்ள வேண்டும். பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த அதிகாரிகள் தமது சொந்த இனத்தின்- மக்களின் தேவைகளை உதாசீனம் செய்யக் கூடாது.

இந்த அதிகாரிகளின் இடத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் இருந்தால் எமது தேவைகளை ஒரளவுக்கேனும் பெற்றுக் கொள்ளலாமே என்று தமிழ் மக்கள் எண்ணும் நிலைமை நம்மவர்கள் மத்தியில் ஏற்பட்டுவிடும்.

வடக்கில் அரச நியமனங்கள் வழங்கப்படும் போது விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என ஆளுநர் கூறுகின்றார். அப்படியானால் தென் பகுதியிலும் இந்த முறை கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு ஆளுநர் அழுத்தம் கொடுப்பாரா?

வலி. வடக்கின் மண்ணின் மைந்தன் எனப் பெயர் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, உயர் நீதிமன்றத்தில் வாதாடிப் பெற்ற பூமி இது. ஆனால் நீதிமன்ற உத்தரவை மூடி மறைத்து தாமே மக்களை மீள்குடியேற்றுவதாக நம் அமைச்சர் தம்பட்டம்அடித்துக் கொள்கிறார். இதனை இம் மக்கள் நன்கு அறிவர் -என்றும் சரவணபவன் கூறினார். (02)

# 10 வருடங்கள் சிறையில் வாடிவரும் அர்ச்சகருக்கு நேர்ந்த அவமானம்

கொழும்பு ஜூன் 6

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் கடந்த பத்து வருடங்களுக்கும் அதிகமாக விளக்கமறியலில் கைதியாக இருந்து வருகிறார் அர்ச்சகரான சந்திராஜயர் இரகுபதிசர்மா. இவரை நீதிமன்றுக்கு விசாரணைக்காக கொண்டு சென்றிருந்தபோது இராணுவச் சிப்பாய் ஒருவரால் ஆடைகள் அனைத்தும் களையப்பட்டு அவமானப் படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

இது குறித்து அவரைச் சந்தித்த காணாமற்போனோர் மற்றும் அரசியல்வாதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் செயலாளரான சுந்தரம் மகேந்திரன் தகவல் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொலை முயற்சி சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட அர்ச் சகரும் மன நோயாளியான அவரது மனைவி வசந்தியும் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மகேந்திரன் குறிப்பிட்டுள்ளார். பெற்றோர் கைது செய்யப்பட்டு பல வருடங்கள்தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவ ரது இரு பிள்ளைக ளும் அநாதை இல் லம் ஒன்றில் சிறு வயது முதல் தங்கி இருக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஒ)

# ஆங்கில தின போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 6

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் ஆங்கில தினப் போட்டிகள் நாளை மறு தினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வாய் மொழி மூலமான தனி நிகழ்வுகள் முதலில் இடம் பெறும் என்று யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன் அறிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி இடம்பெறவிருந்த போட்டிகள் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (ம-313)

## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 128
திகதி - 04.06.2011

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: L | அதிர்ஷ்ட இலக்கம்: 02 | வெற்றி இலக்கம்: 3 7 6 9 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L 02 3 7 6 9 7 | ரூ. 18,445,971.00 | - |
| 1 பரிசு | 02 3 7 6 9 7 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 7 6 9 7 | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 7 6 9 7 | ரூ. 10,000.00 | 31 |
| 4 பரிசு | 6 9 7 | ரூ. 1,000.00 | 313 |
| 5 பரிசு | 9 7 | ரூ. 50.00 | 2987 |
| 6 பரிசு | 7 | ரூ. 20.00 | 28961 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 3 7 6 9 | ரூ. 1,000.00 | 33 |
| 8 பரிசு | 3 7 6 | ரூ. 100.00 | 303 |
| 9 பரிசு | 3 7 | ரூ. 50.00 | 3022 |
| 10 பரிசு | L | ரூ. 20.00 | 11863 |
| 11 பரிசு | L 02 | ரூ. 100.00 | 1411 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,344,330.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்கு கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

தேசிய லொத்தர் சபை
24/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433641
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.18,864,004.00

ASIAN
COMPUTER EDUCATION
WIN 60 %
ஸ்கொலர்ஷிப்



Exam on
June 18 சனி
June 19 ஞாயிறு
100% Practical Classes

- டிஜிட்டல் ப்ரீப்ரஸ்
- ஓடியோ, வீடியோ எடிட்டிங்
- வெப் அனிமேஷன்
- கிராபிக்ஸ் டிசைன்
- 2D & 3D அனிமேஷன்
- விசுவல் எஃ(f)பக்ட்
- மாயா அனிமேஷன்
- கார்டூன் அனிமேஷன்
- இணைய வடிவமைப்பு
- மாஸ்டர் டிப்ளோமா

இலவச அனுமதிகளை எமது நிலையங்களில் பெற்றிடுங்கள்!

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-3734088
1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267

Midea Electro Mart
சாவகச்சேரியிலும் விசேட விலைக்கழிவில்
Branch: No.4, New Market, Chavakachcheri.
Tel: 0212270268, Fax: 0212270129.
Authorized Dealer for Abans Ltd.
No:1-I, 1-H, Stanley Road, Jaffna, SriLanka.
Tel: 021-222 4566, Fax: 021 222 1646,
E-mail: midea21@gmail.com
Midea PC Show Room
www.mideamart.com

| COMPUTER | INTEL DUAI CORE | INTEL DUAI CORE | INTEL CORE i3 | INTEL CORE i5 | TOSHIBA MINI |
|---|---|---|---|---|---|
| Processor | Intel Dual core 3.2GHZ | Intel Dual core 3.2GHZ | IntelCore i3 3.06Ghz | IntelCore i5 3.20Ghz | Atom Intel 1.6Ghz |
| Mother board | Intel Chipset G41 -D3B | Intel Chipset G41 -D3B | Intel DH55PJ | Intel DH55PJ | Dos |
| Memory | 1GB DDR-III, 800MHZ | 2GB DDR-III, 800MHZ | 2GBDDRIII | 2GBDDRIII | 1GB |
| Hart disk | 250GB SATA-7200RPM | 500 GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM | H.D250GB |
| Disk drive | LG DVD Writer | LG DVD Writer | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte | 128MB |
| Casing | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte | LG DVD Writer | LG DVD Writer | LCD10.1" |
| Moniter | DELL LCD 18.5" | DELL LCD 18.5" | DELL LCD 18.5" | DELL LCD 18.5" | WIFI Blue Tooth |
| Key board | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 | webCamWith Mic |
| Mouse | I-NEXOptical USB Ps\2 | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 | Price:43,900/= |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | |
| Price | price: 38,500/= | price: 39,900/= | price: 49,900/= | price: 60,900/= | |



Terms & Contdition: (For PC) Warranty-3Years Manufacturer's warranty, 1 Year Service Warranty Quotation Valid for 7 Days

| HP mini | ACER 4738Z Laptop | HP pavilion dv6t 3200 | HP 620 | HP 625 | HP probook 4520s |
|---|---|---|---|---|---|
| Atom Intel 1.6Ghz | Intel pentium p6200 | Intel core i3 | Intel Dual Core2.2 GHZ | AMD 2.2GHZ | Intel core i3 2.5GHZ |
| Win 7 starter | DOS | Win7 Home pre | win 7 Home pre | win 7 Home pre | Win7 Home pre |
| 1GB | Intel HD Graphics | VGA 1GB HD Grap | 2GB | 3GB | 2GB |
| H.D 160GB | RAM 2GB DDRIII | RAM 3GB DDRIII | 320GB HDD | 320GB HDD | 320GB HDD |
| 128MB | H.D 320GB | H.D 500GB | DVD Writter | DVD Writter | DVD Writter |
| LCD10.1" | DVD super multi | webCam With Mic | 796MB | 796MB | VGA 1GB HD Grap |
| WIFI Blue Tooth | Wifi | Wifi | webCamera With Mic | webCamera With Mic | webCamera With Mic |
| webCam With Mic | webCamera With Mic | DVD super multi | LCD15.6" | LCD15.6" | LED 15.6" |
| Price: 39,900/= | LCD 15.6" | LED 15.6" | WIFI Blue Tooth | WIFI Blue Tooth | Wifi |
| | Price: 63,900/= | Price: 79,900/= | Price: [illegible] | Price: [illegible] | Price: 70,900/= |

Power Tree UPS:4,100/=
HUAWEI E173 Multi Dongle
Price: 5,250/=



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போராட்டங்களை தடுக்க படையினர்; நடைமுறைப்படுத்த அரசு தீர்மானம்

கொழும்பு,ஜூன்6

எதிர்வரும் காலங்களில் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்கு இராணுவத்தினரை ஈடுபடுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய மோதல் சம்பவத்தில் பொலிஸார் பல்வேறு தவறுகளை இழைத்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் காலங்களில் கலகங்களைத் தடுப்பதற்குப் பொலிஸாரை ஈடுபடுத்தும் உத்தேசம் கிடையாது. போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்கு இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்கவை அண்மித்த முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் பாதுகாப்பும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கத் தாக்குதல் சம்பவத்தின் காரணமாக ஊழியர்கள் பொலிஸார் மீது கோபம் கொண்டுள்ளனர். மீளவும் பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்துவது பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் எனவும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பொலிஸாருக்கு ஒழுக்கம் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன. முரண்பாடான நிலைமைகளின்போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் பொலிஸாருக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

# உரிய பொறுப்புக்கள் இன்றி தவிக்கும் சிரேஷ்ட அமைச்சர்கள்·

## அமைச்சர் நாவின்ன கூறுகிறார்



கொழும்பு,ஜூன்6

இலங்கையின் சிரேஷ்ட அமைச்சர்களுக்கு உரிய பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் சிரேஷ்ட அமைச்சர்களுக்கான பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவர்களுக்கு எவ்வித பணிகளும் தரப்படவில்லை என்று சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார். தாம் பதவியேற்றது முதல் இதுவரை எந்த ஒரு அமைச்சரவை பத்திரத்தையும் சமர்ப்பிக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.அத்துடன் அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் அதிகளவு சம்பளத்தைப் பெறுகின்றனர்.

சிரேஷ்ட அமைச்சர்களுக்குக் குறைவான சம்பளமே வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# கண்ட இடங்களிலும் குளிர்பானங்களை வாங்கி அருந்தாதீர்!


கிளிநொச்சி, ஜூன் 6

சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியவகையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் குளிர்பானங்களை வாங்கி அருந்தவேண்டாம் என கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் துறையினர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட குளிர்பானங்களை விற்பனை செய்தவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுகாதாரமற்ற குளிர்பானங்களை அருந்திய ஏராளமானவர்கள் நாடு முழுவதும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பரிசில்...



2010ஆம் ஆண்டுக்கான மகாவலி புலமை பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகின்றார். அருகில் அமைச்சர்களான எஸ்.பி.திசாநாயக்க, பந்துல குணவர்தன மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் காணப் படுகின்றனர்.

# யுவதி நஷ்டஈடு: பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,ஜூன் 6

பிரபல தனியார் வைத்திய சாலை நிர்வாகத்திடமும், அதில் பணியாற்றும் இரு வைத்தியர்களிடம் இருந்தும் இரண்டரைக் கோடி ரூபாவை நட்ட ஈடாகப் பெற்றுத் தருமாறு கோரி அங்கு சிகிச்சைபெற்ற யுவதியொருவர் தாக்கல் செய்த மனுவை பரிசீலணைக்கு எடுத்த கொழும்பு மாவட்ட நீதிவான் பிரதிவாதிகளைப் பதிலளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் பற்சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட தனக்கு அங்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதால் தான் நிரந்தர நோயாளியாகி விட்டார் என மனுதாரரான யுவதி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாலித குமாரசிங்கவும், சட்டத்தரணி இந்திரஜித் அமரதுங்கவும் ஆஜரானார்கள்.

# கப்பல் சேவை இடைநிறுத்தம்: பயணிகள் சிரமம்

திருகோணமலைக்கும் மூதூருக்குமான கடல் வழி சேவையில் ஈடுபடும் சேருவில -2 கப்பல் ஒரு மாதகாலமாக சேவையில் ஈடுபடாமையினால் மூதூருக்கு செல்லும் பிரயாணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பழுதடைந்துள்ள கப்பலின் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் இலங்கையில் இல்லாததனால், இதனைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என இலங்கை துறைமுக அதிகார சபையின் திருகோணமலை வதிவிட முகாமையாளர் தெரிவித்தார்.

# வடக்கு, கிழக்கு தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சி கொழும்பில் மூன்று நாள்களுக்கு

கொழும்பு, ஜூன் 6

வடக்கு, கிழக்கு சிறிய மற்றும் மத்தியதரத் தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியுடன் கூடிய செயற்திட்டமொன்று எதிர்வரும் 10ஆம், 11ஆம்,12 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.

இலங்கைக் கைத்தொழில் வணிக சம்மேளனம் ஆறாவது முறையாக ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சியில் விவசாயம், கைத்தொழில் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட நவீன இயந்திரங்களின் பயன்பாடுகளைக் குறித்தும் காட்சிக் கூடங்கள் ஏற்படுத்தப்படும்.

அதேவேளை, 12 இந்திய நிறுவனங்களும் இக்கண் காட்சியில் பங்குபற்றவுள்ளன. இதன் போது தொழில் முயற்சியாளர்களுக்கான செயலமர்வுகளும் நடைபெறும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் 24 மணிநேரமும் முறையிடலாம்

கொழும்பு, ஜூன்6

பொதுமக்கள் தாம் அன்றாடம் முகங்கொடுக்கும் ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக லஞ்சஊழல் ஆணைக்குழுவிற்கு 24 மணிநேரமும் முறைப்பாடு செய்யலாம் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை 0112-584872 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ, 0112-595045 என்ற தொலை நகல் இலக்கத்துக்கோ, Ciaboc@eureke.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ தொடர்புகொண்டு தெரிவிக்க முடியும்.

ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற நீதியரசர் டி.ஜே.டி.எஸ்.பாலபட்டபெந்தி நியமிக்கப்பட்டுள்ளார். ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன என தெரிவித்துள்ளார்.

விசாரணைகளில் குற்றவாளியாகக் காணப்படுபவருக்கு நீதிமன்றத்தினூடாக தண்டனையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக பகுதி தலைவர்களின் பதவி விலகலுக்கு இடைக்காலத் தடை

கொழும்பு, ஜூன் 6

ஸ்ரீ ஜயவர்தனபுர, வடமேல் மாகாண மற்றும் ருஹுணு பல்கலைக்கழகங்களின் பகுதித் தலைவர்களின் பதவி விலகலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப் பித்துள்ளது.

அத்துடன் தற்போது இராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்துள்ள தலைவர்கள் தங்களது பதவிகளைத் துறக்க முடியாதெனவும் நீதிமன்றம் உத்தவிட்டுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகங்களின் திணைக்களத் தலைவர்கள் சமர்ப்பிக்கும் இராஜினாமாக் கடிதங்களை ஏற்பதற்கு உபவேந்தர்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமென மூன்று மாணவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தக்குச் சமர்ப்பித்த மனுக்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் பரீட்சைகளை நடத்துவதும், விரிவுரைகள் நடத்துவதும் திணைக்களத் தலைவர்களுக்கு உரிய பணிகளாகும். அத்துடன் இவர்கள் பரீட்சை சபையில் கட்டாயமாக அங்கம் வகிக்க வேண்டும்.

அவர்களது பங்களிப்பின்றி பரீட்சைகளை நடத்த முடியாது. இதன் பிரகாரம் இவர்கள் தன்னிச்சையாக பதவிகளில் இருந்து விலகுவது பல்கலைக்கழக சட்டத்திட்டங்களுக்கு முரணானது - என அந்த மனுக்களில் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

முறைப்பாட்டாளர்கள் சார்பில் சட்டத்தரணிகளான சஞ்சீவ ஜயவர்தன, ஜே.சீ. வெலியமுன, ஜனாதிபதி சட்டதரணி பயிஸ் முஸ்தபா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

# 6 மாணவருடன் இயங்கும் 123 அரச பாடசாலைகள்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

நாடெங்கும் 123 அரச பாடசாலைகள் ஆறு மாணவர்களுடன் இயங்கி வருவதாகக் கல்வி அமைச்சர் பத்துல குணவர்தன கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

நாடெங்குமுள்ள மொத்தப் பாடசாலைகளில் 25 வீதமானவை நூறு மாணவர்களுக்குக் குறைந்த தொகையுடன் இயங்கி வருகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் நியமனத்தில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளின் காரணமாக சில பாடசாலைளில் மாணவர்களை விட ஆசிரியர்களின் தொகை அதிகமாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் ஆயிரம் பாடசாலைகள் கல்வித்துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுமரங்களை வெட்டிய ஐவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம்

மன்னார், ஜூன் 6

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி முட்கொம்பன் பகுதியில் காட்டு மரங்களைக் களவாக வெட்டிய ஐவருக்கு நீதிமன்றத்தால் மொத்தமாக 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் வெட்டப்பட்ட மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

உரிய அனுமதிப் பத்திரங்களின்றிப் பாலை, முதிரை ஆகிய மரங்களை வெட்டியதாக ஐவர் பூநகரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இது தொடர்பான விசாரணைகள் நீதிமன்றத்தில் நடைபெற்று குறித்த ஐந்து நபர்களுக்கும் மொத்தமாக 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் வெட்டப்பட்ட மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

மக்கள் குடியமர்ந்த வன்னிப் பிரதேசத்தில் சமீப காலமாக சட்டவிரோதமான முறையில் காட்டு மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# ஆபத்தான நிலையில் உள்ள இரத்தினபுரம் இரும்புப் பாலம்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சி - திருவையாற்று வீதியில் திருத்தியமைக்கப்பட்ட இரத்தினபுரம் இரும்புப் பாலம் முழுமையாகப் புனரமைக்கப்படாது ஆபத்தான நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அரைகுறையாகப் புனரமைக்கப்பட்ட இரும்பு பாலம் அச்சத்தைத் தரும் நிலையில் இருப்பதாக வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் இரத்தினபுரம் பாலம் இரும்புக் கேடர்களைக் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்பட்டது.

எனினும் பாதையின் நடுப்பக்கமாக புனரமைப்புப் பணிகள் முழுமையாக நடைபெற்று போக்குவரத்து இடம்பெறுகின்றபோதும் வீதியின் இரு பக்கமும் இரும்பு பாலம் போடப்படாததால் ஆபத்தான போக்குவரத்துப் பாதையாக மாறியுள்ளது.

இந்த இரும்புப் பாலத்தில் போக்குவரத்துச் செய்யும் போது சற்று அவதானம் குறைந்து விலத்தினால் ஆழப் பகுதிக்குள் விழவேண்டிய நிலையேற்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-302)

# பதவியுயர்வு பெற்றார்

மன்னார், ஜூன் 6

மன்னாரைச் சேர்ந்த எந்திரி பஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் பானுராஜ் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் பிராந்திய முகாமையாளராகவும் வெளிக்கள உபகரண நிலைய முகாமையாளராகவும் பதவி உயர்வு பெற்றுப் புதிய கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் செயற்படும் வண்ணம் மேற்படி நியமனம் தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

எந்திரி பா.பி. பானுராஜ் கடந்த 5 வருடகாலமாக வவுனியா - மன்னார் மாவட்ட வெளிக்கள உபகரண நிலைய முகாமையாளராகப் பணியாற்றியுள்ளார்.

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யுத்தகாலத்தில் பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை முழுமையாக வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-302)

# சோலையம்பதியில் மகா கும்பாபிஷேகம்

பூநகரி, ஜூன் 6

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்தின் பல்லவராயன்கட்டு சோலையம்பதி ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தின் புனராவர்த்தனப் பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறாதிருந்த இந்தக் கும்பாபிஷேக நிகழ்வு இன்று நடைபெறவுள்ளமை சிறப்பு வாய்ந்ததாகும். கிரியைகளில் வி.பாலகுமாரக் குருக்கள், த.வீரபத்திரக் குருக்கள், இ.உருத்திரமூர்த்திக் குருக்கள், வெ.தியானந்தராசக் குருக்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். ஆசியுரையை வ.ஆ. தங்கமயில் ஐயா வழங்குவார்.

இந்தக் கிரியைகளின் நேர்முக வர்ணனையை சைவப் புலவர் கு.சுமுகலிங்கம் வழங்கவுள்ளார். (க-496)

## எழில்மிகு தோற்றம்...



மன்னாருக்குப் பெருமை: மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட தாம்போதி பாலம் எழிலுடன் காட்சியளிக்கின்றது. (601)

**மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயில், சிவன் கோயில்களுக்குப் பூசகர் தேவை**

ஆறு காலப் பூசை செய்யவுள்ள மேற்படி கோயிலுக்கு இரு பூசகர்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்க்கப்படும். ஒழுங்காக செய்யக் கூடியவர்கள் புகழ்பெற்ற குருமார் ஒருவரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கலாம்.

கொல்லங்கலட்டி, சு.சிவஷண்முகானந்தக் குருக்கள்
தெல்லிப்பழை. (4936) அரங்காவலர்.

இன்று முதல்
பலாலி வீதி, உரும்பிராயில்

GRACE Electricals
கிரேஸ்

சகல விதமான மின்சார உபகரணங்கள்,
இலத்திரனியல் பொருள்கள் மற்றும் P.V.C குழாய்கள்
விசேட விலைச் சலுகைகளுடன்

பலாலி வீதி,
உரும்பிராய்.
(பஸ் டிப்போ அருகில்) T.P:0213216712 (4919)

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

2011.06.03

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2401

வெற்றி எழுத்து D
வெற்றி எண்கள் 4 6 2 7 5 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | D | 4 | 6 | 2 | 7 | 5 | 7 | ரூபா. 14,584,730/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 4 | 6 | 2 | 7 | 5 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 6 | 2 | 7 | 5 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 2 | 7 | 5 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 138 |
| 4 பரிசுகள் | | | | | 7 | 5 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1321 |
| 5 பரிசுகள் | | | | | | 5 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 13281 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 131568 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 4 | 6 | 2 | 7 | 5 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | | 4 | 6 | 2 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 130 |
| 9 பரிசுகள் | | 4 | 6 | 2 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1342 |
| 10 பரிசுகள் | | 4 | 6 | | | | | ரூபா. - 50/= | பரிசுகள் 13226 |
| 11 பரிசுகள் | D | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52851 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 12,182,980.00

தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470962, 4607000, Hotline 2433631

**31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

மலர்வு 14 ★ 07 ★ 1924



உதிர்வு 07 ★ 05 ★ 2011

**பொன்னன் சின்னத்துரை**

கோபுரக் கலசமாக கலங்கரை விளக்காக
எமைக் காத்த எம் குடும்பத் தலைவா
முப்பத்தோராம் நாளிதனை நினைத்து
முடிவிலாத் துன்பமடைகின்றோம் வாரீர்

எமது குடும்ப விளக்கு அணைந்த போது எம்மோடு எம்துயரில் பங்கெடுத்த அன்பு உள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும் தகவல் ஊடகங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்து இறுதிக்கிரியைகளிலும் இறுதி யாத்திரையிலும் பங்கு கொண்டவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (06.06.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் வேண்டிக் கொள்கிறோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு சமுகம் தரவும்.

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (4924) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல் மிக்க வைத்தியர்கள் எமது நாட்டுக்கு அவசியம் தேவை

## விருது பெற்ற சத்தியமூர்த்தியைப் பாராட்டுகிறார் செல்வம்

மன்னார், ஜூன் 6

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான மருத்துவ உதவிகளை வழங்கிய வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்திக்குச் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தால் 2011 ஆம் ஆண்டுக்கான உள்ளக மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளமை குறித்துத் தாம் பெருமிதமடைவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது போதியளவு மருத்துவ வசதிகள் இல்லாதபோதும் பல சிரமங்களுக்கு மத்தியில் தனது உயிரையும் பொருட்படுத்தாது பொறுப்புணர்வோடு பணியாற்றியமைக்காகச் சத்தியமூர்த்திக்கு இவ்வாண்டுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

வன்னிப் போரின் உச்சக் கட்டத்தின்போது தனது உயிரைத் துச்சமாக மதித்த இவர் ஏனைய மனிதாபிமானச் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து ஆற்றிய பணிகளை நினைத்து நான் பெருமிதம் கொள்ளுகின்றேன்.

இந்த நிலையில் வைத்தியர் சத்தியமூர்த்தி தனது பணியைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் எனவும் இவ்வாறான துணிச்சல் மிக்க வைத்தியர்கள் எமது நாட்டுக்குத் தேவை எனவும் குறித்த வைத்தியரின் சேவையினை நினைத்து தான் பெருமிதம் அடைவதாகவும் வைத்தியர் சத்தியமூர்த்திக்கு கிடைத்த சர்வதேச விருதுக்காக வன்னி மாவட்ட மக்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்தார். (க-எ-601)

# மின்சார வசதிகள் இல்லாததால் கணினிகள் இயங்காத நிலையில்

அக்கராயன், ஜூன் 6

மின்சார வசதிகள் இல்லாததால் கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்துக்கு வழங்கப்பட்ட கணினித் தொகுதிகளை இயக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

பி.எஸ்.எஸ். நிறுவனம் இந்தப் பாடசாலைக்குக் கணினித் தொகுதியொன்றை வழங்கியிருந்தது. ஆனால் மின்சார வசதியில்லாததால் கணினிகளை இயக்க முடியாத நிலையில் பாடசாலை நிர்வாகத்தினர் உள்ளனர். இதனால் மாணவர்கள் கணினிகள் இருந்தும் அவற்றின் மூலம் தமது கணினிக் கல்வியைத் தொடரமுடியாத அவல நிலையில் உள்ளனர்.

மின் பிறப்பாக்கியொன்றிருந்தால் மின்சாரவசதியினைப் பெற முடியும். ஆனால் இதற்கும் வழியில்லை.

கடந்த 2006 ஆம் ஆண்டு பெரிய மின் பிறப்பாக்கியொன்றின் மூலம் வன்னேரிக்குளம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் போர் காரணமாக இந்தப் பணிகள் இடம்பெற வில்லை.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூ[illegible]வது தமது கிராமத்துக்கு[illegible]ன்சாரம் கிடைக்க மாட்டாதா என்ற அங்கலாய்ப்புடன் வன்னேரிக்குளம் கிராம மக்கள் கா[illegible]ருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-410)

# ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்கு அனுமதியில்லை; வன்னேரிக்குளம் மாணவர்கள் அவலநிலையில்

அக்கராயன், ஜூன் 6

கிளிநொச்சி வன்னேரிக் குளம் மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு ஆரம்பிப்பதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 50 ஆண்டுகள் கடந்த வரலாற்றைக் கொண்டது வன்னேரிக் குளம் மகாவித்தியாலயம். கடந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் இந்தப் பாடசாலையிலிருந்து தோற்றிய 50 வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஆனால் உயர்தர வகுப்புத்தான் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை.

இங்குள்ள மாணவர்கள் உயர்தர வகுப்பில் கற்க வேண்டுமென்றால் வன்னேரிக்குளத்திலிருந்து 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அக்கராயன் மகா வித்தியாலயம் அல்லது 29 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகரத்துக்குச் செல்ல வேண்டும். இதனால் இங்கு வசிக்கும் ஏழை மாணவர்கள் பெரும் அவலங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பல ஆண்டுகளாக உயர்தர வகுப்பை ஆரம்பிக்க வேண்டுமெனக் கல்வித் திணைக்களத்துக்கு மனுக்கள் கொடுத்துக் கிராம மக்கள் களைத்துவிட்டனர். ஆனால் இது தொடர்பாக நடவடிக்கையெதுவும் எடுக்கவில்லையென்று இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-410)

# பூநகரியில் கிரவல் மண் தூசியால் சுவாச நோய் ஏற்படும் அபாயம்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்தின் பிரதான வீதிகள், சிறுவீதிகள் என்பன கிரவல் மண்ணால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதால் சுவாசம் தொடர்பான நோய்கள் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் பயணம் செய்யும் பயணிகள் கிரவல் மண்ணில் குளித்தபடியே பயணம் செய்கின்றனர். இதனால் இக்கிரவல் மண் தூசிகள் மூக்குத்துவாரங்கள் ஊடாகச் சுவாசப்பையை நாளாந்தம் சென்றடைகின்றன.

இந்த வீதிகளால் நாளாந்தம் பயணம் செய்யும் வியாபாரிகள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் மற்றும் பூநகரிப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள், வணிக நிலைய உரிமையாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை கொண்டு உதவுமாறு பூநகரி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-406)

# மகிழங்குளத்தில் மக்கள் மீள்குடியமர்வு

வவுனியா, ஜூன் 6

வவுனியா மகிழங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அடுத்த மாதம் மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இத்தகவலை வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வவுனியா மாவட்டத்தில் மகிழங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவைத் தவிர ஏனைய அனைத்துப் பிரிவுகளிலும் மக்கள்மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போது மகிழங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பணிகள் பெரும்பாலும் அடுத்த மாதமளவில் பூர்த்தியடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பணிகள் நிறைவடைந்ததும் சுமார் 200 குடும்பங்கள் இந்தப் பகுதியில் மீள் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## மயானத்துக்கு யோகம்...



பணிகள் தொடரட்டும்: மன்னார் நகரசபையின் ஏற்பாட்டில் மன்னார் பொது மயானத்தில் சிரமதானப் பணிகள் நடைபெறுகின்றன.

# நிலம் உவரடைதலைத் தடுக்கும் நடவடிக்கை வன்னேரிக்குளம் பிரதேசத்தில் தீவிரம்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்திலுள்ள குஞ்சுக்குளத்தின் கீழான வயல் நிலங்கள் மற்றும் மக்களின் வாழ்விடங்கள் உவரடையாமல் பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குஞ்சுக்குளத்தின்கீழ் 100 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கடந்த 10 ஆண்டுகளில் வயல் நிலங்களில் பெரும் பகுதி உவரடைந்துள்ளது. இந்த வயல் நிலங்கள் உவரடைவதுக்கு முக்கிய காரணமாக பூநகரிக் கடல்நீர் பெருக்கெடுத்து மக்கள் வாழ்விடங்களுக்குள் நுழைவது மற்றும் மண்டைக்கல்லாறு போன்ற உப்பாறுகள் மழை காலத்தில் வயல் வெளிகளில் பரவுதல் என்பன உள்ளன. இதன் காரணமாக வயல் நிலங்கள் உவரடைந்து பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இந்நிலையில் வன்னேரிக்குளம் கிராமத்தில் குஞ்சுக்குளம் போன்ற பல இடங்கள் உவரடைந்துள்ளன. இந்த உவரடைதலைத் தடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

குஞ்சுக்குளம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு நீர்ப்பாசன முயற்சி இடம்பெறுமானால் மேட்டு நிலப் பயிர் செய்கையில் ஈடுபட முடியுமென இந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-410)

# தேசிய சிறுவர் அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்கு

வவுனியா, ஜூன் 6

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒலுமடு மத்திய மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தேசிய சிறுவர் அதிகாரசபையின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் கருத்தரங்கு நடைபெற்றுள்ளது.

இந்தக் கருத்தரங்கு வவுனியா செயலகத்தில் இயங்கும் தேசிய சிறுவர் அதிகாரசபையின் இணைப்பாளர் த.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. குறிப்பாக இடம் [illegible] மாணவர்களின் கற்றல் செயற்பாட்டைத் தடையின்றிக் கொண்டு செல்வதற்காகவே இந்தச் செயற்திட்டம் வவுனியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இந்தக் கருத்தரங்கிலே மாணவர்கள் பாடசாலைகளிலும் வீடுகளிலும் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து ஆராயப்பட்டன. அத்துடன் சிறுவர் உரிமைகள் தொடர்பான விடயங்கள், சிறுவர்களுக்கு ஏதாவது பாதிப்புகள் ஏற்படின் எவ்வாறான செயற்பாடுகளை உடனே மேற்கொள்வது, உரிய அதிகாரிகளுடன் எவ்வகையில் தொடர்பு கொள்வது போன்ற விடயங்களும் இந்தக் கருத்தரங்கிலே ஆராயப்பட்டன.

அத்துடன் மாணவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவதினால் அவர்கள் எதிர்கொள்ளும் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

முதற்கட்டமாக இந்தச் செயற்திட்டம் வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அங்கு நிறைவுற்றவுடன் வவுனியா தெற்குக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் மாவட்ட இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (க-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை ஒருபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்காது

## அரியநேத்திரன் எம்.பி.கூறுகிறார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுகளில் முஸ்லிம்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது நியாயமான கோரிக்கையே.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வில்லியம் தோமஸ் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தப் பேச்சுகளில் தங்களை இணைத்துக்கொள்ளாதது குறித்து முஸ்லிம் தரப்பிடமிருந்து சில பிரதிபலிப்புகள் வெளிவந்துள்ளன. அது நியாயமானதுதான். தமிழ் மக்கள் தரப்பில் பேசுவதற்குத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இருப்பதுபோல, முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே உள்ளது.

அரசு முஸ்லிம்களைப் புறக்கணித்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளைப் புறக்கணிக்காது.

இதன் காரணமாக நாங்கள் முஸ்லிம் காங்கிரஸுடன் தொடர்ச்சியான பேச்சுகளையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருகின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் அந்நியோன்யமான உறவும் புரிந்துணர்வும் உள்ளன என்பது வெளிப்படையான விடயம்.

தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்குமானால் அதில் முஸ்லிம்களும் பங்காளிகளாக இருப்பார்கள். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்கு இருக்கும் அத்தனை உரிமைகளும் முஸ்லிம்களுக்கும் இருக்க வேண்டும். வடக்கு,கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகம் என்பதே எமது நிலைப்பாடு.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தமது ஏக பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுசெய்துள்ளார்கள். அதே போன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை முஸ்லிம் மக்கள் தெரிவுசெய்துள்ளனர்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் இடம்பெற்றுவந்த பேச்சுகளில் 6 சுற்றுப் பேச்சுகள் முடிந்துள்ளன. எனினும் தமிழ் மக்கள் இவற்றை அதிர்ச்சி கலந்த ஒரு எதிர்பார்ப்புடன் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இதன் காரணமாக நாங்கள் முஸ்லிம் காங்கிரஸுடன் தொடர்ச்சியான பேச்சுகளையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருகின்றோம். அரசிடம் இருந்து தீர்வைப்பெறும்போது அதில் முஸ்லிம்களும் பங்காளிகளாக இருப்பார்கள்.

வடக்கு,கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்கள் அடிமைகளாக வாழ்வதற்கு நாங்கள் சம்மதியோம். அவர்களை நாங்கள் எங்களுடன் இணைந்த சமூகத்தினராகவே பார்க்கின்றோம்.

போராட்டம் முடிவுற்று இரண்டு வருடங்கள் கடந்து விட்டபோதிலும் எமது மக்களுக்கு எதுவித அரசியல் தீர்வுகளும் முன்வைக்கப்படவில்லை. ஐ.நா.சபையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தமது ஒன்றுபட்ட சக்தியை இந்தத் தேர்தலில் ஒற்றுமையாகக் காட்டுவதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலம்மிக்க சக்தியாக மாற்றமுடியும். அவ்வாறான நிலையில் இடம்பெற்றுவரும் பேச்சுகளில் நல்லதொரு தீர்வை இலங்கை அரசிடம் இருந்து பெறக்கூடிய சாத்தியங்கள் உள்ளன-என்றார். (ச-30)



மட்டக்களப்பு மாவட்ட வனபரிபாலன திணைக்களம் ஏற்பாடு செய்த சர்வதேச சுற்றாடல் தின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடுவாமடு வனவியல் கல்விப் பூங்காவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்விப் பூங்கா வன அலுவலர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (21)

# கண்ணகி இலக்கிய விழா நிகழ்வு மட்டக்களப்பு மகாஜனா கல்லூரியில்

அம்பாறை, ஜூன் 6

மட்டக்களப்பில் கண்ணகி இலக்கிய விழா எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மகாஜனா கல்லூரியில் நடைபெறவுள்ளது.முதலாம் நாள் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு 'கூலவாணிகன் சாத்தனார்' அரங்கில் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கண்ணகி இலக்கிய விழாப்பட்டயம் பிரகடனப் படுத்தப்படல், சிலப்பதிகார இறுவெட்டு வெளியீடு என்பன இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் மாலை 5 மணிக்கு 'சேரன் செங்குட்டுவன்' அரங்கில் நடைபெறும் நிகழ்வில் வவுனியா மாவட்டத் தமிழ்ச் சங்கத் தலைவர் த.சிவகுமாரன், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, பண்பாட்டுப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி அனுசியா சேனாதிராஜா, கி.துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு உரைநிகழ்த்தவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு பேராசிரியர் ச.சண்முகதாஸ் தலைமையில் 'இளங்கோவடிகள்' அரங்கில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் கண்ணகி காவியம், கண்ணகி வசந்தன், நாட்டிய நாடகம், கரகாட்டம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (ச-30)

உ
சிவமயம்
ஓம் சரவணபவாயநம

# பல்லவராயன்கட்டு சோலையம்பதி
# ஸ்ரீ முருகன் திருக்கோயில் திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழா சிறப்புமலர்



### ஆசிச் செய்தி

பல்லவராயன்கட்டு சோலை ஸ்ரீமுருகன் திருக்கோயில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுவதை அறிந்து ஆனந்தம் அடைகின்றேன்."கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட வெற்றிவேற் பெருமானின்" கும்பாபிஷேகப் பெரு விழா சிறப்புற அமையவும் இக்கைங்கரியத்துக்கு முன்னின்று இறைபணி யாற்றும் அன்புநெஞ்சங்களினையும் பாராட்டி ஆசி வழங்குவதும் அவனருளேயாம்.

"அன்பே சிவம்"

தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள்,
மகாதேவா ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.



### ஆசிச் செய்தி

சமயி ஒருவன் சைவசமய கைங்கரியங்களுள் ஆலய கும்பாபிஷேகம் காண்பது மிக முக்கியமான, உன்னதமான நிகழ்வாகும்.

இந்த வகையில் கடந்த 20வருடங்களுக்கு மேலாக உறங்கி இருந்த பல்லவராயன்கட்டுச் சோலை முருகன் திருக்கோயில் கும்பாபிஷேகப் [illegible]ருவிழா காண்பது பல்லவராயன் கட்டுச் சைவப் பெருமக்களுக்கு மட்டும[illegible]ி இலங்கைவாழ் இறைபணி நிற்போர் அனைவருக்கும் கிட்டும் ஒரு திவ்வி[illegible] பரப்பிரசாதம் ஆகும்

திவ்யானுகூலமாய் நிறைவுற வணங்கி ஆசிதந்து அடங்கி அமைவதில் திருமுருகனருளை உணர்கின்றோம்.

ஓம் திருமுருக சரவணபவ ஓம்

சைவசித்தாந்த பண்டிதர்
சைவப்புலவர், ஓய்வுநிலை நில அளவையாளர்,
பண்டிதர், M.A. (சைவசித்தாந்தம்) திருவருள் வ.ஆ.தங்கமயில் ஐயா.



### ஆசிச் செய்தி

சோலையம்பதி பல்லவராயன் கட்டு ஸ்ரீ முருகன் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா கடவுள் மங்கலம் நிலை பெறல் நிறைவுற அமைய வெள்ளிபள்ளத்து வீரகத்திப் பிள்ளையாரை வேண்டுகிறேன். இவ்விழா 1. அநாவர்த்தனம் 2.ஆவர்த்தனம் 3.புனராவர்த்தனம் 4. அந்தரீதம் என நான்கு வகைகளுள் ஒன்றான புனராவர்த்தனம் ஆகும். இவ்விழா இளங்கோயில் திருக்குடமுழுக்கு நன் நீராட்டு விழா திருப்பணி என்பவற்றை நிறைவாக பூரணப்படுத்தியதும் நடைபெறுவது இப் பெரும் சாந்திவிழாவாகும்.

மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவாசகத்தில்

*"கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச் செம்மை மனத்தால்*
*திருப்பணிகள் செய்வோருக்கு இம்மை தரும்பயன் இத்தனையும்*
*ஈங்கொழிக்கும் அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே"*

என்றார். இவ்வகை குருபாதம் பணிந்து ஆசி கூறுவதும் அவனருளேயாம்.

ஈழவூர் சைவ[illegible]
சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா MA.J.P, ஆசிரியர்.





### வாழ்த்துச் செய்தி

பல்லவராயன் கட்டு சோலை ஸ்ரீ முருகன் திருக்கோயில் திருக்குட முழுக்கு விழாவை சிறப்பாக கரவருடத்திலே நிகழ்த்த உதவி புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் ஆறுமுகன் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து அன்பும் அறமும் தளைத்து ஓங்க அவனருள் வேண்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தலைவர், வே.இராசேந்திரம்,
பல்லவராயன்கட்டு,
சோலை ஸ்ரீமுருகன்
தேவஸ்தானம்.



### ஆசிச் செய்தி

ஈழத்திருநாட்டின் இன்று பல சிவாலயங்களில் குடமுழுக்கு நடைபெறுகின்றன. இவையாவும் மண்ணுலக ஜீவகோடிகள் செய்த தவப்பயனாகும் எனலாம். இந்த வகையில் பல்லவராயன் கட்டு சோலை முருகன் திருக்கோயில் கும்பாபிஷேகப் பெரு விழா இவ்வாண்டு நடைபெறுவது இவ்வூர் மக்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகும். இந்தக் கும்பாபிஷேகப் பெருவிழா எதுவித குறைவுமின்றி நடைபெற எல்லாம் வல்ல வள்ளிதேவசேனாதிபதி சமேத சுப்பிரமணிய சுவாமி அருள்புரிய வேண்டுமென போற்றுவதோடு எனது ஆசியையும் வழங்கி மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

சிவஸ்ரீ சி.த.வீரபத்திரக்குருக்கள், முத்துமாரியம்மன் கோயில், சாவகச்சேரி.



### ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கும் ஈழமணித் திருநாட்டின் வடபால் தனித்துவம் மிக்க இயற்கைச் சிறப்பமைந்த கிளிநொச்சி மாவட்டத்தின் தென்மேற்கே மருத நிலமும் முல்லை நிலமும் இணைந்தழகு செய்யும் பல்லவராயன்கட்டு என்னும் சிறப்புறு சிற்றூரில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்ற முருகப் பெருமானுக்கு குடமுழுக்குச் செய்யும் பெரும் பேறு கிடைக்கப்பெற்ற திருவருளை எண்ணி பேருவகை கொள்கின்றேன். எம் பெருமானுடைய திருவருள் அனைவருக்கும் கிட்ட இறைவனை இறைஞ்சுகிறேன்.

சிவஸ்ரீ.வி.பாலகுமாரக்குருக்கள், சாவகச்சேரி.



### வாழ்த்துச் செய்தி

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமைந்த வரலாற்றுப் பெருமை மிக்க பூநகரி மண்ணில் பல்லவராயன் கட்டு எனும் பாரம்பரிய பூமியில் சோலை கரியாலை நாகபடுவான் கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்கு 2011.06.06 ஆம் திகதியன்று இடம்பெறவுள்ள குடமுழுக்கு (பெருஞ் சாந்தி) விழாவினையொட்டிய மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முருகப்பெருமானின் குடமுழுக்குக்காட்சி காண்பதற்கரிய காட்சியாகும். பூர்வீகத்திலே புண்ணியம் செய்தவர்களுக்கே குடமுழுக்கு காணும் பாக்கியம் கிட்டும்.கரியாலை நாகப்படுவான் மக்கள் இப் பெரும்சாந்தி விழாவைக் கண்டு பெரும்பேறெய்ய வேண்டுமென்ற உணர்வு கொண்டு பெருமுயற்சி செய்து இந்தக் குடமுழுக்கினை நடத்தும் ஆலய பரிபாலன சபையினர் போற்றுதற்குரியவர்கள். குடமுழுக்குக் காணும் பாக்கியம் பெற்ற மக்கள் முருகனருள் பெற்று வாழ்வில் பிணி நீங்கி சகல செல்வமும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

தி.இராசநாயகம்,
வடமாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளர்,
பொது நிர்வாகமும் முன்னைய கிளிநொச்சி அரச அதிபரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் போரால் விதவையானோருக்கு இந்தியாவில் ரூ.20 கோடி உதவித் திட்டம்

## தூதர் அசோக் கே.காந்தா தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன்6

கிழக்கில் யுத்தத்தின்போது கணவனை இழந்த பெண்களுக்கு இந்தியா சார்பில் ரூபா 20 கோடி 30 லட்சம் மதிப்பிலான உதவித் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே.காந்தா கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. அதற்கு முன்பு 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வந்த யுத்தத்தில் கிழக்குப் பகுதியில் மட்டும் குறைந்தபட்சம் சுமார் 49 ஆயிரம் பெண்கள் கணவனை இழந்துள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வட பகுதியில் போரால் கணவனை இழந்த பெண்களின் எண்ணிக்கை சுமார் 40 ஆயிரம் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தகவல்களை அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் விதவைகளுக்கு உதவ இந்தியா முன் வந்துள்ளது என்று இந்தியத் தூதர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

போரால் கணவனை இழந்த பெண்களுக்குவேலைவாய்ப்பை ஏற்படுத்தி அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வழிவகை செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த நிதி உதவித் திட்டத்தின் மூலம் அவர்களுக்குப் பல்வேறு தொழில் பயிற்சிகள் அளிக்கப்படும். அத்துடன் வாழ்வாதாரத்துக்கான வழிவகைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இந்த உதவித் திட்டம் மிகவும் முக்கியமானது. இந்தத் திட்டம் அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும். கிழக்குப் பகுதியின் ஒட்டுமொத்த சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த இந்தியா இந்த உதவிகளைச் செய்கிறது.

இதன்படி மட்டக்களப்பில் சமுதாயப் பயிற்சி மையம், வர்த்தக மையம் ஆகியன அமைப்பதற்கான ஒப்பந்தம் இலங்கை அரசுடன் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்தியாவின் இந்த உதவித் திட்டம் இலங்கையின் பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இந்தியா அளித்து வரும் மறுசீரமைப்புப் பணிகளுக்கான உதவிகளின் தொடர்ச்சியே இந்த உதவித் திட்டமாகும்- என்றார். (ச)

## பதுளை, மொனராகலை தமிழ்ப் பாடசாலைகளுக்கு மின்சார வசதியைப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு

பதுளை, ஜூன் 6

பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் மின்சார வசதியில்லாத தமிழ்ப் பாடசாலைக்ளுக்கு மின்சாரம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஊவா மாகாண சபை உறுப்பினர் அ.அரவிந்குமார் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாவட்டங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் மின்சார வசதி இல்லாததால் மாணவர்களால் கணினி அறிவைப் பெறமுடியவில்லை. இதனால் எமது சமூகம் சார்ந்த பிள்ளைகள் நவீன தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஒரு தேக்க நிலையை அடைகிறார்கள்.

எனவே, இதுதொடர்பில் மாகாண முதலமைச்சரும், கல்வி அமைச்சருமான சசிந்திர ராஜபக்ஷவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அவர், மின்சாரம் பெற்றுத்தர நிதியொதுக்கப்படும் என உறுதியளித்துள்ளார்- என்றார். (ச)

## தொலைபேசி கேபிள்கள் துண்டிப்பு

குருத்தலாவை பிரதேசத்தில் கடந்த ஒருவாரகாலமாக தொலைத்தொடர்பாடல் வசதிகள் செயலிழந்து போயுள்ளதால் பிரதேச மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் ஆறாம்கட்டை என்னுமிடத்தில் வெலிமடையிலிருந்து பொறலந்த, வங்கியாகும்புர, அப்புத்தளை, கெப்பெட்டிபொல, நுவரெலியா போன்ற இடங்களுக்கு செல்லும் தொலைபேசி கேபிள்கள் இனந்தெரியாதோரால் துண்டிக்கப்பட்டு திருடப்பட்டதாலேயே தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## நல்லின பசுக்கள் விருத்திக்கு கிழக்கில் நடவடிக்கை

திருகோணமலை, ஜூன் 6


கிழக்கு மாகாணத்தில் நல்லின பசுக்களின் விருத்தியை அதிகரிப்பதற்கு கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி திணைக்களம் விசேட செயற்கைமுறை சினைப்படுத்தல் திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பசுக்களுக்கு எந்தக் காலப் பகுதியிலும் சினைப்படுத்தலை மேற்கொள்ள முடியும். அத்துடன், சிறந்த ரக பசுக்களின் உற்பத்தியையும் கூட்டமுடியுமென மாகாண உதவிப் பணிப்பாளர் டாக்டர் பி.புவனேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, பசுக்களுக்கான உணவைப் பெற்றுக்கொள்வதற்கு புல் வளர்ப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க திணைக்களம் 10 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனைக்கொண்டு அம்பாறை மாவட்டத்தில் புல் வளர்ப்புத் தரை உருவாக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## எவ்வேளையும் எதுவும் நடக்கலாம்.....



மட்டக்களப்பு, வலையிறவு சின்னப்பாலம் இடிந்து விழும் அபாய நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பாலத்தில் துவாரங்கள் ஏற்பட்டு அதை மறைப்பதற்காக இரும்புத் தகரங்கள் போடப்பட்டுள்ளன. (ச)

## மாமாங்கம் கீரிமடுவில் பெண்கள் ஊர்வலம்

மட்டக்களப்பு, ஜூன்6

யுத்தத்தின்போது கணவனை இழந்த விதவைப் பெண்கள் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாமாங்கம் கீரிமடு சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் வரை அமைதி ஊர்வலம் ஒன்றில் ஈடுபட்டனர்.

யுத்த காலத்தில் காணாமற்போன தமது உறவினர்கள் மீண்டும் கிடைக்க வேண்டும் என வேண்டி விசேட பிரார்த்தனையிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட விதவைப் பெண்கள் அமைதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். அத்துடன் சில தொண்டு அமைப்புகளும் ஊர்வலத்தில் கலந்து கொண்டன. (ச)

## நாகதம்பிரானின் கும்பாபிஷேகமும் அம்மனின் அலங்காரத் திருவிழாவும்

அம்பாறை, ஜூன் 6

மட்டக்களப்பு, மகிழூர் கண்ணகை அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நாகதம்பிரான் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 15ஆம் திகதி பொங்கல் திருக்குளிர்த்தியுடன் உற்சவம் நிறைவுபெறும். (ச-30)

## தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்கள் காட்டிக் கொடுப்பவையாக அமையக் கூடாது

நுவரெலியா, ஜூன் 6

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான போராட்டங்கள் உரிமைகளை வென்றெடுப்பவையாக அமைய வேண்டுமே தவிர அவர்களைக் காட்டிக்கொடுப்பதற்கான ஆயுதமாக அவற்றைப் பயன்படுத்தப்படுத்தக்கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம். ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தோட்டத் தொழிலாளர்கள் பல வருடகாலமாக பல்வேறு போராட்டங்களை நடத்தி பல உரிமைகளை வென்றெடுத்துள்ளனர். அதேபோல இன்றும் தமது உரிமைகளுக்காக பல போராட்டங்களை நடத்தியும் வருகின்றனர். இத்தகைய போராட்டங்கள் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பவையாக அமைய வேண்டுமே தவிர, அவர்களை காட்டிக்கொடுப்பவையாக அமைந்து விடக்கூடாது.

கடந்த காலங்களில் இத்தகைய அனுபவத்தை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். இம்முறையும் கூட்டு ஒப்பந்த இரகசிய பேச்சுக்களின் இறுதிக்கட்டமாக இத்தகைய காட்டிக் கொடுப்புக்கான போராட்ட நாடகங்கள் தயாராகி வருவதை அவதானிக்க முடிகின்றது. எனவே, தொழிலாளர்கள் ஏமாற்றமடையாத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.

ஆனால் எமது போராட்டங்களைக் கொச்சைப்படுத்தி ஒப்பந்தம் செய்யும் தரப்பு, தொழிற் சங்கங்கள் இன்று தொழிலாளர் களிடையே தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக செயற்படுமாறு போராட்டங்களை முடுக்கிவிட்டுள்ளமையை அறிகின்றோம். இது ஒரு கபடநாடகம் என்பதே எமது கணிப்பு.

தொழிலாளர்கள் இத்தகைய சதி முயற்சிகளுக்கு அகப்படாது 500 சம்பள உயர்வு பெறுவதில் உறுதியாக இருக்க வேண்டும் - என்றார். (ச)

## இலவச கல்வியை பாதுகாப்பதற்காகவே போராடுகின்றது பேராசிரியர்கள் சங்கம்

கண்டி, ஜூன் 6

பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கம் அரசுடன் போராடுவது தனது ஊதியத்தை அதிகரித்துக்கொள்வதற்காக மட்டுமல்ல இந்தநாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இலவசக் கல்வியை பாதுகாப்பதற்காகவுமே - என பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி நியுமால் ரஞ்சித் தேவசிரி தெரிவித்தார்.

கண்டி தபாலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று உயர்கல்விக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் ஆங்கில அறிவும் கணினி ஆற்றலும் இருந்தால் மட்டும் போதும் என்று நினைக்கின்றனர். பொதுவாக இன்று பெரும்பாலானோருக்கு ஆங்கில அறிவு உண்டு. கணினி அறிவும் சாதாரணமாக அனைவருக்கும் உள்ளது. எனவே இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

1970ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் ஒருவருக்கு 700 ரூபா ஊதியம் கிடைத்தது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 600 ரூபாவே கிடைத்தது.

ஆனால், இன்று பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் ஒருவருக்கு 26,900 ரூபா கிடைக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அனைத்தும் உள்ளடங்கலாக ஒரு லட்சம் ரூபா கிடைக்கின்றது.

இதேபோல், 1970 ஆம் ஆண்டில் மத்திய வங்கி ஊழியர் ஒருவருக்கு 600 ரூபா கிடைத்தது. இன்று 64,000 ரூபாவரை கிடைக்கின்றது. இந்தச் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கவே நாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (ச)

## நிலாவெளி பாடசாலையில் கணினி திருட்டு

திருகோணமலை, ஜூன் 6

திருகோணமலை,நிலாவெளி அல்/பத்தாஹ் முஸ்லிம் வித்தியாலயத்தில் கணினியொன்று திருடப்பட்டுள்ளது என பாடசாலை அதிபர் எம்.பி.எம். சமீம் தெரிவித்தார்.

பாடசாலையின் அலுவலகப் பாவனைக்காக உபயோகப்படுத்தப்பட்ட கணினியே இவ்வாறு காணாமல் போயுள்ளது. அலுவலக அறை உடைக்கப்பட்டு இந்தக் கணினி திருடப்பட்டுள்ளது எனவும் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் திண்ணபுரம் சிவன்

## மஹா கும்பாபிஷேகம் சிறப்பு



### பஞ்ச கிருத்திய நாயகனை பணிவோம்



உருவாய், அருவாய், உளதாய், இலதாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைசக்தியை உருவத்திரு மேனியிலே ஆவாஹணம் செய்து சூரிய சந்திரர் உள்ள வரை வியாபகமாய் இருந்து அருள்செய்ய வேண்டுமென விண்ணப்பித்து திருக்குடம் திருமஞ்சனமாட்டி வேண்டுவதே மஹா கும்பாபிஷேகமாகும்.

பல்வகைப்பட்ட பிறப்புக்களை அடையும் நாம் பூர்வபுண்ணிய பயனாக மானிடப்பிறப்பினை பெற்றுள்ளோம். அதிலும் இறைவனை வழிபட்டு அவன் அருளினை பெறுகின்றோம் எனில் அதற்கு இறையருளே காரணமாகின்றது. இதனையே மாணிக்கவாசகர் திருவாசகத்தில் ''அவன் அருளாலே அவன் தாள் வணங்கி'' எனக்குறிப்பிடுகிறார்.


சைவமும் தமிழும் கலந்து கமழும் சமயாசார சீலர்கள் வாழும் காரைநகர். ஈழத்து சிதம்பரம் ஆகம பிரமாணத்துக்கமைய புனர்நிர்மாணம் செய்யப்பெற்று எழில் மிகு வர்ணம் தீட்டி புதுப்பொலிவுடன் உத்தமோத்த முப்பத்தி மூன்று குண்டங்கள் அமைந்த யாகசாலையில் அவிசொரிந்து ஆகுதி நல்கி வேத, திருமுறை கோஷங்கள், மங்கள ஒலி முழங்க திருக்குட திருமஞ்சன விழா சிறப்புற நிகழ்கின்றது.

இந்தப் பெரும் கைங்கரியம் சீரும் சிறப்புமாக இடர்பாடேதுமற்று இனிதே நிறைவேற வழிவிட்ட அம்பிகை பாகனை மனம், மொழி, மெய்யால், வழுத்தி இந்தத் தெய்வீகப் பணி சிறப்புற நிறைவுற உதவிய அடியார்களுக்கும் மற்றும் அனைவருக்கும் அஷ்ட ஐஸ்வர்யங்களும், ஆரோக்கிய வாழ்வும், நீண்ட ஆயுளும் சித்திக்க பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

*அன்பே சிவம்*

*பிரதிஷ்டா வித்தகர்*
*சிவஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்*
*பிரதிஷ்டா பிரதம குரு*
*ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.*



ஈழத் திருநாட்டில் புகழ்பெற்ற சிவத்தலங்களில் ஒன்றான காரைநகர் திண்ணபுரச்சிவன் கோயில் விளங்குகின்றது. கோயில் என்பது எல்லா ஆலயத்துக்கும் பொதுப்பெயராயினும் சிறப்புப்பெயராக இந்தியாவிலுள்ள சிதம்பரத்தையே குறிக்கும். இத்தகைய சிதம்பர சிவதலத்தை காரைநகர் சிவன் கோயில் கிரியை முறையிலும் மார்கழித் திருவாதிரை உற்சவ முறையிலும் ஒத்து விளங்குகின்ற காரணத்தால்''ஈழத்துச் சிதம்பரம்'' எனச் சைவச் சான்றோர்கள் அழைத்து வருகின்றனர்.

இலங்கையின் சிகரமெனத்திகழும் யாழ்ப்பாண நகரிலிருந்து இருபத்திரெண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது காரைநகர். இந்த நகரின் ஈசான திசையில் திண்ணபுரத்தில் 'கசூரினா' கடற்கரைக்கு அண்மை யில் இந்தத் தலம் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன வாய்க்கப்பெற்ற திருத்தலமாகும்.

ஆதியில் ஆண்டி என்னும் பெரியாரால் திண்ணபுர அரச மரத்தடியில் வைரவ சூலத்தை வைத்து பூஜை வழிபாடு ஆற்றி வரும் நாளில் அரசமரத்துக்கு அண்மையில் ஓர் திவ்விய ஒளி தோன்றியது. அந்த இடத்தை அகழ்ந்தபோது பூரணை , புட்கலை சமேத ஐயனார் திருவுருவம் வெளிப்பட்டது. அந்த இடத்தில் ஐயனாருக்கு முதன்முதலில் ஆலயம் அமைத்து வழிபாடு இயற்றி வருவாராயினர் காலக்கிரமத்தில் சிதம்பரத்திலிருந்து சிவலிங்கம் இறையருளால் தேர்ந்தெடுத்து வந்து சிவாலயமும் ஸ்தாபித்து 1848இல் முதல் மஹா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இரண் டாம் மூன்றாம் நான்காம் மஹா கும்பாபிஷேகங்கள் முறையே 1900ஆம், 1934ஆம், 1950ஆம் ஆண்டுகளிலும் சிறப்பாக நடைபெற்றன. இத்தகைய திருப்பணிகளை அக்காலத்தில் வாழ்ந்த ஆதீன கர்த்தாக்களாகிய அம்பலவி முருகர், சண்முகத்தார், சின்னத்தம்பியார், மாசிலாமணி, துரையப்பா ஆகியோரால் நடத்தப்பெற்றன. 1963 ஆம் ஆண்டு ஆதீன கர்த்தாக்களின் அனுசரணையோடு அடியார்கள்'ஒன்று சேர்ந்து 'காரைநகர் சிவன் கோயில் திருப்பணிச்சபை' யை நிறுவினார்கள். இந்தச் சபையினர் சிவன் அம்பாள் கர்ப்பக்கிரகம் அர்த்த மண்டபம் மஹாமண்டபம் ஆகியவற்றை சிற்பவேலைப்பாட்டுடன் அமைத்தும் விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர் தலங்கள் யாவும் திருத்தமும் செய்தனர். இந்தச்சபையினர் 1970ல் ஐந்தாவது மஹா கும்பாபிஷேகத்தை நிறைவேற்றினர்.

1982இல் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட திருப் பணிச் சபையினர் இரு இராஜகோபுர கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டனர். அதனை முடித்து 1991இல் கும்பா பிஷேகம் செய்ய இருந்த வேளையில் நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். ஊர் ஊராயின ஞான்று மக்களின் உதவியுடன் உள்கோயில் தூபிகள் சுற்றுப் பிரகாரங்கள் திருக்குளங்கள் யாவும் திருத்த வேலை செய்தும் வர்ணம் தீட்டியும் பொலிவுறச் செய்தனர். 1998 இல் மஹா கும்பாபிஷே கத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றினர்.

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், அமரருமான தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் செய்த திருப்பணிகள் அளப்பரியன. கோயிலின் ஈசா திசையில் அறப்பணி நிலையத்தை உருவாக்கி அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஒழுங்கும் செய்தார். நடராசஜப்பெருமா னுக்கும் ஐயனாருக்கும் சிற்பக் கலைத் தேர்களையும் இவ்விரு தேர்களுக்குத் தேர்முட்டி (இருப்பிடம்) ஆகிய திருப்பணிகளை பலகோடி ரூபா செலவில் துரித கதியில் முட்டற முடித்து வைத்தார் .

2009 இல் ஆதீன கர்த்தாக்களால் நியமித்த திருப்பணிச் சபையினர் மஹாமண்டபம், முதலாம் வீதியைச்


## மஹாகும்பாபிஷேகம் இனிது நடைபெறவும் ஈழவளத்

இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
(இராஜபுரம்)
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6953

புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு
சரவணா
ரெக்ஸ்
கிளை 1 - 526, 529 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 1723
கிளை 2 - 770, 772 கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 0421

மகாராணி
பட்டுச்சோலை
50, Grand Bazaar, Jaffna.
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212223104

லக்சுமி
பான்ஸி
234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0779582566

சிவகணேசன்
ரெக்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்த பொருள்களைத் தெரிவுசெய்ய
சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்
157, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
கே.கே.எஸ். வீதி, இணுவில்
தொ.பே.: 021 222 2045

S.T. பரமேஸ்வரன்
அன் கொம்பனி
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.


B.M.
ரெக்ஸ்ரைல்ஸ்
251, 1/10, மெயின் சிற்றி மாக்கற்,
கொழும்பு - 11

பொதிகள் உட்பட உள்நாடு, வெளிநாடுகளில்
உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள்,
அன்பளிப்புப் பொருள்கள் DVD, CD போன்ற
பொருள்களை மிகவிரைவாகவும்
பாதுகாப்பாகவும் அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212227835

யாழகம்
568, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே.: 0212225563
யாழ். முகவர்
MARKETING
38, Clock Tower Road,
Near Police Station.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)
## சிறப்பு மலர் 06. 06. 2011



ம் மஹா
க நடை
முருகர்,
1963 ஆம்
கோயில்
அர்த்த
, சுப்பிர
ந்தாவது

டுமானப்
நாட்டின்
வியுடன்
வர்ணம்
ற்றினர்.
த திருப்
களுக்கு
சிற்பக்
லகோடி

விதியைச்

சேர்ந்த அறைகள் சுவர்கள், நிலவேலைகள், கூரைகள் ஆகியவற்றை அகற்றி புதிதாக அமைத்தனர். நடராஜசப்பெருமானின் திருத் தாண்டகத்தையும் சிற்பச்சிலையாக வடிவமைத்துள்ளனர். 2010இல் திருப்பணிச் சபையும் அடியார் சபையும் ஒன்று சேர்ந்து அடியார் சபையாக உருவாக்கியுள்ளனர். இந்தச்சபையினர் கர்ப்பக் கிரகங்கள் யாவற்றையும் திருத்தம் செய்ததோடு வசந்த மண்டபத்தையும் அழகு மிளிரத் திருத்தி வர்ணம் பூசியுள்ளனர். மேலும் ஐயனார் கர்ப்பக் கிரகத்தின் உள் சுவர்களிலும் நடேஜப் பெருமானின் அம் பலச்சுவர்களிலும் பளிங்குக்கல் போல் பட்டம் தீட்டிய கருங்கல் தகடுகள் பதிக்கப்பட்டதனால் கர்ப்பக்கிரகம் அழகாக காட்சியளிக்க வைத்துள்ளனர்.

இன்று மஹா கும்பாஷேகத்தை நடத்த இந்தச் சபையினருக்கு திருவருள் பாலித்துள்ளது. இவ்வளவு காலமும் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகங்களை விடச் சிறந்ததாக முப்பத்தி மூன்று குண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமாக விளங்குகிறது.

பூரணை, புட்கலை சமேத ஐயனாருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கும் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் அடுத்தடுத்து கற்பகக் கிரகமும் வானளாவ ஒங்கி உயர்ந்த இரு ராஜகோபுரங்களும் சமாந்தரமாக கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. இந்த விதமான அமைப்பு எத்தத் தலத்திலும் இல்லை எனக் கூறலாம்.

இந்த ஆலயத்தில் அருள்பாலிக்கும் நடராஜமூர்த்தியின் திருவுருவம் சு[illegible]யம்சம் நிறைந்த படைப்பாக விளங்குகின்றது. வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் இரு மருங்கிலும் தொழுதேத்த, முயலகன் மேல் ஊன்றிய வலப்பாதமும் தூக்கி வளைத்த குஞ்சிதபாதமும் விளங்க, சிவகாமி அம்மையுடன் தரும் காட்சி அற்புதமானது. இந்தப் பாவனையில் அமைத்த திருவுருவம் இந்தியாவிலும் இரண்டு ரொரு தலங்களில் மாத்திரம் காணக்கூடியதாக உள்ளதாக தென்னிந்தியச் சிற்பக்கலைஞர்கள் வியம்புகின்றனர்.

மார்கழி, பங்குனி, ஆடி ஆகிய மாதங்களில் பெருந்திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. இதில் மார்கழித் திருவாதிரை உற்சவமே சிறப்பு வாய்ந்ததாகும். திருவெம்பாவைக் காலத்தில் விசேட அபிஷேக ஆராதனையுடன் காலை, மாலை திருவெம்பாவை பாடல் ஓதலும் எம்பெருமான் திருவீதி உலா வரும் காட்சியும் இடம் பெறும். 9 ஆம் நாள் ஆடல்வல்ல நடராஜப்பெருமான் சிவகாமி அம்மையுடன் ஆனந்தநர்த்தனம் ஆடிய வண்ணம் தேருக்கு எழுந்தருளும் காட்சி உள்ளத்தை ஈர்க்கும். பெரும் வீதியில் ஐந்து தேர்கள் ஒன்றன் பின் ஒன்றாக பவனிவரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும் அன்று நள்ளிரவு முதல் ஆனந்தக்கூத்தனுக்கு பல நூறு குடங்களாக பால், தயிர், நெய், தேன், இளநீர் முதலிய அபிஷேகப் பொருள்களால் அபிஷேகமும் ஆருத்திரா தரிசனக் காட்சியும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களை ஆனந்தப் பரவசமாக்கும்.

ஈழத்துச் சிதம்பர புராணம், ஆண்டிகேணி ஐயனார் புராணம் என்னும் தல புராணங்களும் கார்த்திகேயப் புலவரின் திண்ணபுர அந்தாதிப் பாடல்களும் நாகமுத்துப்புலவரின் சுந்தரேஸ்வரர் திருப்பதிகமும் பஞ்சாட்சரக் குருக்களின் திண்ணபுரவெண்பாடல் நூல்களும் இந்தத் தலத்தின் பெருமையை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த எம்பெருமானை வாயாராப் பாடியும் ஆதரித்தும் போற்றியும் வழிபடுவதற்கும் என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்று புளங்காகிதம் அடைந்து வழிபட்டு உய்வோமாக.

பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை,
ஓய்வு நிலை அதிபர், தலைவர், காரைநகர் மணிவாசகர் சபை.



### பாவங்கள் தீர்க்கும் பராபரனை பணிவோம்



ஈழத்திலே பிரசித்தி பெற்ற காரைநகர் சிவன் கோயில் (ஈழத்து சிதம்பரம்) மிக சிறப்பு வாய்ந்த ஓர் புண்ணிய ஸ்தலமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமைந்த அற்புத க்ஷேத்திரமாகும். பஞ்சகிருத்திய நாயகனான சௌந்தராம்பிகை உடனுறை ஸ்ரீ சுந்தரேசப் பெருமான் அடியார்களின் துயர்துடைக்கும் கருணைக் கடலாக விளங்குகின்றார். இந்த ஆலயத்திலே ஆண்டுதோறும் நிகழும் மார்கழிமாத திருவெம்பாவை உற்சவம் மிகவும் எழுச்சி மிக்கது. உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலிருந்தும் அடியார் கூட்டம் திரண்டு வந்து தில்லைக்கூத்தனை வணங்கி செல்வார்கள். இந்த விழாக்காலங்களில் மாணிக்கவாசகர் மடாலயத்தினரின் மகேஸ்வர பூஜையும் வெகு சிறப்பாக நிகழும் இங்கு ஸ்ரீ ஐயனாரும் தனி சந்நிதி கொண்டு அருளாட்சி புரிந்து வருகிறார் சிறப்புக்கள் பொருந்திய இந்த ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் உத்தமோக்த முப்பத்தி மூன்றுகுண்டங்கள், நவகுண்டங்கள், பஞ்சகுண்டங்கள் அமைக்கப்பெற்று வெகு விமரிசையாக நிகழுகின்றது. இந்தக் கைங்கரியங்கள் நிறைவுற உதவிய 'அன்பர்கள், அடியவர்கள் யாவருக்கும் பரிபூரணமான இறையருள் கிட்டவும் மக்கள் அனைவரும் துன்பமும் துயரமும் நீங்கி சகல வளங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ அவன் தாள் வணங்கி எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

*'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.'*

ஞானாபானு
சிவஸ்ரீ சாலவ.கே.ராஜப்பாசிவாச்சாரியர்
பரம்பரை ஸ்தானிகர்,
காஞ்சிபுரம் ஏகாம்பர நாதேஸ்வரர் தேவஸ்தானம்,
ஸ்ரீ கைலாச நாத சுவாமி தேவஸ்தானம்.

## [ஈ]ழவளத் திருநாட்டு மக்கள் குறைவின்றி வாழவும் பிரார்த்திப்பவர்கள்:

**லலிதா றெக்ஸ்**
(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)
இல.5,6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5260

**சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்**
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
**சிவகுமரன் என்ரப்பிறைஸ்**
75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**ஏகாம்பரம் புடைவை மாளிகை**
72(9), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**எனது ஊர் காரைநகர்**
கனடாவில் இருந்து
வெளிவரும் காலாண்டுச்
சஞ்சிகை
w.w.w. karai news. com
எமது இணையத்தள முகவரி
மூலம் காரைநகர்
மஹாகும்பாபிஷேக நிகழ்வை
அன்றைய தினமே உலகெங்கும்
கண்டு களிக்கலாம்.

**ARRUL GLOBAL EXPRESS**
INTERNATIONAL COURIER & CARGO SERVICE
வெளிநாடுகளுக்கான துரித
கடிதங்கள், பொதிகள் சேவை.
இல.1 பிறவுண் வீதி,
நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

**UNI**
**Travels and Tours**
Colombo - Jaffna
*162, Hospital Road, Jaffna.*

**சுப்பசூஸ்**
154, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கற்,

**ராஜா வீடுகள், காணிகள், கடைகள் விற்பனை நிலையம்**
யாழ்.மாவட்டத்தில் எப்பகுதியிலும் கடைகள், காணிகள்
நியாய விலையில் வாங்கித்தரவும்
நியாய விலையில் விற்றுத்தரவும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**ந.தர்மராசா (M.G.R)**
51, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776033259

**YOGA TRANSPORT**
கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய
இடங்களுக்கான பொதி போக்குவரத்து சேவையாளர்
குறைந்த கட்டணத்துடன் விரைவான சேவை
No. 261 1/12, 1/14
Main City Market,
Main Street, Colombo - 11
T.P.: 2445344
Mobile: 0773874263,0777560682

No. 02, Thiruvalluvar Lane,
Arasady Road,
Kantharmadam.
T.P.: 021 222 9042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
06 ஜூன் 2011 திங்கட்கிழமை



யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற மணவாளக் கோல விழாவின் போது கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துகின்றார்.

# அபிவிருத்திச் சபையின் தன்னலமற்ற சேவை அதனைச் சார்ந்த வளர்ச்சியில் தங்கியுள்ளது

## யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்

தென்மராட்சி, ஜூன் 6

அபிவிருத்திச் சபையின் தன்னலமற்ற சேவை அதனைச் சேர்ந்த நிறுவனத்தின் வளர்ச்சியில் தங்கியுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை யுத்தத்தால் பாதிப்படைந்திருந்தாலும் இன்று பெரிய கட்டட வசதிகளுடன் சேவையை வழங்குவதற்குக் காரணமாக விளங்குவது. அபிவிருத்திச் சபையின் நிர்வாகிகளின் உன்னதமான பங்களிப்பும் வைத் திய நிபுணர்களின் ஒத்துழைப்புமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டத்தில் முதன்மை விருந்தினராக்கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏனைய வைத்திய சாலைகளில் உள்ள அபிவிருத்திச் சபைகளின் செயற்பாட்டுக்கு இந்த வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை முன்மாதிரியாகத் திகழ்கிறது.

இந்த அபிவிருத்திச் சபையின் செயற்பாட்டுக்குப் பிரதேச மக்களும் புலம்பெயர் வாழ் பிரதேச மக்களும் மனமுவந்து வழங்கிவரும் பெரும் பங்களிப்பே காரணமாக அமைந்துள்ளது.

இந்த வைத்தியசாலை பல பிரதேச மக்களின் கேந்திர நிலையமாகமாறி வருகிறது. இந்த நிலையில் இதனை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வைத்தியசாலையாக மாற்ற வேண்டியது அவசியமாகின்றது.

இந்த வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் சத்திரசிகிச்சை விடுதி, பொது மருத்துவ விடுதி, வைத்தியர்கள் வதிவிடம் போன்றவை இன்னும் இரண்டு மாதங்களில் பூர்த்தியடைந்துவிடும்.

அதன்பின்னர் இந்த வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கேற்ப அவர்களுக்கு முழுமையான சேவையை வழங்கவேண்டிய பணி எமது திணைக்களத்துக்கும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கும் நிறைய உண்டு.

வருட இறுதிக்குள் தாதியர் பயிற்சிப் பாடசாலையிலிருந்து வெளியேறும் தாதிய உத்தியோகத்தர்கள் அனைவரையும் மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு நியமிக்குமாறு கோரியுள்ளோம். இந்த வருட இறுதிக்குள் தாதிய உத்தியோகத்தர்கள், மருந்துக் கலவையாளர்கள், குடும்பநல சேவையாளர்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு விடும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

வைத்தியசா லைக்கு வரும் நோயாளர்களுக்கும் மக்களுக்கும் எமது சுகாதாரத் திணைக்களத்துக்குமிடையில் இணைப்புப் பாலமாக திகழும் வைத்திய சாலை அபிவிருத்திச் சபையின் நிர்வாகிகளின் அர்ப்பணிப் பான செயற்பாட்டைப் பாராட்டாமல் இருக்க முடியாது - என்றார்.

(ம-207)

# பனைசார் பொருள்களுக்கான கேள்வி அதிகரிப்பு; உற்பத்தியாளர் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூன் 6

தென்பகுதியில் பனைசார் பொருள்களுக்குக் கேள்வி அதிகரித்துள்ளமையால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பனைசார் உற்பத்திகளைச் சிறந்ததாகப் பயன்படுத்த வேண்டும்.

உற்பத்திகளின் அதிகரிப்பும் வேறுபட்ட மாற்றங்களும் அதிகளவு இலாபத்தைப் பெறுவதற்கு உந்துதலாக அமையும். இவ்வாறு தெரிவித்தார் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம்.

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் வல்லை தும்புப்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையில் கடந்த 40யுவதிகளுக்கான பனங்கைப் பணிப் பயிற்சியின் ஆரம்பநாள் நிகழ்வில் உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

பனை வளத்தின் பயன்கள் அதி உச்சமாக இருந்தாலும் அவற்றில் 15 வீதம் மட்டுமே மக்களின் பயன்பாட்டுக்கு உகந்ததாக உள்ளது.

ஏனைய 85 வீதமான பனை வளங்கள் யாவும் வீணாகப் போகின்றன.

பனைவளம் சித்த மருத்துவ குணங்களைக் கொண்டதுடன் அதிகளவு வருமானத்தையும் தரக்கூடியது. இதனை நாம் சரியான வழிகளில் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அத்துடன் தென்பகுதியில் பனைசார் உற்பத்திகளுக்கு அதி கூடிய கேள்வி உள்ளது.

நாம் சிறந்த உற்பத்திப் பொருள்களை வேறுபட்ட வடிவங்களில் உருவாக்க வேண்டிய தேவையுள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு தேசிய வடி வமைப்பு நிலையத்தின் பயிற்று விப்பாளர்களின் உதவியுடன் பனங்கைப்பணிப் பயிற்சியை விரிவுபடுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அதனடிப்படையில் அச்சுவேலிப் பிரதேசத்தில் 40 யுவதிகளுக்குப் பனங்கைப்பணிப் பயிற்சியை வழங்க முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பனங்கைப்பணிப் பயிற்சியை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் திட்டமாக "சிறுசுவடுகள்" அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுய பொருளாதார அபிவிருத்திக்கான திட்டங்களையும் மேற்கொள்ள முடியும்.

உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க பனை அபிவிருத்திச் சபை தனது சேவையை எப்போதும் வழங்கும்.- என்றார்.

(ம-313)

# நல்லூர் கோட்ட மட்ட ஆங்கில தினப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நல்லூர் கோட்ட மட்ட ஆங்கில தினப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. போட்டிகளில் வெற்றிபெற்றோரின் விவரம் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது அந்த விவரத்தின் தொடர்ச்சி வருமாறு:

**ஆக்க எழுத்துத்திறன்**

**தரம் - 08**

எஸ்.இந்துஜன் (யாழ். இந்துக் கல்லூரி), கே.அர்ச்சனா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரி.தனுசிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம்-09**

பி.மேசிகன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.பராபரன் (யாழ். இந்துக் கல்லூரி), பி.பிரகாசினி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம்-10**

ஆர்.சுவேஸ்வரன் (யாழ். இந்துக் கல்லூரி), ரி.லக்ஸ்மன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். ஜெயப்பிரணவன் ( கொக்குவில் இந்துக் கல்லூரி.)

**தரம்-11**

எஸ்.சிவானுஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.குணவரன் ( யாழ்.இந்துக் கல்லூரி), ஆர்.தாரிகா (இந்து மகளிர் கல்லூரி).

**தரம்-12**

ஏ.ஆராஅமுதன் (யாழ். இந்துக் கல்லூரி), ஈ. பார்த்தீபன் (யாழ். இந்துக் கல்லூரி), வி.ஜியானி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம்-13**

வி.கஜலக்ஸன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.மகிழன் (யாழ்.இந்துக் கல்லூரி), எல் சுமந்தரன் (யாழ்.இந்துக் கல்லூரி). *முற்றும் (வ-311)*

# சுற்றாடல் தின போட்டிகளில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூன் 6

2011ஆம் ஆண்டின் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சுற்றாடல் கட்டுரைப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சிவானந்தராஜா தனுராஜ் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் மாவட்ட மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன் சொர்ண லிங்கம் தனுமதனும், மூன்றாம் இடத்தை இணுவில் இந்துக் கல்லூரி மாணவி சுகிதா தர்ம லிங்கமும் பெற்றுக்கொண்டனர்.

(ம-313)

# நிர்வாகிகள் தெரிவு

நாவற்குழி, ஜூன் 6

கைதடி- நுணாவில், நுணாவில்குளம் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபைக்குப் புதிய நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.தலைவர் க.கதிர்காம நாதன், செயலாளர் கா.உருத்திர சுந் தரம், பொருளாளர் க. விக்னேஸ்வரன்.

(ம-121)

# நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளராக எஸ்.இராச நாயகம் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளராக கடமையாற்றிய திருமதி ப.சிவலிங்கம் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் வடக்கு மாகாணப் பொது நிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளராக கடமைபுரிவதுடன் யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் மற்றும் கிளிநொச்சிப் பிராந்திய ஆணையாளர் ஆகிய பதவிகளுக்கான கடமைகளையும் பொறுப்பேற்றுள்ளார் .

(எ-288)

# இந்து பௌத்த பேரவையின் கலந்துரையாடல்

இந்து பௌத்த கலாசாரப் பேரவையினால் இந்து பௌத்த குருமார்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குக் கொழும்பு இராஜகிரியவில் அமைந்துள்ள தேசிய தகவல் மற்றும் ஆராட்சி நிலைய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்து பௌத்த கலாசார இணைப்புச் செயலாளர் எம்.ரி. எஸ்.இராமச்சந்திரன் தலைமையில் இந்து சமயமும் பௌத்த சமயமும் வெவ்வேறு சமயங்களாக இருந்துகொண்டே தத் தமது சமயங்களை பேணிப்பாது காத்துக் கொண்டே எவ்வாறு சமய, சமூக நடவடிக்களை முன்னெடுக்கலாம் என்னும் தொனிப் பொருளில் கலந்துரையாடப் படவுள்ளது.

(ம-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமாள் கோயில் கோபுரத்தில் இராமாயணத்தை விளக்கும் சிற்பங்கள்



(சென்றவாரத் தொடர்ச்சி)

ஈழத்துத் திருப்பதி எனப் போற்றப்படும் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் 1978 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகமும் 1985 ஆம் ஆண்டு சம்புரோஷண கும்பாபிஷேகமும் சாமி விஸ்வநாதக் குருக்களால் நடத்தி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டு அந்தரீத கும்பாபிஷேகமும் வருடாந்த கும்பாபிஷேகமும் இடம் பெற்றது. தெய்வ சக்தியை வலுப்படுத்தவும் நித்திய, நைமித்திய கிரியைகளில் வரும் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும் எனும் நோக்கில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாகும்பாபிஷேகம் நடை பெறவேண்டும் என ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

அதன்படி மகா கும்பாபிஷேகங்களை தவறாது நடத்தியும் வருகின்றது இந்த ஆலயம்.

2003 ஆம் ஆண்டு இடம்பெற்ற மகா கும்பாபி ஷேகத்தின்போது ஸ்ரீ ரங்கநாதர் வாயில் ராஜகோபுரம், பரிவார மூர்த்திகளுக்கு நூதன ஆலயம், சுதர்ஸன மூர்த்தி போன்றன சிறப்பாக அமைத்து புதுப்பொலிவுடன் காணப்பட் டன.

ஆலயம் உருவாக்கப்பட்ட காலத்தில் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் விக்கிரகமும் மட்டுமே ஸ்தாபிக்கப்பட்டு இருந்தன. அதனைத் தொடர்ந்து 18 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீதேவி பூமிதேவியுடன் கூடிய ஸ்ரீ வரதராஜப் பெருமாள் விக்கிரகங்கள் கருவறையில் வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1940 ஆம் ஆண்டு ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளின் சிறிய விக்கிரகத்தை கருவறையின் மத்தியில் அமைத்து அதன் பின்னால் ஸ்ரீதேவி. பூமிதேவி சமேதரான ஸ்ரீ வரத ராஜப் பெருமாள் சாயா விக்கிரகமாக ஸ்தாபிக்கப்பட்டன.

கருவறையில் அமைந்துள்ள சுதை விக்கிரகங்கள் அமைந்துள்ள விமானம் அட்டகோண வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் அமையப்பெற்றுள்ள சுதை விக்கிரகங்கள் கிழக்காக வேங்கடேசப் பெருமாளும் நாராயண மூர்த்தியும், ஸ்ரீதேவி கல்யாணக் காட்சியும், தெற்காக நரசிம்ம மூர்த்தியின் தொடையில் ஸ்ரீதேவி அமர்ந்திருக்கும் காட்சியும், மேற்கில் சூரிய நாராயண மூர்த்தியுடன் ஸ்ரீதேவி, பூமிதேவி அமர்ந்திருக்கும் காட்சியும், வடக்காக ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஐந்து தலை அரவத்தின் மீது ஸ்ரீதேவி பூமிதேவியுடன் அமர்ந்திருக்கும் காட்சியும் இருப்பதுடன் நான்கு திசை களிலும் சிம்மங்களுடன் கூடிய கருடர்கள் இடம்பெற்று உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1948 ஆம் ஆண்டு ஸ்ரீ ரெங்கநாத சுவாமியின் பீடம் உருவாக்கி அதற்கு விமானமும் அமைக்கப்பட்டது.

இதில் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீ ரெங்கநாதர் அரவத்தின் மீது பள்ளி கொள்ளும் காட்சியும், ஸ்ரீ கிருஷ்ணன் குழல் ஊத ராதை திருப்பாதம் அருகே இருந்து [illegible]சயை இரசிக்கும் காட்சியும் காணப்படுகின்றன.

ஸ்ரீ ஆண்டாள் தேவி விமானத்தின் சிற்பத்தில் ஆணடாளின் திருவுருவமும் ஸ்ரீ உருக்குமணிதேவி சத்தியபாமா சமேதரான ஸ்ரீ கண்ணனது காட்சியும் இடம்பெறுகின்றன.

யாகசாலையின் முன்பகுதியில் இடம்பெறும் சி[illegible]கள் இரு பக்கங்களும் சங்கும் சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளன. தேரடியில் ஆஞ்சநேயர் சிற்பங் களும் உள்ளன.

1978 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முதற் கோபுரமான ராஜகோபுரம் இலங்கையில் மிக உயரமான கோபுரமாக மக்களால் கணிக்கப்பட்டது. இந்தக் கோபுரத்தில் சப்த மதங்களில் இடம்பெறும் சுதை விக்கிரகங்கள் வடபகுதி முழுவதும் ஸ்ரீ ராமாயண காவியத்தையும் தென்பகுதி முழுவதும் ஸ்ரீ .மத்பாகவத கதையையும் சித்தரிப்பதாகவுள்ளன.

சோபனா

(தொடரும்)

# தமிழின அழிப்பு நடவடிக்கையின் ஆரம்பமாக தீக்கிரையாக்கப்பட்ட யாழ்.பொதுசன நூலகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

எஸ்.யேசுதாஸ்

பல்வேறுபட்ட கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், வழிகாட்டிகள், அறிக்கைகள் போன்றன பிரதான சேர்க்கைகளாகவும், பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஏனைய வெளியீடுகள் தொகுதிகளாகக் கட்டப்பட்டு மக்கள் பாவனைக்காக யாழ்.பொதுசன நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு கல்விக் கோபுரமாக விளங்கிய யாழ்.பொதுசன நூலகத்தின் எழுச்சியைச் சிதைக்கும் வகையிலான பேரதிர்ச்சியும், சோகமும் நிறைந்த கண்டனத்துக்குரிய தமிழ் அழிப்பு நடடிவடிக்கையின் ஓர் அங்கம் 1981 மே மாதம் நள்ளிரவு வேளை அரங்கேற்றப்பட்டது. 1933இல் இருந்து காலங்காலமாக எத்தனையோ அறிஞர்கள், தமிழ் அபிமானிகள், நகரபிதாக்கள், ஆணையாளர்கள் நூலகங்களின் பெருமுயற்சியால் வாழ்வில் உயிரூட்டமாகவும் அறிவு முதிர்ச்சியின் வித்தாகவும் மனிதனின் நல்வாழ்வுக்கு திறவுகோலாகவும் கல்வி ஊற்றின் கலைக்கோயிலாகவும் சுமந்து வரப்பட்ட அறிவுப் பெட்டகம் இனவாதிகள் இட்ட தீயில் எரிந்து சாம்பரானது.

எரிந்தது நூலகம் மட்டுமல்ல முழு உலகின் தமிழ் நெஞ்சங்களும் அனலாய் எரிந்து வெந்து லோங் அடிகளாரின் கனவு நனவாகிவரும் வேளையில் நூலகம் சாம்பல் மேடான செய்தி கேட்டு மூத்த தமிழ் அறிஞரும், 33 மொழிகளில் பாண்டித்தியமும், 100இற்கு மேற்பட்ட மொழிப்பரீட்சயமும் கொண்ட நடமாடும் பல்கலைக் கழகமான வண.பிதா தாவீது அடிகள் அதிர்ச்சியால் அடங்கிப்போனார்.

வீழ்ச்சி எழுச்சிக்கான படிக்கற்கள் என்பது போல் நூலகம் மீள்விக்கப்பட வேண்டிய சிந்தனை புதிய உத்வேகத்துடன் உருவாகியது. யாழ்.மாநகர விசேட ஆணையாளராக இருந்த சீ.வீ.கே.சிவஞானம், பேராசிரியர் கு.நேசையா, முதல்வர் இ.விஸ்வநாதன் ஆகியோரின் முயற்சி கை மேல் பலன் கொடுத்தது. புலம்பெயர் தமிழர்கள் கல்விப்புலம் சார்ந்தவர்கள் மத நிறுவனங்களின் சமூக, வர்த்த அமைப்புகள் மற்றும் அரச பொது நிறுவனங்களின் பங்களிப்புடன் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியது.

சில மாதங்கள் நகரசபை மண்டபத்தின் பத்திரிகை,சிறுவர் பகுதிகள் நடைபெற்று எரிந்த கட்டடத்தின் வடக்குப் பக்கப் பிரிவுகள் திருத்தப்பட்டு 10.12.1982 இல் சிறிய அளவில் இயங்கத்தொடங்கியது. புனரமைப்பு வேலைகள் நடைபெற்ற அதேவேளை முனியப்பர் கோவில் பக்கமாக பழைய கட்டடத்துடன் இணைத்து புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கத்தினால் 04.06.1984இல் திறந்து வைக்கப்பட்டது.

இழந்த நூல்களுக்கிணையான நூற்தொகுதி கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நூலக வாரம் மூலமாக நூலக திரட்டல் நடைபெற்றது. தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் 5 இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களையும் தமிழ்நாடு அரசும் பல் லட்சம் பெறுமதியான நூல்களையும் அன்பளிப்புச் செய்தது.

இவ்வாறு புது மெருகுடன் புத்துயிர் பெற்று இழப்புக்களில் இருந்து மீண்டு எழும் வேளை 1985 இல் யாழ் கோட்டைப்பிரதேசம் [illegible] நூலக சேவை [illegible] நூல்களில் இழப்பைத் தடுக்கவும் வாசகர்களின் தேவைகளை நிறைவேற்றவும் நூலக சேவையினை பரவலாக்கம் செய்யப்பட வேண்டிய தேவையை நூலக ஆலோசனை குழுவினர் முன் வைத்தனர்.



இதன் பிரகாரம் யாழ் மாநகர சபைப்பகுதிக்குள் பல கிளை நூலகங்கள் அமைக்கப்பட்டன. நல்லூர், குருநகர், வண்ணார்பண்ணை, சுண்டுக்குளி, முஸ்லிம் வட்டாரம் போன்ற இடங்களில் நூலகங்களும், தமிழ் இலக்கியம், மொழி, கலாசாரம், பண்பாடு தொடர்பான நூல்களை தனித்துவமாக பேணிக் காக்கவும் உசாத்துணை நூலகமாகவும் நாவலர் ஞாபகார்த்த மண்டபத்தில் 1985 இல் கலாசார நூலகமும் திறந்து வைக்கப்பட்டன. இவற்றை விட நாவாந்துறையில் வாசிகசாலையும் நடத்தப்படுகிறது.

நல்லூர் பண்டார மாளிகை வளவில் மாநகர சபை அலுவலகத்தில் பின்புறமாக சங்கிலியன் வீதியில் அமைக்கப்பட்ட இரண்டாம் தர நூலகம் 12.10. 1988 இல் ஆணையாளராக இருந்த சீ. வீ.கே. சிவஞானத்தால் திறந்துவைக்கப்பட்டது.

இதேநேரம் நூல்களின் தொகையை பழைய நிலைக்கு கொணடுவர முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆணையாளர் வே. பாலசிங்கத்தின் தீவிர முயற்சியால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் தரைப் பாதை தடைப்பட்ட நிலையில் கப்பல் மூலமாக பல தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்ப[illegible]

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உறவினர் ஒருவரின் வீட்டிற்குப் பொருள்கள் வாங்கிக் கொண்டு செல்லலாம். உங்களுக்கு வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். உடல் நலத்தை பேணிக்காக்க கூடுதல் நேரம் உடற் பயிற்சியில் ஈடுபடுவீர்கள். முக்கியமான ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் விமர்சிப்பீர்கள்.

**இடபம்:**
பழைய சம்பவங்களை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். உங்களின் யோசனைகளுக்கு குடும்பத்தினர் மத்தியில் அதிக வரவேற்பு இருக்கும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகிவிடும். கனிவாகப் பேசி சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள்.

**மிதுனம்:**
வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். மனைவி, குழந்தைகளுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். அயலாரிடம் உங்களின் கடந்த கால பெருமைகளைப் பேசுவீர்கள். சில வேலைகளை ஒன்றுக்கு இரு முறை செய்யலாம்.

**கடகம்:**
எதிர்பாராத உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். உறவினர் ஒருவர் உங்களிடம் உதவி கேட்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம்.

**சிங்கம்:**
சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். பண விடயங்கள் தொடர்பாக சிலரிடம் கண்டிப்பாக நடந்து கொள்வீர்கள். உங்களின் செயற்பாடுகளை நண்பர்கள் அல்லது உறவினர்கள் விமர்சிக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.

**கன்னி:**
விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளலாம். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். குடும்பத்தினரின் கோரிக்கை ஒன்றை நிறைவேற்றி வைப்பீர்கள். சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். இனிய நாள்.

**துலாம்:**
நிறுத்தி வைத்த சில வேலைகளை சுறுசுறுப்பாகச் செயற்பட்டு முடிப்பீர்கள். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு திடீரென வரலாம். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். மதிப்பு, கௌரவம் மேம்படும்.

**விருச்சிகம்:**
செய்ய நினைத்த வேலை ஒன்றை சோம்பலால் மாற்றி அமைப்பீர்கள். நண்பர்கள் அல்லது முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். உங்களுக்கு உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். சிலர் மீது சந்தேகப்படலாம்.


**தனுசு:**
இரண்டு, மூன்று நாள்களுக்குரிய வேலையை இன்றே சேர்த்துச் செய்யலாம். சில விடயங்களில் முடிவு எடுக்க முடியாமல், குழப்பங்கள் தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையும். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது இடர்பாடுகள், சிரமங்கள் உண்டாகலாம்.

**மகரம்:**
சில விடயங்களில் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் செய படுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிக க்கும். பழைய நண்பர் மூலம் புதிய நண்பர் ஒருவரின் அறிமுகம் கிடைக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு ஒன்று கிடைக்கும்.

**கும்பம்:**
உறவினர்கள் சிலரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். இதோ, அதோ என இழுத்துக் கொண்டிருந்த காரியம் ஒன்று நடக்கலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சி நடக்கலாம். . சில விடயங்களில் தயக்கம் இல்லாமல் துணிச்சலாகச் செயற்படுவீர்கள்.

**மீனம்:**
உறவினர் அல்லது நண்பர் ஒருவருடன் வெளியூர் பயணம் செல்லலாம். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை அதிக விலைக்கு வாங்குவீர்கள். உங்களுக்கு தீங்கு செய்த ஒருவரிடமும் அதை வெளிக்காட்டாமல் அமைதியாக நடந்து கொள்வீர்கள். உறவினர் ஒருவர் தங்களுக்கு வேண்டியவருக்காக உங்களிடம் உதவி கேட்கலாம்.

# நீங்க
# நாடய
# நாங்க
# வேறு



எனக்கு ஒன்றுவிட்ட நண்பன் ஒருவன் இருந்தான். அதாவது எனது நண்பனின் நண்பன். அவன் எந்தநாளும், எந்த நேரமும் மப்பில்தான் இருப்பான். மூச்சுவிட மறந்தாலும் கூட, குடிப்பதற்கு அவன் மறப்பதேயில்லை. சந்தோஷமோ துக்கமோ எதுவானாலும் அதை அவன் தன்னுடைய குடிமூலமே வெளிப்படுத்துவான். அதனால் அவன் குடிப்பதற்குச் சாட்டுக்கள் தாராளமாகக் கிடைத்து வந்தன. ஒருநாள் ''எக்ஸாமில் மார்க்ஸ் குறைஞ்சிட்டுதடா'' என்று சொல்லி பியர் போத்தலுடன் வந்து நிற்பான். இன்னொரு நாள் ''மச்சான்! எனக்குத் தானடா கிளாஸ் 'ரொப்' மார்க்ஸ்'' என்றவாறு நிறைவெறியோடு வருவான். சாட்டுள்ள மட்டும் அவனது குடிவெறிக்கும் குறைவில்லை.

சாட்டுக்களை அவனே வலிந்து உருவாக்கிக் கொள்வதிலும் வலுகெட்டிக்காரன். அவன் பாயில் படுக்கிறானோ அல்லது கட்டிலில் படுக்கிறானோ தெரியாது. ஆனால் நிச்சயமாக வாந்தி எடுத்து விட்டு அதன் மேலேதான் நித்திரை கொள்வதை வாடிக்கையாகக் கொண்டிருந்தான். அப்படிப்பட்ட மரணக்குடிகாரன், ஒருநாள் திடீரென வெள்ளையும் வீபூதியுமாக விடியற் காலையிலேயே நண்பனின் வீட்டுக்குச் சென்றிருக்கிறான். எந்தநேரமும் மப்பும் மந்தாரமுமாக நிற்பவன் இப்படிச் சாமியார் போல் வந்து நிற்பதைக் கண்டதும் நண்பனால் தன் கண்ணையே நம்பமுடியவில்லை. அதைவிட அதிர்ச்சி, குடிகார நண்பனின் வார்த்தைகள் தந்தன. ''மச்சான்! நான் குடிக்கிறதை விட்டுட்டனடா!'' இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தான் காண்பது கனவல்லவே என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒருமுறை தன்கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டான் நண்பன். ''எப்பிடியடா? இப்படி மாறினாய்? நாங்களும் எத்தினை நாள் குடியை விடடா எண்டு சொல்லியிருப்பம்'' என்றான் நண்பன். ''ஓமடா! நீங்கள் சொல்லேக்க விளங்கேலை. நேற்று வீட்டைப் பெரிய பிரச்சினை. இனிமேல் குடிக்கக்கூடாதெண்டு அம்மா தன்ர தலையில அடிச்சுச் சத்தியம் செய்யச் சொன்னா. நானும் செய்து குடுத்திட்டனடா'' குடியை விட்ட காரணத்தை அவன் விளக்கினான். ''அப்பாடா! இப்பவாவது திருந்திட்டியே! அதுவே சந்தோஷம் தான்'' என்றான் நண்பன்.

''சரி! மச்சான் வாடா'' என்றான் வந்தவன்.

''எங்க?'' இது நண்பன்.

''மச்சான்! நான் குடிக்கிறதை விட்டது எவ்வளவு பெரிய சந்தோஷமான விசயம். அதைக் கொண்டாடாமல் எப்படி இருக்கிறது? வாடா 'பாருக்கு' போய் ரண்டு பியரை அடிச்சு இதைக் கொண்டாடுவம்'' இப்படிப்பட்டவர்களைத் தலைகீழாக நின்றாலும் திருத்தவே முடியாது. இவர்கள் ஏற்கனவே தமக்குத் தேவையான - வசதியான- முடிவுகளை எடுத்து விட்டு அதை நியாயப்படுத்த ஏதாவது காரணங்களைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருப்பார்கள். அதுபோலவே ஏதாவதொரு சாட்டை முன்வைத்து தமிழ் மக்களை தேவையற்ற இடையூறுகளுக்குள் வீழ்த்தக்கூடிய அவசரகாலச் சட்டத்தை ஆட்சிக்கு வந்த அரசுகள் நீடித்துக் கொண்டே வந்தன.

### அவசரகாலச் சட்டத்துக்கு ஆயுள் நீடிப்பு

அவசரகாலச் சட்டத்தை நீட்டிப்பது குறித்த பிரேரணைகள் வரும் போதெல்லாம் அதனால் தமிழ்மக்கள் படுகின்ற அவலங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொண்டைகிழியும்வரை எடுத்துரைத்தாலும் அவையெல்லாம் புறக்குடத்து நீர்தான். இவர்களின் குரல்களைக் கணக்கிலெடுக்காமல் அவசரகாலச் சட்டத்தின் ஆயுள் கூடிக் கொண்டே போனது. தமிழ் இளைஞர்கள் அள்ளியெடுக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். இராணுவம், சிவில் நிர்வாகத்தில் தன்னுடைய மூக்கை அடிக்கடி நுழைத்தது. யாழ்ப்பாணத்தை விட்டு வெளிமாவட்டங்களுக்குச் செல்ல 'கிளியரன்ஸ்' (பாதுகாப்பு அனுமதி) நடைமுறை உருவானது (பின்னர் இது தொடர்பாக நடந்த வழக்கில் கிளியரன்ஸ் முறையை நீக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது) கொழும்பில் வசிக்கும் தமிழர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து அந்தப் பதிவுத் துண்டைத் தம்மோடு எப்போதுமே வைத்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். பொலிஸாரோ, இராணுவத்தினரோ, புலனாய்வுத் துறையினரோ அவர்களைத் திடீரென விசாரிக்கும் போது தற்செயலாகப் பொலிஸ் பதிவுத் துண்டைக் கொண்டு வர அவர்கள் மறந்து போயிருந்தால் அவ்வளவுதான். கடவுளே வந்து ''இவர்கள் புலிகள் அல்ல'' என்று சத்தியம் செய்தால் கூட அப்பீல் கிடையாது. நேரே சிறைக்குள்தான் தள்ளப்படுவார்கள். சந்திக்குச் சந்தி இராணுவ நிலைகள் அமைக்கப்பட்டு போவோர் வருவோரெல்லாம் கீழிறக்கப்பட்டு அடையாள அட்டை பரிசீலிக்கப்பட்டு விசாரிக்கப்படும் நிலையும் அவசரகாலச் சட்டத்தால் வந்த விளைவுதான். செம்மணி தொடக்கம் தமிழர் வாழும் பகுதியெங்கும் புதிது புதிதாக முளைக்கும் புதைகுழிகளுக்கும் அவசரகாலச் சட்டமே ஆணிவேராக இருந்திருக்கிறது.

### இப்போது யார் காரணம்

இதுவரை காலமும் அவசரகாலச் சட்ட நீடிப்புக்குப் புலிகளின் இருப்பே முக்கியமான காரணமாக இருந்து வந்தது. ஆனால் புலிகளுடனான போர் முடிவடைந்த பின்னரும், யுத்தம் முடிவுற்றுவிட்டதாக அரசே உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னரும் அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேயில்லை. போர் நிறைவுக்கு வந்து 2 வருடங்கள் கழிந்துவிட்டன. அதன்பின்னர் இதுவரை புலிகள் தரப்பிலிருந்து ஒரு தோட்டா கூடப் படையினரைத் தாக்கவில்லை. சில சமூக விரோதிகளாலும் இராணுவத்தோடு சேர்ந்தியங்குபவர்களாலும் கொலை, கடத்தல் முதலான அசம்பாவிதங்கள் அரங்கேற்றப்பட்டன.


குறிப்பாக சங்கானையில் ஆலயக் குருக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் இராணுவத்தி னருக்குப் போதைப்பொருளைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலீடாகத் துப்பாக்கியை வாங்கிக் கொண்ட சிலரே பின்னர் கைது செய்யபட்டிருந்தனர். எனினும் இவர்கள் முன்னாள் போராளிகள் என்று கூறித் தப்ப முனைந்தது அரசு. யாழ்ப்பாணத்தின் இயல்பு நிலை யைக் குழப்புவது போன்று நடைபெற்ற அசம்பாவிதங் கள் கூட, படையினரை மீளவும் வீதிகளில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தவும் அவசரகாலச் சட்டத்துக்குத் தொடர்ந்து உயிர் கொடுக்கவுமே என்று பரவலாகப் பேசப்பட்டது.

இவ்வாறெல்லாம் துன்பத்தை மட்டுமே பரிசளித்துக் கொண்டிருந்த அவசரகாலச் சட்ட அரக்கனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு
# யா!
# க
# நாடு

மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்துக்கு தாவத் தொடங்கிவிட்டது. இலங்கையில் வேறெந்த இடத்திலும் இல்லாத புதுமையாகக் குடும்பப் பதிவு நடைமுறையைத் தமிழ்ப் பகுதிகளில் செய்து கொண்டு "தேசியம்; ஒரே நாடு" என்று தமிழர்களும் சொல்ல வேண்டும் என்று நினைப்பது மட்டும் என்ன நியாயம்? எப்போதும் தமிழர்கள் தம்மிலிருந்து பிரிந்தே இருக்க வேண்டும் என்பதே பேரினவாதத்தின் சிந்தனை.



அழிவே வராதா? என்று தமிழ் மக்கள் ஏங்கிக் கொண்டிருந்தனர். அவர்களின் நீண்ட கால ஏக்கத்தைத் தீர்த்து வைப்பது போன்று ஜூலை மாதத்தோடு அவசரகாலச் சட்டத்தை அரசு விலக்கிக் கொள்ளப் போகின்றது என்ற தகவல் பரவலாக அடிப்பட்டது.

### மீண்டும் குடும்பப் பதிவு

இதை ஆமோதிப்பது போன்று அரச தரப்பில் மௌனம் காக்கப்பட்டது. ''அடடா! அதிசயம் நிகழப் போகிறதா? அவசரகாலச் சட்டம் தொலையப் போகிறதா?'' என்று ஆனந்தப்படுவதற்கிடையில் மீண்டும் குடும்பப் பதிவு என்ற தலையிடி வந்து சேர்ந்திருக்கின்றது. யுத்தம் உக்கிரமடைகின்ற பொழுதுகளில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் குடும்பப் பதிவு என்பது கட்டாயமான நடைமுறை. இதன் படிமுறைச் செயற்பாடுகளை முடிப்பதற்கிடையில் உயிரே போய் வந்துவிடும். ஒரு சுபயோக தினத்தில் அதுவும் இராணுவத்தினர் குறிக்கின்ற நாளில் குடும்பத்தில் இருப்பவர்கள் அனைவரும் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்துக்கு முன்னால் கூட வேண்டும். அங்கு நீண்ட கியூவில் கால் கடுக்க வெயிலில் காய்ந்து சருகான தருணத்தில்தான் அவர்களின் பெயர்கள் ஒழுங்கு முறைப்படி கூப்பிடப்படும். அங்கு வலிந்த சிரிப்புடன் குடும்பத்தவர்கள் புகைப்படங்களுக்குள் உள்வாங்கப்படுவர். பின்னர் குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களின் விவரங்களை அதற்கேயான பிரத்தியேக விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்து, புகைப்படத்துடன் கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலுடன் தமது பிரதேச இராணுவ முகாமில் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் விடயம் முடிவுக்கு வந்துவிடாது. நாலைந்து முறை கால்தேய இராணுவ முகாமுக்கு அலைந்து திரிந்த பின்னரே குடும்பப்பதிவில் இராணுவ முகாம் பொறுப்பதிகாரியின் திருக் கரங்கள் கையொப்பத்தை இடும். அந்தக் கையொப்பத்துடன் கூடிய குடும்பப் பதிவு அட்டையை வீட்டின் முன்னால் 'நாவூறு கழிப்பது போல' தொங்க விட வேண்டும். எப்போதாவது கனவு கண்டுவிட்டு படையினர் வீட்டுக்கு வரும் போது, அந்தப் பதிவில் உள்ளவர்கள் அப்போது இல்லாவிட்டால் ''ஏன்? எதற்கு?'' என்று ஐன்ஸ்டீன் போல ஆராய்ச்சிகளும் நடக்கும்.

### அவசரகாலச் சட்டத்துடன்

இப்போது அதேபோன்று குடும்பப் பதிவுக்குரிய விண்ணப்பப்படிவங்கள் மக்களிடம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதுவும் அவசரகாலச் சட்ட விதிகளின் பிரகாரம் என்ற குறிப்புடன் இவை காணப்படுகின்றன. அவசரகாலச் சட்டமே காலாவதியாகப் போகிறது என்று கதைகள் வரும் நேரத்தில் இப்போது அதே அவசரகால விதிகளின் படி குடும்பப் பதிவை மீள அரசு மேற்கொள்வதன் மர்மம் எவருக்கும் துலங்கவில்லை. வடமராட்சியில் பருத்தித்துறைப் பகுதியில் வீடொன்றுக்குச் சென்ற இராணுவத்தினர் குடும்பப் பதிவு தொடர்பாக வீட்டில் உள்ளவர்களிடம் விசாரணையும் நடத்தியுள்ளனர்.

''வீட்டில் எத்தினை பேர்?''

''ஆராவது வெளிநாட்டில் இருக்கினமா?''

''இயக்கத்தில் ஆரும் இருந்தவையா?''

''வன்னியால வந்தனீங்களா?''

''ஏன் வன்னியில் இருந்தனீங்கள்?''

இப்படிக் குறுக்கு விசாரணைகள் நிகழ்ந்துள்ளன. சில மாதங்களுக்கு முன்னரும் இவ்வாறு குடும்பப் பதிவு தொடர்பாக நடவடிக்கை சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றம் வரை சென்றிருந்தது. அதன் பின்னர் அந்த நடவடிக்கை ஓய்ந்திருந்தது. இப்போது மறு படியும் வேதாளம் முருங்கை மரத்துக்கு தாவத் தொடங்கிவிட்டது. இலங்கையில் வேறெந்த இடத்திலும் இல்லாத புதுமையாகக் குடும்பப் பதிவு நடைமுறையைத் தமிழ்ப் பகுதிகளில் செய்து கொண்டு ''தேசியம்; ஒரே நாடு'' என்று தமிழர்களும் சொல்ல வேண்டும் என்று நினைப்பது மட்டும் என்ன நியாயம்? எப்போதும் தமிழர்கள் தம்மிலிருந்து பிரிந்தே இருக்க வேண்டும் என்பதே பேரினவாதத்தின் சிந்தனை. இந்தக் குடும்பப் பதிவு மூலம் அரசு தமிழர் களுக்குச் சொல்ல விரும்புவது

''நீங்க வேறு நாடய்யா! நாங்க வேறு நாடு!!!'' என்பதைத்தான்.

**ஔண்யன்**

## பெருங்கருணை நாச்சியார்



நந்திவர்மன் காலத்தில் நடந்த சம்பவம் ஒன்று உள்ளது. அந்தக் காலத்துக் கல்வெட்டில் இருந்து அறியப்பட்டது இந்தக்கதை. நந்திவர்மன் காலத்தில் புகழ்பெற்றவன் 3ஆம் நந்திவர்மன். அவன் ஆண்ட இடம் தெள்ளாறு. தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்று அவனைப் பற்றிப் பெருமையாகச் சொல்வார்கள்.

அந்தக்காலத்தில் அந்த ஊரில் ஓர் உள்ளூராட்சித் தேர் தல் நடந்தது. அந்தத் தேர்தலில் அந்த ஊருக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒரு பெண்மணி. அந்தப் பெண்ணுக்குப் பெருங்கருணை நாச்சியார் என்று பெயர்.அந்தப் பெண் தான் ஊராட்சிமன்றத் தலைவி.

ஒருநாள் சிலபெண்கள் குளத்துக்குப்போய் தண்ணீர் எடுத்துக்குக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். வழியில் ஓர் ஆள் அவர்களை கேலி பேசிக் கொண்டிருந்தான்.உடனே அந்தப் பெண்கள் ஊராட்சிமன்றத் தலைவியிடம் போய் அதைப்பற்றி முறைப்பாடு செய்தார்கள். அந்தத் தலைவி (பெருங்கருணை நாச்சியார்) அந்த மனிதன் யாரென்று விசாரித்துப் பார்த்ததில் அது வேறுயாருமல்ல தன் கணவன்தான் என்பது அவருக்குப் புரிந்தது. தவறு செய்தது தன்னுடைய கணவன்தான் என்பதால் நீதி தவறிவிட முடியுமா?.

கிராமமன்றத்தில்அந்தக் குற்றவாளி விசாரிக்கப்படுகிறார். விசாரிப்பது மனைவி. பதில் கூறுவது கணவன். இருந்தாலும் தீர்ப்பு என்ன தெரியுமா?

இந்த ஊரில் உள்ள திருமூலட்டானேஸ்வரர் கோயிலுக்கு சில பொருள்களைத் தானமாகக் கொடுக்க வேண்டும். ஒரு மண்டலம் அதாவது 48 நாள்கள் வரைக்கும் தினமும் பொழுது விடிவதற்குள் முன் கோயிலுக்குப் போய் முன்புறத்தை சுத்தப் படுத்தவேண்டும். மெழுகுதல், பூமாலை கட்டுதல், அகல் விளக்கேற்றுதல் இவையே அவருக்குப் பணிக்கப்பட்ட வேலைகள். அதன்பின் ஊர்க் கூட்டம் கலைந்தது.

மறுநாள் காலை, பொழுது விடிவதற்கு முன் என்ன நடந்தது தெரியுமா? தீர்ப்பு வழங்கிய அந்த அம்மையாரே கோயிலை மெழுகி சுத்தப்படுத்தி, பூமாலை கட்டி, அகல் விளக்கு ஏற்றிவைத்தார்.

ஊர் சனங்களுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. சிலபேர் நேரிலும் கேட்டுவிட்டார்கள். ''ஏனம்மா! தண்டனை அடைந்தது உன்னுடைய கணவன். அவர் செய்யவேண்டிய வேலையை தீர்ப்பு வழங்கிய நீ செய்கிறாய்? இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டனர். இதற்கு அந்த அம்மா கூறிய பதில், ''குற்றம் செய்தவருக்கு குற்றத்துக்குரிய தண்டனையைக் கொடுத்தேன் ஊருக்குத் தலைவியாகவிருந்து. இப்போது மனைவி என்கின்ற முறையில் அவருடைய துன்பத்தில் பங்கேற்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அந்தக் கடமையைத்தான் இப்போது நான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்'' இதுதான் அவர் கூறிய பதில்.

தன்னுடைய கணவனே ஆனாலும் குடி மயக்கத்தில் பெண்களைத் துன்புறுத்தியதற்குரிய தண்டனையைக் கொடுத்த செயலுக்காகப் பெருங்கருணை அம்மையாரை அந்த ஊர் மக்கள் ''குடிக்குறை துடைத்த நாச்சியார்'' என்று கல்வெட்டில் பொறித்து வைத்திருந்தார்கள்.

இந்தக் காலத்திலும் இந்தமாதிரியான இல்லத்தலைவிகள் சிலபேர் உள்ளனர்.

இந்தக்காலத்து இல்லத் தலைவி ஒருத்தி மிகவும் சோகமாக இருந்தாள். என்ன என்று விசாரித்தபோது ''என்னுடைய கணவன் என்ன தப்புச் செய்தாலும் உடனே தண்டனை கொடுத்துவிடுவேன்; கொடுத்த பின்னர் அந்தத் தண்டனையை அனுபவிக்கப்போகிறவர் என் கணவரே என்று கவலைப்படுவேன்'' என்றாள். ''என்ன மாதிரித் தண்டனை கொடுப்பீர்கள்?'' என்று கேட்டபோது பெரிதாக ஒன்றுமில்லை ; அவர் செய்கின்ற ஒவ்வொரு தவறுக்கும் ஒவ்வொரு வேளைச் சாப்பாடு கிடையாது. இப்போதுகூட அந்தத் தண்டனையைத்தான் கொடுத்துவிட்டுத்தான் வருகிறேன். அதுதான் மனதுக்கு கஷ்ரமாக இருக்கிறது'' என்றாள்.

''இதுக்காகவா இவ்வளவு சோகமாக இருக்கிறீர்கள்?'' என்ற போது ''அவர் சாப்பிட்டு இன்றோடு இருபத்தைந்து நாள்கள் ஆகின்றன; அதுதான் கவலையாக இருக்கிறது'' என்று கூறினாள் அந்த இல்லத் தலைவி. எப்படி இருக்கிறது தண்டனை.

**கோ. சுவாமிநாத**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,மே.06

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2401 ஆம் இலக்க கடந்த வெள்ளிக்கிழமை சீட்டிழுப்பில் "D" என்ற ஆங்கில எழுத்தும் 4/6/2/7/5/7 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

4/6/2/7/5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/2/7/5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/7/5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 138 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,321 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,281 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

7 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,31,568 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 4/6/2/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/6/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 130 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/6/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,342 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

4/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,226 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"D" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 52,851 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்**
அவர்கள்

நித்திய புன்னகை முகமும்
நீறு பூத்த நெற்றியும்
வட புலத்தின் கல்வி வளர்ச்சிக்காய்
நேர்மையுடன் நீள் சேவை புரிந்து
அகவை அறுபதிலே ஓய்வுபெறும்
அம்மணியை அம்பிகையருளால்
நோய்நொடியின்றி நீடூழிவாழ
மனமார வாழ்த்துகின்றோம்.



யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgவுக்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய NO.1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 08.06.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
- ★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ★ ஜென்ஸி பாம், பருத்தித்துறை. (0773541771)
- ★ துர்க்கா பாம், சுன்னாகம்.
- ★ P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

தொ.பே:- 021 222 2867, 0776090926.

## VISA - வீசா
Consultancy Service

**UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,**

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

அம்பிகை துணை

## வன்னி விளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா
10.06.2011



அம்பிகை அடியார்களே!
மேற்படி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் ஆனி மாதம் 10.06.2011 வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அன்று நண்பகல் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெற்று இரவு பொங்கல் விழாவும் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் பொங்கல் விழாவில் கலந்துகொண்டு அம்பாளின் அனுக்கிரகத்தை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு:
01. ஆலய நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர்கள் மூலம் நிதி சேகரிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் இயன்றளவு நிதி உதவி வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
02. ஆலய பொங்கல் தினத்தன்று வியாபாரம் செய்ய விரும்புவோருக்கு 08.06.2011 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் நிலம் வழங்கப்படும். உரிய பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்பதை அறியத் தருகின்றோம்.
03. போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
04. அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை
வன்னி விளாங்குளம், மாங்குளம்.
(48,19,25)


## பெறுபேற்று பகுப்பாய்வை கையளிக்க அறிவுறுத்து

தென்மராட்சி, ஜூன் 06

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட மாணவர்களின் பெறுபேற்றுப் பகுப்பாய்வை இன்று திங்கட்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)


## மணமகள் தேவை

1979.10.24 ஆம் திகதி அனுச நட்சத்திரம், விருச்சிகராசி, 16½ பாவமுடைய அவுஸ்திரேலியாவில் PR உடன் வசிக்கும் மணமகனுக்கு B.Sc அல்லது Management B.Com. முடித்த அழகான மணப்பெண் தேவை.
விளம்பர இல . 4151,
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
(4913)

## காணி விற்பனை

பளையில் ஏ9 வீதிக்குச் சமீபமாகக் கச்சாய்வெளி தோட்டக்காணி 6 ஏக்கரும் புலோப்பளையில் தோட்டக்காணி 5 பரப்பும் விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இல:
0779592051

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை
பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்றர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1298
சிகப்பு

மகரம்

07 25 40 43

03-06-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 7,353,475/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 246,835 | 20/- | 4,936,700/- |
| 2 இலக்கங்கள் | 22,721 | 40/- | 908,840/- |
| 1 இல. + லக்கினம் | 22,408 | 60/- | 1,344,480/- |
| 2 இல. + லக்கினம் | 2,069 | 200/- | 413,800/- |
| 3 இலக்கங்கள் | 600 | 1000/- | 600,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 7,353,475/- | 7,353,475/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 16,657,295/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 673 | | 834,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 295,360 | | 17,491,795/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

11 32 33 35

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 669 | 500/- | 334,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 200,000/- | 200,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 673 | | 834,500/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் 09.06.2011 காலை விநியோகிக்கப்படும் முன் பதிவு செய்யவும்.

- ★ சூட்டி பாம் சென்றர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்மதி பாம் சென்றர், தொண்டமானாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்றர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்றர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

## பணிநிலை வேண்டுகை

மன்னாரில் அமைந்துள்ள சைவசிறுவர் இல்லத்துக்குப் பின்வரும் பணிநிலைகள் வெற்றிடமாக உள்ளன

01) கணக்கு இலிகிதர்- (கணக்கியல் துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
02) இசை நடன போதனாசிரியர் (நுண்கலைப் பட்டதாரி விரும்பத்தக்கது)

இதற்கான விண்ணப் படிவங்களை ஏழு நாளகளுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திட்டச்செயலாளர்,
சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்
60A, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 0212220483
E-mail: cfcd10@gmail.com
(49,21,23)

## மரண அறிவித்தல்

### தொம்பைப்பிள்ளை கீதபொன்கலன்



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தொம்பைப்பிள்ளை கீதபொன்கலன் 30.05.2011 அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (06.06.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோமையார் வீதி,
மாதகல்.
தொ.பே: 0771123097

தகவல்:
குடும்பத்தினர்.
(39) (4899)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போகும் விக்கிரகங்கள்; உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ்.குடாநாட்டில் தற்போது அதிகரித்து வரும் ''விக்கிரகங்கள்'' திருட்டுப் போதல், காணாமல் போதற் தொடர்பான தகவல்களைப் பத்திரிகைகள் வாயிலாகவும் செவி வழிக்கதைகளாகவும் அறிந்து கொண்டிருக்கிறோம்.

யாழ்.மாவட்டத்துக்கு என்றும் தனித்துவமானதும், பிரசித்தம் வாய்ந்ததுமாகத் திகழ்கின்றன இந்து ஆலயங்கள்.

இந்த இந்து ஆலயங்கள் எமது மூதாதையர்கள் தேடித்தந்த சொத்து. காலாகாலமாகப் பாதுகாக்கப்பட்டுவந்த இந்த அரும்பெரும்சொத்தை நாம் அழிவடைந்து செல்லும் அளவுக்கு விட்டுவிட்டோம்.

ஆலயங்கள் தனியொருவரின் நிதி உதவியுடன் கட்டப்பட்டாலும் அது என்றுமே பொது இடம்தான்.

பாரம்பரியமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த மரபுரிமைச் சொத்துக்கள் அழிவடைந்து செல்கின்றன.

இந்தத் தறுவாயில் இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு தென்னிலங்கையிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு எடுத்து வந்து ஆங்காங்கே புத்தர் சிலைகளைக் குடியமர்த்திய வண்ணம் உள்ளமை வேதனைக்குரிய விடயமாகும்.

கோயில்களுக்கு என்றுமே தனித்துவமானது விக்கிரகங்கள்தான். இந்த விக்கிரகங்கள் இல்லாவிடில் கோயில்களில் வழிபாடுகளை நிறைவேற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலைதான் ஏற்படும்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று எமது மூதாதையர் கூறியது மட்டுமல்லாமல் ஆங்காங்கே கிராமங்களின் மூலை முடுக்குகளிலும் வேப்பமரம், அரசமரம் என்று மரநிழல்களிலும் கோயில்களை அமைத்து இந்துப் பாரம்பரியத்தை நிலைநாட்டி வந்தனர்.

ஓர் ஆலயத்தைக் கட்டி முடித்து அதற்குக் கும்பாபிஷேகம் முடிப்பதில் ஆலய நிர்வாகத்தினர் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவழிக்கின்றனர். ஏன் நமது பாரம்பரியமான சைவ மரபுகள் சிதைந்து போகக்கூடாது என்பதற்காகத் தான்.

இந்த நிலையில் தமிழருடைய பாரம்பரியமான சைவக் கோயில்கள் பல சிதைவடைந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயுள்ளமையும் வேதனைக்குரிய விடயம்.

யாழ்.குடாநாட்டில் கடந்த மாதம் மட்டும் 60 இற்கும் மேற்பட்ட விக்கிரகங்கள் காணாமற் போனமை தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பாகப் பொலிஸாரால் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் இன்னொரு பக்கம்.

ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள், திருவிழாக்களை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்படும்வேளை விக்கிரகங்கள் காணாமற் போனால் என்ன தான் செய்ய முடியும்.

பிள்ளையார் பிடிக்கக் குரங்கு வந்த கதையாக? சைவத்தை வளர்க்கப் பாடுபடும் நிலையில் விக்கிரகங்கள் காணாமற் போகின்றன.

ஐம்பொன்களால் வடிவமைக்கப்பட்டு கூடுதலாக இந்தியாவிலிருந்து கொண்டு வந்த பழைமை வாய்ந்த விக்கிரகங்கள் இவை. ஒவ்வொரு விக்கிரகங்களையும் வாங்குவதற்கு லட்சக்கணக்கில் செலவு செய்யப்பட்டும் இருக்கும்.

இது தொடர்பாக நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெற்ற அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மாநாடு நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அங்கு கூடியிருந்த இந்து சமயப் பிரதிநிதிகள் பலரிடம் இது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வரும் பிரதேசங்களில் மிகவும் பிரசித்தம் வாய்ந்த பழைமை வாய்ந்த கோயில்கள் பலவும் இடிபாடுகளுடன் காணப்படுகின்றன.

இத்தகைய பாரம்பரியமான சொத்துக்களைப் பேணுவதற்கு சமயம் சார்ந்த தலைவர்கள் ஆர்வலர்கள், தொண்டர்கள் தான் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பாண்டியம்மா**

ஆலயங்களில் உள்ள பொருள்கள், விக்கிரகங்கள் காணாமற் போதல் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் அக்கறை கொள்ளுதல் வேண்டும்.

பொதுமக்களின் பயன்பாட்டில் பொது இடமாகத் திகழும் ஆலயங்களில் கட்டாயம் ஆலய நிர்வாகசபை இருத்தல் வேண்டும். இந்த ஆலய நிர்வாக சபை நிர்வாக நடவடிக்கைகளை மட்டும் கவனத்தில் கொள்ளாது ஆலயத்தைப் பாதுகாப்பதில் கடமை உணர்வுடன் செயற்பட வேண்டும்.

இதில் தற்போது நாம் அலட்சியப் போக்காக இருப்போமானால் காலப்போக்கில் இந்து சமய மரபுகளே சீரழிந்து போய்விடும்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன் 6

ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு சப்பரத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறும்.

(ற)

***

யாழ்ப்பாணம்,ஜூன் 6

கோப்பாய் தெற்கு மாந்தோப்பு மாரியம்மன் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.49 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

கும்பாபிஷேக கிரியை வழிபாடுகளை வல்வெட்டித்துறை சிவன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

(ற)

***

யாழ்ப்பாணம்,ஜூன் 6

கரவெட்டி,முதலைக்குழி முருகமூர்த்தி ஆலயத் தின் மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6.35 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு மஹா அபிஷேகமும், பூசை வழிபாடுகளும் நடைபெற்று மாலை 5 மணிக்கு விசேட தீபாரதனை இடம்பெற்று மங்கள வாத்தியத்துடன் சுவாமி வீதியுலா வருவார்.

(ற)

***

யாழ்ப்பாணம்,ஜூன் 6

இணுவில் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மாலை 7.30 மணிக்கு சப்பரத் திருவிழாவும் இடம்பெறும்.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மாலை 4 மணிக்கு மடாலய ஆராதனையும் திருவூஞ்சலும் இடம்பெறும்.

தொடர்ந்து எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் தொடர்ந்து கொடியிறக்கமும் இடம்பெறும்.

(ற)

***

கொழும்புத்துறை,ஜூன் 6

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞான வைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 7 மணிக்கு யாகதீப ஆராதனை முற்பகல் 10.52 இற்கு ஸ்தூபிகள் கும்பாபிஷேகமும் 11.52 இற்கு மஹாகும்பாபிஷேகமும் மாலை சுவாமி வீதியுலாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கும்பாபிஷேக ஆரம்ப கிரியைகள் நடைபெறும். மறுநாள் சனிக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் யாக பூசையும் இடம்பெறும்.

கும்பாபிஷேக ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் ஐயர், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் [illegible] ஆகியோர் நிகழ்த்துவர்.

(ற-[illegible])

***

## 'அக்ரஹரா' காப்புறுதி ஊடகவியலாளருக்கும்

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் அக்ரஹரா காப்புறுதிப் பாதுகாப்பை ஊடகவியலாளர்களுக்கும் வழங்குவதற்கு தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியம் தீர்மானித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளைக் கொண்டிருக்கும் அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் இந்தக் காப்புறுதிப் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்தின் தலைவர் சேனக்க அபேகுண சேகர தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாடு சம்பந்தமாகத் தகவல் திணைக்களத்தின் உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் இருமாத காலத்துள் மேற்படிக் காப்புறுதித் திட்டத்தை ஊடகவியலாளர்களுக்கும் வழங்க முடியுமெனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், ஊடகவியாலாளர்களிடமிருந்து இது தொடர்பாக அறவிடப்படவுள்ள தொகை மற்றும் தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்தில் அது தொடர்பான பங்களிப்புத் தொகை எவ்வளவு? என்பது குறித்து இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அபேகுண சேகர மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த அக்ரஹரா காப்புறுதிக்கு அரச ஊழியர்களிடமிருந்து 75ரூபா மாதாந்தம் அறவிடப்படுகிறது. தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியம் மாதாந்தம் 69 ரூபாவை அதற்கு வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


(எ-22)

## சைக்கிள்களுக்கு உரிமத் தகடு

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட சைக்கிள் உரிமையாளர்கள் அதற்குரிய உரிமத் தகடுகளை வேலணை பிரதேச சபையில் தலைமை அலுவலகத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளுமாறு பொறுப்பதிகாரி ப.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடு வழங்கல் தற்போது வேலணைப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்று வரு கின்றது.சைக்கிள் உரிமையாளர்கள் ரூபா 10 ஐச் செலுத்தி உரிமத் தகட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(ம-313)



இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தேர்த்திருவிழாவில் ஆயிரக்கணக்கான அடியவர்கள் கலந்துகொண்டு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து எல்லை மூடப்பட்டமைக்கு ஹமாஸ் தீவிரவாதிகள் குற்றச்சாட்டு

காஸா சிட்டி, ஜூன் 6

பலஸ்தீனத்தின் காஸா பகுதியை ஒட்டிய எகிப்து எல்லை மூடப்பட்டுள்ளது. எகிப்து அரசின் இத்தகைய நடவடிக்கையால் அந்நாட்டுக்குள் எல்லை வழியாகச் செல்ல விரும்பும் பலஸ்தீன மக்களால் செல்ல முடியவில்லை என்று ஹமாஸ் தீவிரவாதிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

எல்லை மூடப்பட்டமை தொடர்பாக எகிப்து அரச அதிகாரிகளைத் தொலைபேசியில் தொடர்புகொண்டோம். ஆனால்', அவர்கள் உரிய பதிலை அளிக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதற்குப் பதிலளித்துள்ள எகிப்து நிர்வாகம், காஸா பகுதியை ஒட்டிய எல்லைப் பகுதியில் கட்டுமானப் பணி நடைபெறுகிறது. பலஸ்தீன மக்கள் பஸ்ஸில் வந்து செல்லுவதற்கு ஏதுவாகக் கட்டுமானப் பணி நடைபெறுகிறது. அந்தப் பணி நிறைவுபெற்றதும் எல்லைப் பகுதி திறக்கப்படும் என்று கூறியுள்ளது.

எகிப்து-காஸா எல்லைப் பகுதியில் பகுதியளவு திறக்கப்பட்டுள்ளது. இவ்வழியாகச் செல்ல பாதசாரிகள் அனுமதிக்கப்படுகின்றனர். வாகனங்கள்தான் அனுமதிக்கப்படவில்லை என்று அங்கிருந்து வரும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

காஸாவில் வசிக்கும் மக்கள் ரபா என்ற எல்லைப் பகுதி வழியாகவே எகிப்துக்குச் சென்று வருகின்றனர். காஸா மக்களுக்கு எகிப்துக்குச் சென்றுவர இவ்வழியைத் தவிர வேறு பாதை இல்லை. ஆனால், இப்பாதைவழி யாக ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுகின்றன என இஸ்ரேல் குற்றஞ்சுமத்தி வருகிறது.

முன்னர் இந்த எல்லைப் பகுதி அவ்வப் போது மட்டுமே திறக்கப்பட்டது.

எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் பதவி விலகியமையைத் தொடர்ந்து இந்த எல்லைப் பகுதியை நிரந்தரமாகத் திறந்து வைப்பதென அந்நாடு முடிவெடுத்தது.



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், ஜனாதிபதி ஹமித் கர்சாய் (வலது), அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரொபர்ட் கேட்ஸ் ஆகியோர் இணைந்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கின்றனர்.

# சிரியாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு; 35 பொதுமக்கள் பலி!

டமாஸ்கஸ், ஜூன் 6

சிரியாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 35 பேர் பலியாயினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி பாஷார் அல்-ஆசாத் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களை இராணுவ நடவடிக்கை மூலம் அடக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெள்ளிக்கிழமை சிரியாவிலுள்ள ஹமா என்ற நகரத்தில் சுமார் 50 ஆயிரம் பேர் ஒன்றுகூடினர். அவர்கள் ஜனாதிபதி அல்-ஆசாத்துக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் கண்டனப் பேரணி நடத்தினர். அப்போது போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் 35 பேர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தனர். 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்தத் தகவலை சிரியா மனித உரிமைகள் பிரிவுத் தலைவர் ராமி அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார். துப்பாக்கிச் சூடு சம்பவத்தை தொடர்ந்து தற்போது கலவரம் டமாஸ்கஸுக்கும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

# ஜப்பானில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் 100 வயது மூதாட்டி



சில்லிகோத், ஜூன் 6

ஜப்பானிலுள்ள ஒகியோ என்ற இடத்தைச் சேர்ந்த வர்ஜூன் கிரேக். தற்போது அவருக்கு 100 வயது ஆகிறது. இந்த வயதிலும் அவர் தெற்கு ஒகியோவிலுள்ள ஒரு வங்கியில் கணக்கு வைத்துள்ளார்.

கடந்த 1913ஆம் ஆண்டு முதல் இவரது பெயரில் வங்கிக் கணக்கு உள்ளது. ஒன்றரை வயது குழந்தையாக இருந்த போது இவரது தந்தை கில்பர்ட் இவருக்கு இந்த வங்கிக் கணக்கை ஆரம்பித்து வைத்தார்.

முதலில் அவரது பெயரில் ரூ. 300 வைப்பு செய்தார். அன்று முதல் இவரது பெயரில் இங்கு வங்கிக் கணக்கு தொடர்கிறது. இதை ஒரு மிகப்பெரும் சாதனையாக வங்கி நிர்வாகம் கருதுகிறது.

இந்தத் தள்ளாத வயதிலும் தனது வங்கி கணக்கைத் தொடரும் ஜூன் கிரேக் கூறியவை வருமாறு:-

விவசாயியான எனது தந்தை இந்த வங்கியின் வாடிக்கையாளராக இருந்தார். குழந்தை பருவத்திலேயே எனக்கு அவர் சேமிப்புப் பழக்கத்தை கற்றுக் கொடுத்தார். தற்போது அது எனக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது என்றார். 100 வயதான ஜூன் கிரேக் திருமணம் செய்யவில்லை.

# பாகிஸ்தான் பஸ் நிலையத்தில் குண்டு வெடிப்பு; 7பேர் பலி!

பெஷாவர், ஜூன் 6

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியான பெஷாவரில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 7 பேர் பலியாகியுள்ளனர். 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பஸ் நிலையம் அருகே நிறுத்தப்பட்டிருந்த வான் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் இவ்விபத்து ஏற்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டுவெடிப்பு நடந்த நேரத்தில் பஸ் நிலையத்தில் மக்கள் அதிகளவில் இருந்ததால் பாதிப்பு அதிகளவில் இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலியானவர்களில் பெண்களும், குழந்தைகளும் அதிகளவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த குண்டுவெடிப்பிற்கு இதுவரை எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை ஜெயபாலன்



கேணியடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயபாலன் (23.05.2011) ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- சுகிர்தரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும் செல்லையா - காலஞ்சென்ற பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயகௌரியின் அன்புக் கணவரும் அபிராமி, சுலக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயரஞ்சிதமலர் (ரஞ்சி), ஜெயராணி(ஜெயா), ஜெயரூபி(ஜேர்மனி), ஜெயமாலா (ஜேர்மனி), ஜெயசீலன் (ஜேர்மனி), ஜெயகாந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2011) திங்கட்கிழமை ஜேர்மனியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

அருளானந்தபிள்ளை ஜெயராணி, (ஜெயா)
'புதுவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

ஸ்ரீகாந்தன் ஜெயரஞ்சிதமலர் (ரஞ்சி)
"அபிராமி இல்லம்", மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்

ஸ்ரீ.முரளிதரன்
கீதா றேடர்ஸ், மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

(சி/477)



## அறிவித்தல்



### தற்காலிக கடைகள், திருவிழாக்கால உடை தேங்காய் ஏலம்

மேற்படி ஆலய வருடாந்த உயர்திருவிழா 01.07.2011 ஆம் திகதி அன்று ஆரம்பமாகி 16.07.2011 ஆம் திகதி நிறைவுபெறும். இந்தக் காலத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் இடங்கள் 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

உயர் திருவிழாக் காலத்தில் சேரும் உடை தேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் அன்றைய தினத்திலேயே கூறப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு

01. தேநீர் கடை குளிர்பான நிலையம் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும்.

02. சுகாதாரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

03. ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் அன்றைய தினம் ஏலத்தொகையில் 1/3 பங்குத் தொகையைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

04. மிகுதித் தொகையைப் பத்தாம் (10) திருவிழாவுக்கு இடையில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அன்னையின் சேவையில்

செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு.

(சி/483)



வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

கனடா, சுவிஸ், லண்டன் நாடுகளிலிருந்து 7 நாட்களில் பொதிகள் பெற்றுத்தரப்படும்.



லண்டன், சுவிஸ் 450/=
கனடா 500/=

72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்
லண்டன் 1Kg 800 /=
கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்,சுவிஸ், டென்மார்க் ஜேர்மனி, இத்தாலி, நோர்வே
1Kg 950 /=

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
இல. 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 222 6113
365 Day Services


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் மசூதி, வைத்தியசாலை மீது வெடிகுண்டுத் தாக்குதல்: 24 பேர் பலி!

திக்ரித், ஜூன் 06

ஈராக்கில் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுஸைனின் சொந்த ஊரான திக்ரித் நகரில் மசூதி, வைத்தியசாலை ஆகிய வற்றை குறிவைத்து தீவிரவாதிகள் வெள்ளிக்கிழமை வெடிகுண்டுத் தாக்குதல், தற்கொலைப் படைத் தாக்குதல் ஆகிய வற்றை நடத்தினர். இவற்றில் 24 பேர் கொல்லப்பட்டனர். 75 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ரமாதி நகரில் அடுத்தடுத்து 3 இடங் களில் குண்டுகள் வெடித்தன. இவற்றில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடந்த அடுத்த நாளே தீவிரவாதிகள் கைவரிசையைக் காட்டியுள்ளமை மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஈராக் பாதுகாப்புப் படையின் வலிமை குறித்துக் கேள்வி எழுந்துள்ளது.

திக்ரித் நகரின் மையப் பகுதியிலுள்ள மசூதி ஒன்றில் மக்கள் தொழுகையை முடித்துக்கொண்டு வீடு திரும்பத் தயாராகினர். அந்த நேரத்தில் மசூதிக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்தன. இவற்றில் சம்பவ இடத்திலேயே 19 பேர் கொல்லப்பட்டனர். 72 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில், இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சேர்க்கப்பட்டிருந்த வைத்தியசாலையில் மீண்டும் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது. காயமடைந்தவர்களைப் பார்த்து ஆறுதல் கூறுவதற்காக அந்நாட்டு எம்.பி. முதாஷேர் அல்-சமாரி வைத்தியசாலைக்கு வந்தார். அவர் வரும் நேரத்தில் வைத்தியசாலையில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆனால் இதில் அவருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. சிகிச்சை பெற்று வந்தவர்களில் 5 பேர் கொல்லப்பட்டனர். 3 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை. இருப்பினும், தாக்குதலை அல்-குவைதா தீவிரவாதிகள்தான் நடத்தி யிருப்பார்கள் என்று பாதுகாப் புப் படையினர் சந்தேகிக்கின் றனர்.

ஏனென்றால், ஈராக்கில் அவர்கள்தான் மசூதிகளையும், வைத்தியசாலைகளையும் குறிவைத்து தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து திக்ரித் நகரில் பாதுகாப்புப் படையினர் உஷார்படுத்தப் பட்டுள்ளனர். மசூதிகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும் கூடுதல் பாதுகாப்பு போடப் பட்டுள்ளது. (எ)

## சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் நாடுகள்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் நாடுகளில் முதல் 10நாடுகளில்9ஆவது இடத்தை துபாய் பிடித்துள்ளது. இந்தாண்டு மட்டும் சுமார் 8 மில்லியன் மக்கள் துபாய்க்கு சுற்றுலாவாக வந்துள்ளனர்.

இதற்கு அடுத்தபடியாக நியூயோர்க் நகருக்கு 7.9 மில்லியன், ஆம்ஸ்டர்டாம் நகருக்கு 7.4 மில்லியன் மக்கள் சுற்றுலாவாக வருகை தந்துள் ளனர். இதற்கு அடுத்தபடியாக கோலாலம்பூர் இடம்பிடித்துள்ளது. பெரும்பாலான சுற்றுலாப்பயணிகள் லண்டனில் இருந்து வந்துள்ளனர் என ஆய்வு தெரிவிக்கிறது.

லண்டனுக்கு அடுத்தபடியாக சுற்றுலாப் பயணிகளின் மனதில் இடம்பிடிப்பது குவைத், பீஜிங் ஆகிய நகரங்களாகும். தற்போது மூன்றாவது இடத்தை துபாய் பிடித்துள்ளது.



அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில், ஜனாதிபதி ஒபாமாவை சந்திக்க வந்த குழந்தைகளுடன் அவர் கைகுலுக்கி பேசி மகிழ்கிறார். (எ)

## டுனீஷியா கடலில் கப்பல் மூழ்கிறது: 150 அகதிகள் பலி; 600 பேர் மீட்பு

டுனீஷ், ஜூன் 06

லிபிய அகதிகளை ஏற்றிவந்த கப்பல் டுனீஷியாவில் மூழ்கியதில் 150 பேர் பலியாயினர். 600 பேர் மீட்கப்பட்டனர். 150 பேர் காணாமல் போயுள்ளனர்.

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராக நடைபெறும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. எனவே, அங்கிருந்து ஏராளமான மக்கள் வெளியேறி பக்கத்து நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்து வருகின்றனர்.

அதுபோன்று சுமார் 900 பேர் இத்தாலிக்குச் சொந்தமான லாம்பேடுசா தீவில் தஞ்சமடைய ஒரு கப்பலில் புறப்பட்டுச் சென்றனர். அவர்களது கப்பல் டுனீஷியாவின் கடல் எல்லையில் சென்றபோது தண்ணீரில் மூழ்கியது.

அதில் பயணம் செய்தவர்கள் தண்ணீரில் மூழ்கினர். தகவல் அறிந்ததும் டுனீஷியா கடற்பாதுகாப்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அவர்களில் 600 பேர் வரை மீட்கப்பட்டுள்ளனர்.

ஆனால், 150 பேர் மூழ்கி பலியானார்கள். அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன. மேலும் 150 பேரைக் காணவில்லை. அவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. கப்பல் மூழ்கியதற்கு மோசமான வானிலையே காரணம் எனக் கூறப் பட்டுள்ளது. (எ)

## றொக்கட் குண்டு வீச்சில் காயம்: ஏமன் ஜனாதிபதிக்கு சவூதியில் சிகிச்சை

ரியாத், ஜூன் 06

ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே (வயது - 69) அரண்மனை மீது போராட்டத்தில் ஈடுபடும் மலைவாழ் மக்கள் ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்கினார்கள். அதில் 11 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் ஜனாதிபதி சலே காயத்துடன் உயிர் தப்பினார்.

அவரது முகமும், மார்பு பகுதியும் தீயில் கருகின. எனவே அவருக்கு சவூதி அரேபியாவில் சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டது.

அதற்காக சனிக்கிழமை அவர் சவூதி அரேபியாவிலுள்ள ரியாத் நகருக்கு தனி விமானத்தில் புறப்பட்டுச் சென்றார். மற்றொரு விமானத்தில் அவரது குடும்பத்தினர் சென்றனர்.

ரியாத் சென்றுள்ள சலேவுக்கு அங்குள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது..

சிகிச்சைக்குப் பின்னர் அவர் தனது சொந்த நாடான ஏமனுக்குத் திரும்புவார். நாட்டை விட்டு வெளியேறும் எண்ணம் அவருக்கு இல்லை என ஏமன் அரசு தெரிவித்துள்ளது.

துணை ஜனாதிபதி அப்தெல் ரெப்போ மன்சூர் ஹாதி தற்போது ஜனாதிபதி பொறுப்பை கவனித்து வருகிறார்.

வெள்ளிக்கிழமை சனா நகரிலுள்ள ஜனாதிபதி சலேவின் அரண்மனை மீது மலைவாழ் மக்கள் ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியமைக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக சனா அருகேயுள்ள ஹடாவிலுள்ள பழங்குடி இனத் தலைவர் ஷேக் ஹமீத் அல், அக்மார் வீடு மீது ஏமன் இராணுவம் ஏவுகணை, குண்டுவீச்சு ஆகியவற்றை நடத்தியது.

இவர் வீடு தவிர அவரது 2 தம்பிகள் ஹெம்யார், மிஷ்கிஜி ஆகியோரின் மாளிகைகள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன. அவற்றில் 10 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர்.

பழங்குடி இனத் தலைவர், அவர்களது 2 தம்பிகள் ஆகியோரின் வீடுகளும் சேதமடைந்தன. பழங்குடி இனத் தலைவர் ஷேக்ஹமீத் வியாபார பிரமுகர் ஆவார். மேலும் இவர் ஏமனின் பெரிய எதிர்க்கட்சியான அல்ஸ்லாவின் தலைவராகவும் உள்ளார். (எ)

## அல்-குவைதா தீவிரவாதி காஷ்மீரில் அமெ.ஏவுகணைத் தாக்குதலில் பலி!

இஸ்லாமாபாத், ஜூன் 06

பாகிஸ்தானில் அமெரிக்கப் பாதுகாப்புப் படை வெள்ளிக்கிழமை இரவு ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் மும்பைத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட தீவிரவாதி இலியாஸ் காஷ்மீரி (வயது - 47) உட்பட 9 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகள் ஆதிக்கமிகுந்த தெற்கு வசிரிஸ்தான் பகுதியின் வனா என்ற இடத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வனா பகுதியில் முக்கிய தீவிரவாதிகள் சிலர் பதுங்கியிருக்கின்றனர் என அமெரிக்கப் பாதுகாப்புப் படைக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து அவர்களைக் குறிவைத்து ஆளில்லா விமானங்கள் மூலம் 4 ஏவுகணைகளைச் செலுத்தி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் தீவிரவாதி இலியாஸ் காஷ்மீரி உட்பட 9 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளால் தேடப்பட்டு வந்த முக்கியமான தீவிரவாதிகளில் இலியாஸ் காஷ்மீரியும் ஒருவர். அல்-குவைதா தீவிரவாதி ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டமையை அடுத்து அந்த அமைப்பின் புதிய தலைவராக இலியாஸ் காஷ்மீரி பொறுப்பேற்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியிருந்தது.



இதனால் இலியாஸ் காஷ்மீரியை தீர்த்துக்கட்டும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரமாக செயற்பட்டது. விரைவில் பாகிஸ்தானில் கூடுதல் படையை இறக்கி இலியாஸின் கதையை முடிக்கத் திட்டமிட்டிருந்தது. இலியாஸ் பதுங்கியிருக்கும் இடத்தைச் சொல்லுமாறு பாகிஸ்தானுக்கும் நெருக்குதல் அளித்து வந்தது.

இலியாஸ் பதுங்கியிருக் கும் இடம் தெரியவே ஏவுகணையைச் செலுத்தி அவரைக் கொன்றுள்ளது. பின்லேடனைப் போல் இலியாஸை கொன்றதையும் பெரிய வெற்றியாகவே அமெரிக்கா கருதுகிறது.

அமெரிக்கப் படையின் தாக்குதலில் இலியாஸ் இறந் தமை உண்மைதான் என்றும், அவரது சடலம் உட்பட 9 தீவிரவாதிகளின் சடலங்களையும் தாங்கள் புதைத்துவிட்டனர் என்றும் வனா பழங்குடியின மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இலியாஸ் காஷ்மீரி இறந்தமை குறித்து பாகிஸ்தான் அரச தரப்பில் எவ்வித அதிகார பூர்வ தகவலும் இல்லை.

இதுகுறித்த செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் யூசுப் ரஸா கிலானி, இலியாஸ் காஷ்மீரி கொல்லப் பட்டமை குறித்து தனக்கு இதுவரை எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPH

இனிய முதலாவது அகவையில் காலடி
எடுத்து வைக்கும்

# ஷாம் தனியார் மருத்துவமனை

# Shaam Private Hospital

## T.P.: 021 7200178, 021 7201028

புலோலி மேற்கு, பருத்தித்துறை (தம்பசிட்டி பாடசாலை முன்பாக)

வடமராட்சி மக்களின் அனைத்து வைத்திய தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய
24 மணி நேர வைத்திய சேவையில் விசேட வைத்திய நிபுணர்களின் வைத்திய சேவை





**பொது சத்திர சிகிச்சை நிபுணர்கள்**
1) Dr.S.ரவிராஜ் (யாழ். போதனா வைத்தியசாலை)
2) Dr.V.சுதர்சன் (யாழ். போதனா வைத்தியசாலை)

**பொது வைத்திய நிபுணர்கள்**
1) Dr.K.சிவராமன் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)
2) Dr.S.கேதீஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை)

**பெண் நோயியலும் மகப்பேறும்**
1) Dr.K.சுரேஷ்குமார் (யாழ். போதனா வைத்தியசாலை)

**காது, மூக்கு, தொண்டை நிபுணர்**
Dr.B.திருமாறன் (யாழ். போதனா வைத்தியசாலை)

**தோல் வைத்திய நிபுணர்**
Dr.S.சுகுமாரன் (யாழ். போதனா வைத்தியசாலை)

**ஸ்கானிங்**
Dr.S.முகுந்தன் (யாழ். போதனா வைத்தியசாலை)

- கணினி மயப்படுத்தப்பட்ட வரவேற்பறை.
- 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு (இரவு நேர வைத்திய சேவையும் உண்டு).
- மருத்துவ விடுதி வசதி.
- நவீன ஸ்கானிங் (Scanning), ECG வசதி.
- உள்ளக மருந்தகம்.
- சலரோக, உயர் குருதி அமுத்த நோயாளர்களுக்கான கிளினிக் வசதி.
- கர்ப்பிணிகளுக்கான கிளினிக் வசதி (ஸ்கானிங் வசதி உண்டு).
- சிறு சத்திர சிகிச்சைகள்.
- நவீன ஆய்வுகூட வசதியுடன் கூடிய சகல இரத்த, சலப் பரிசோதனை
- சாரதி அனுமதிப்பத்திரம் மருத்துவச் சான்றிதழ்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ விவகாரத்தில் தி.மு.கவைப் போலவே அ.தி.மு.கவும் இரட்டை வேடம் போடுகிறது

## இப்படிக் கூறுகிறார் வைகோ

மன்னார்குடி, ஜூன் 6

ஈழப்பிரச்சினை தீர்வுக்கு மத்திய அரசுதான் பொறுப்பு என கருணாநிதி தட்டிக் கழித்தார். அதே நிலைபாட்டைப் போன்று தான் அ.தி.மு.கவும் தற்போது இரட்டை வேடம் போடுகிறது என்பதை சட்டப் பேரவையில் ஆளுநர் உரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இது நல்ல முடிவு இல்லை என்று ஆட்சி யாளர்கள் உணர வேண்டும். இவ்வாறு கூறினார் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி பந்தலடியில், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ போர் குற்றவாளி என ஐ.நா. அறிக்கையை விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டு பேசு கையில்:

ஈழப் பிரச்சினையைத் தீர்க்க பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் கருணாநிதி அதனைச் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. எனவே ஈழத்தமிழர் பிரச்சினையில் துரோகம் செய்ததால் தேர்தல் முடிவின் மூலம் மக்களால் தி.மு.க. ஆட்சி தூக்கி எறியப்பட்டுள்ளது.

புரட்சியால் உருவான கியூபா போன்ற நாடுகளின் பச்சை துரோகமும், பொதுவுடைமை பேசும் நாடுகளின் தவறான பார்வை, இந்தியா வழங்கிய நிதி, ஆயுதம், ராணுவ உதவி ஆகியவையே ஈழப் போராட்டத்தின் வெற்றிக்குத் தடையாக அமைந்து விட்டன.

எனினும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதித்து வரி விலக்கு, ரத்து செய்வது போன்ற தீர்மானங்களை நிறைவேற்றி இருப்பதன் மூலம் நம்பிக்கை ஒளி ஏற்றப்பட்டுள்ளது.



ராஜபக்ஷவை போர்க் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விசாரிக்க வேண்டும் என்று சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றும் வகையில் தமிழக முதலமைச்சரின் உரை ஆளு நர் உரைக்கு பதில் உரையில் இருக்க வேண்டும். இவ்வாறு வைகோ தெரி வித்துள்ளார். (வ)

## தமிழக ஆளுநராவாரா? நவீன் சாவ்லா

தமிழக ஆளுநராக முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் நவீன் சாவ்லா நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக ஆளுநராக இருக்கும் பர்னாலாவின் பதவிக்காலம் இன்னும் சில வாரங்களில் முடிவடையவுள்ளது. இதையடுத்து அடுத்த ஆளுநர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. புதிதாக அமைந்துள்ள அ.தி.மு.க. ஆட்சியுடன் இணக்கமாகச் செயற்பட காங்கிரஸ் கட்சியும், அதன் தலைமையில் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் முடிவு செய்திருப்பதால் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இணக்கமான ஒருவரை ஆளுநராக்க தீர்மானித்துள்ளது. அந்த வகையில் நவீன் சாவ்லாவின் பெயர் முதன்மையாகப் பேசப்படுகிறது.

# சென்னையில் குடிதண்ணீர் பற்றாக்குறை; கண்டலேறு அணையைத் திறக்க வேண்டும்

## ஆந்திர முதல்வருக்கு ஜெயலலிதா வலியுறுத்து

சென்னை நகரின் குடி தண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிக்க கண்டலேறு அணையில் இருந்து 1,000 கன அடி நீரை உடனடியாகத் திறந்து விட உத்தரவிடுமாறு ஆந்திர முதல்வருக்கு ஜெயலலிதா வலியுறுத் தியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா, ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

இரு மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தப்படி, ஒரு வருடத்துக்கு ஆந்திர அரசு தமிழகத்துக்கு 12 டி.எம்.சி. அளவு தண்ணீர் வழங்க வேண்டும்.

2010 - 2011 ஆம் ஆண்டில் 4.6 டி.எம்.சி. அளவு தண்ணீர் மட்டுமே பெறப்பட்டுள்ளது. கிருஷ்ணா குடி தண்ணீர் திட்டத்தின் கீழ் வரும் அனைத்து அணைகளிலும், போதுமான தண்ணீர் இருப்பில் உள்ளதாக நம்புகிறேன்.

எனவே, சென்னை நகரின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய, கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவதில் ஆந்திர அரசுக்கு எந்தவித பிரச்சினையும் இருக்காது.

எனவே கண்டலேறு அணையில் இருந்து உடனடியாகத் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட உத்தரவிட வேண்டும்.

சென்னை நகரின் குடி தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய ஒக்ரோபர்வரை தொடர்ந்து, 1,000 கன அடி நீரை தமிழகத்திற்குத் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (வ)

## மீண்டும் அவதாரம் ...




தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட சந்தோஷத்தில், அ.தி.மு.க. கட்சி தொண்டர்கள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு இணையாக எம்.ஜி.ஆருக்கு முக்கியத்துவம் கொடுத்து அவரது படங்களை மிகப்பெரிய அளவில் சென்னையில் பல்வேறு இடங்களில் சுவர் விளம்பரமாக வரைந்து வருகின்றனர். அந்தவகையில் பெரம்பூர் பத்திரிகை மில்ஸ் வீதியில் வரையப்பட்ட எம்.ஜி.ஆரின் சுவர் விளம்பரம். (வ)

# மம்தாவின் நடவடிக்கையால் அமைச்சர்கள் 'கலக்கம்' !

மத்திய பாதுகாப்புப் படையின் துணையுடன் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கைக் காக்க முடிவு செய்துள்ள மேற்கு வங்க முதல்வர் மம்தா, அமைச்சர்களின் செயற்பாடுகள் அனைத்தையும் ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்யத்திட்டமிட்டுள்ளார்.

அமைச்சர்கள் ஒவ்வொரு வரும் மாத இறுதியில் தாம் செய்த பணிகள் குறித்த விவரங்களை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இதனால், புதிய அமைச்சர்கள் அனைவரும் கலக்கத்தில் உள்ளனர்.

இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் மதன்மித்ரா குறிப்பிடுகையில்,' ஒவ்வொரு மாத இறுதியிலும் எமது திறமை பரிசோதிக்கப்படுவதால், அப்போது நாம் சிறிது பதற்றமாகத் தான் இருப்போம்' என்றார்.

அமைச்சர் கவுதம் தேவ் கூறுகையில்:

இடதுசாரிகளின் ஆட்சியில் 34 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்ட பணிகளை நாம் எடுத்துச் செய்ய வேண்டியுள்ளதால் கூடுதலாக உழைக்க வேண்டும். எனவே, நாம் பெரியளவிலான நெருக்கடிக்கு ஆளாகி



யுள்ளோம் என்றார். பத்து துறைகளை தன் வசம் வைத்துள்ள மம்தா இதுவரை ஒரு நாளைக்கு 10 மணித்தியாலங்களுக்கான வேலையையும், வாரத்தில் ஒரு நாள் ஓய்வு எடுக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தார். தற்போது அவரும் அதிகமாக உழைக்க தொடங்கியுள்ளார். சின்னா பின்னமாகக் காட்சியளித்த பழைய முதல்வர் அறையை விசாலமாகவும், அழகுபடுத்தவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

தொழிலதிபர்களும், உயரதிகாரிகளும் தன்னுடைய அறையில் உரையாடும் போது அவர்களுக்கு அனைத்து வசதிகளும் இருக்க வேண்டும் எனவும் அவர் விரும்புகிறார். (வ)

# ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதம் நடத்திய ராம்தேவ் நள்ளிரவில் பொலிஸாரால் கைது

ஊழல், கறுப்புப் பணத்துக்கு எதிராக பிரபல யோகா குரு ராம்தேவ் நேற்று முன்தினம் டில்லியில் மேற்கொண்ட உண்ணாவிரதத்தை பொலிஸார் முறியடித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணி அளவில் ராம்தேவும், அவரது ஆதரவாளர்களும் உண்ணாவிரதம் இருந்த ராம்லீலா மைதானத்துக்கு அதிக எண்ணிக்கையான பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் ராம்லீலா மைதானத்தைச் சுற்றி உள்ள வீதிகளை சீல் வைத்தனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கைகளை பார்த்த ராம்தேவ் சீடர்கள் ஏதோ நடக்கப்போகிறது என்பதை உணர்ந்து உஷாரானார்கள். ராம்தேவைச் சுற்றி வளையம் அமைத்து நின்றனர்.

நள்ளிரவு ஒரு மணி அளவில் பொலிஸ் உயர் அதி காரிகள் ராம்தேவிடம் வந்து பேசினார்கள். யோகா பயிற்சி முகாம் நடத்துவதற்காகத்தான் இந்த மைதானம் உங்களுக்கு வாடகைக்கு தரப்பட்டது. ஆனால் நீங்கள் [illegible] விரோத செயலாகும். எனவே இந்த இடத்தை விட்டு அமைதியாக வெளியேறுங்கள் என்றனர்.

பொலிஸாரின் கோரிக்கையை ராம்தேவ் ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து ராம்தேவை நோக்கி அதிரடிப்படை பொலிஸார் விரைந்தனர். உடனே நூற்றுக் கணக்கானவர்கள் ராம் தேவை சூழ்ந்து நின்று கொண்டனர். ராம்லீலா மைதானத்தில் தூங்கிக் கொண்டிருந்த அனைவரும் பரபரப்புடன் அங்கும் இங்குமாக ஓடினார்கள். 2.30 மணியளவில் ராம்தேவ் 2 சீடர்கள் தோள் மீது ஏறி இருந்தபடி பேசினார். யாரும் வன்முறைகளில் ஈடுபடக்கூடாது. அமைதியாக இருங்கள், யாரும் மைதானத்தை விட்டு வெளியேற வேண்டாம் என்று மீண்டும் கேட்டுக் கொண்டார்.

அப்போது பொலிஸாருக்கும், மைதானத்தில் திரண்டு இருந்த வர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. சரமாரியாக கற்கள் வீசப்பட்டன. உண்ணாவிரதம் இருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். அந்த சமயத்தில் ராம் தேவை அதிரடிப்படை பொலிஸார் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு வெளியில் சென்றனர். அவருடன் ஆச்சார்ய பாலகிருஷ்ணன், ஜெய்தீப் ஆர்யா ஆகியோரும் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட ராம்தேவ் எங்கே வைக்கப்பட்டுள்ளார் என்பது நீண்ட நேரம் மர்மமாக இருந்தது. அவர் ஹரித்துவாருக்கு அழைத்துச் செல்லப்பட்டு விட்டதாக ஒரு தகவல் வெளியானது. டில்லி புறநகரில் இருப்பதாக ஒரு தகவல் வெளியானது.

பின்னர் ராம்தேவ் காரில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டார். டில்லிக்கு வெளியே அவர் அழைத்துச்செல்லப்பட்டு விட்டதாக பொலிஸார் அறிவித்தனர். இதைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 4 மணிக்கு ராம்லீலா மைதானத்தில் இருந்தவர்களும் முழுமையாக வெளியேற்றப்பட்டனர். இதனால் ராம்தேவின் [illegible] வரையற்ற உண்ணா[illegible]ம் அதிரடியாக முடிவுக்குக் கொ[illegible]டு வரப்பட்டு விட்டது. (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் சர்வதேச சட்ட மீறல்களை தடுப்பதில் நீதித்துறையின் தலையீடு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை

## நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை புறக்கணிக்கும் நிலையும் தொடர்கிறது

**இலங்கையில் சர்வதேச சட்ட மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யமுடியும், ஆயினும் செயல்முறையில். அரசின் மீறல்களைத் தடுப்பதில் நீதித்துறையின் தலையீடு தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. இதற்கு இலங்கையின் அரசியலமைப்பின் வரலாறு சாட்சி பகர்கிறது. தட்டிக்கேட்க ஆளில்லை என்றதொரு கலாசாரம் சேர்ந்து பதவிக்குவந்த அரசுகள் நீதிமன்ற தீர்ப்புக்களை கிரமமாக புறக்கணிக்கும் ஒரு சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

**ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையில் பாதிக்கப்பட்டோர் நீதிமன்றம் செல்வதற்கான வசதி என்ற தலைப்பில் வரும் பகுதியில் இக்கருத்து இடம்பெற்றுள்ளது.**

'(இராணுவத்தினருக்கு எதிரான) பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக' அரசு குறிப்பிட்டுள்ள அதேவேளையில், இந்த வழக்குகள் யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள் தொடர்பானவையா என்பதை அது குறிக்கவில்லை. 2000 ஆம் ஆண்டில் பொதுமக்களைக் கடத்திச் சென்று கொலைசெய்த குற்றத்துக்காக நான்கு இராணுவத்தினருக்கு எதிரான 'மிருசுவில்' முழுமையான நீதிபதிகள் குழாம் ஒன்றின் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள வழக்கை மாத்திரம் அந்த அறிக்கை தொடர்பாக அது எடுத்துக்காட்டுகிறது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்துடன் தொடர்புபட்ட இராணுவத்தினருக்கெதிரான குறிப்பிட்ட எந்தவொரு வழக்கு பற்றியும் குழு அறியவில்லை. இவ்வாறாக, இத்தருணத்தில், யுத்தம் முடிவடைந்து இரண்டுவருடங்கள் கடந்துவிட்ட நிலையில், யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் அரசின் சிவிலியன் மற்றும் இராணுவத்தினர் புரிந்த குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை குற்றவியல் நீதிச்சட்டம் வழங்கவில்லை என்பதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக முறைசார்ந்த விதத்திலான பொறுப்புக்கூறல் அரைகுறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் உள்ளது.

### இராணுவ நீதிமன்ற அமைப்பின் குற்றவியல் நீதி மீதான அதிகாரவரம்பு

**366. இராணுவத்தினர் புரியும் குற்றங்கள் தொடர்பில், ஒரேசமயத்தில் இராணுவ மற்றும் சிவிலியன் நீதி வழங்கலை இலங்கை அனுமதிக்கிறது. இச்சகலது மடங்கிய கோட்பாடு 1949 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க (எஸ் 77) இராணுவச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளதோடு அது இராணுவத்தினரை உட்படுத்தி இராணுவக் குற்றங்கள் வரிசையினை வழங்கும் இராணுவ நீதி அமைப்பொன்றை ஏற்படுத்துகிறது. இராணுவ நீதி அமைப்பு இராணுவத்தினர் ஈடுபடும் சகல சிவில் குற்றங்கள் மற்றும் இராணுவக் குற்றங்கள் அனைத்து மீதும் ஆதிக்கம் கொண்டுள்ளது. சிவில் சட்டத்தைப் போன்றே, இராணுவச் சட்டமும் போர்க்குற்றங்கள் அல்லது மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் அல்லது சட்டத்திதின்படி இராணுவத்தினருக்காக கட்டளைப் பொறுப்பு ஆகியவை பற்றிய பொறுப்பினை குறிப்பிடவில்லை.**

367. இராணுவ வீரர்கள் புரிந்த மனித உரிமைகள் மீறல்களான அவர்களது நடத்தை மீது இராணுவ சட்ட வாதிக்கத்தை சர்வதேச சட்டம் தடுக்காத போதிலும், அத்தகைய விடயங்கள் இராணுவ நீதி அமைப்பினூடாகப் பயனுறுவிதத்தில் மேற்கொள்ளப்படாது மற்றும் தண்டனை விலக்களிப்பில் போய் முடியக்கூடும் என்பதால் சர்வதேச நடைமுறைகள் அத்தகைய விடயங்கள் மீது சிவிலியன் ஆதிக்கத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டி அதற்கானதொரு வலுவான விருப்பத்தைக் குறிக்கிறது.

368. 'இராணுவ, கடற்படை மற்றும் வான்படைச் சட்டங்களின் கீழ் மீறல்களில் சந்தேகிக்கப்படும் ஆயுதப்படை உறுப்பினர்களை இராணுவ நீதிமன்றம் அல்லது சிவிலியன் நீதிமன்றத்தின் முன் நிறுத்தலாம். பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன' என்பதாகக் குழுவுக்கு அரசு சமர்ப்பித்த எழுத்து மூலமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது. பல வழக்குகள் என்பது இராணுவ நீதியின் ஆதிக்கம் தொடர்பானவையா அல்லது யுத்தத்தின் இறுதிக்கட்டம் சம்பந்தப்பட்டவையா என்பது தெளிவற்று இருக்கிறது.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி - 33**

யுத்தம் முடிந்த பின் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான வழக்குகள் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போதான மீறல்கள் தொடர்பாக இராணுவத்தினரைப் பொறுப்புக்கூறுவதற்கு மேற்கொள்ளப்படும் உண்மையானதொரு முயற்சி எனக் கருதமுடியாது. மேலும், மிக உயர் மட்டங்களில் கட்டளையிடப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டதற்கான உருமாதிரி பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளபோதிலும் குற்றம் சாட்டப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக தற்போது பதவியிலிருக்கும் அல்லது முன்னாள் உயர்மட்ட இராணுவ (அல்லது சிவிலியன்) அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதாக தெரியவில்லை.

369. இலங்கையின் இராணுவ நீதி அமைப்பு, அதனால் இனங்காணப்பட்ட நம்பகமான குற்றச்சாட்டுகள் தொடர்பாகவோ அல்லது யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் எழுந்த ஏனைய மீறல்கள் தொடர்பாகவோ பயனுறு பொறுப்புக்கூறல் பொறித் தொகுதியொன்றை செயற்படுத்துகிறது என்பதற்கான எந்த அடையாளத்தையும் குழுவினால் காண முடியவில்லை.

### 4. பாதிக்கப்பட்டோர் நீதிமன்றம் செல்வதற்கான வசதி

370. இலங்கையில் பாதிக்கப்பட்டோர், கொள்கையளவில், சர்வதேச சட்டத்தின் மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக பொறுப்புக்கூறலுக்குப் பங்களிக்கும் வகையில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். ஆயினும், செயல் முறையில், **அரசின் வெளிப்படையான மீறல்களைத் தடுப்பதில் நீதித்துறையின் தலையீடு தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்பதற்கு இலங்கையின் அரசியலமைப்பின் வரலாறு சாட்சி பகர்கிறது. நீதிமன்ற மறுபரிசீலனைக்கு அப்பாற்பட்ட பரவலான அவசரகால அதிகாரங்களின் விளைவாக சட்டத்தின் நல்லாட்சி நலிவடைதல் மற்றும் அரச அதிகாரிகளைப் பொறுப்புக் கூற வைக்கும் அரசியல் மனவுறுதி அற்ற நிலையிலான தட்டிக்கேட்க ஆளில்லை என்றதொரு கலாசாரம் எல்லாமாகச் சேர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக பதவிக்கு வந்த அரசுகள் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை கிரமமாகப் புறக்கணிக்கும் ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளது.**

371. அண்மைய வருடங்களில், இலங்கை நீதித்துறையின் தலைமையில் இருக்கும் உயர் நீதிமன்றம், தன் முனைப்பினைக் கொண்ட பிரதம நீதியரசர் ஒருவருடன், அரசின் அதிகாரத்தை வலியுறுத்தி சர்வதேசக் கடப்பாடுகளை ஒதுக்கிவைக்கும் விதத்தில் சகலவற்றையும் மேவும் தன்னிறைமை என்றதொரு நோக்கத்தைக் கொண்டதாக அணுகு முறையின் கீழ் அதிக அளவில் அரசியலில் சிக்கவைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்கள் பல ஐ.சி.சி.பி.ஆர் இன் கீழான இலங்கையின் கடப்பாடுகளை மீறுவதாகவும், முன்னைய சர்வதேச சட்டத்தரங்களை அனுசரித்து நடப்பதைவிட்டும் அது விலகிப்போகிறது என்பதையும் குறிப்பிட்டுள்ளது.

நீதியரசர்களை நீக்கும் செயற்பாட்டுக்குப் பொறுப்பான, பிரதம நீதியரசர் தலைமை வகிக்கும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவும் சர்வதேசச் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுவதாகக் காணப்பட்டுள்ளது. இறுதியாக, அண்மையில் சட்டமாக்கப்பட்ட 18 ஆவது திருத்தமும் நாடாளுமன்ற குழுவொன்றுடன் குறைந்த அளவிலான கலந்துரையாடலொன்றைத் தொடர்ந்து நேரடியாக நியமனங்களைச் செய்யும் பரந்த அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கியிருப்பதால், சிரேஷ்ட நீதித்துறையினரின் சுயாதீனம் மேலும் நலிவடைந்துள்ளது.

(அ) அடிப்படை உரிமைகள் மனுக்கள் மற்றும் ஏனைய பகிரங்க சட்ட நடவடிக்கைகள்

372.அரசியலமைப்பின் உறுப்புரைகள் 17 மற்றும் 126 ஒன்றாக, நிறைவேற்றுச் செயற்பாடு காரணமாக அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது அடிப்படை உரிமைகள் மனுவொன்றை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் என்பதற்கான ஏற்பாட்டினைக் கொண்டுள்ளன. ஆயினும், இந்தப்பரிகாரத்தின் பயனுறு தன்மை மட்டுப்பட்டதாயுள்ளது. முதலில் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் பற்றி அட்டவணை முழுமையானதாக இல்லை என்பதோடு அவற்றிலுள்ள உரிமைகள் சர்வதேச நீதியுடன் ஒத்துப்போகாத விதத்தில் அரசியலமைப்பினால் வரையறைப்படுத்தப்பட்டிருக்கக்கூடும். இரண்டாவதாக, அத்தகைய மனுக்கள் கடுமையான நடைமுறைகளுக்குக் கீழ்ப்படிவதாயிருக்கின்றன. மீறலின் தன்மை எதுவாக இருந்த போதிலும் அது ஒருவர் விடயத்தில் எவ்வளவு பாரதூரமான தாக்கதை ஏற்படுத்தியிருந்த போதிலும், குற்றஞ்சாட்டப்பட்ட மீறல் நடைபெற்று ஒரு மாதத்தினுள் மனுதாரர்கள் அத்தகைய மனுவை உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

மூன்றாவதாக, தனது சொந்த உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதாக அல்லது அவர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி ஊடாக அடிப்படை உரிமைகளுக்கான பரிகாரத்தை வேண்டி நிற்பதை விடுத்து ஏதும் ஒரு காரணத்துக்காக நேரடித்தரப்புக்கு முடியாமல் அல்லது அத்தரப்பு செய்யாது என்ற நிலையில் நண்பரொருவர் அல்லது பொது நலன் வழக்குத் தொடரலை அது தடுக்கிறது.

373. இப்பரிகாரத்தின் கடந்த கால நடைமுறையை நோக்குமிடத்து, 2000 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான உயர் நீதிமன்றத்தின் சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவுபடுத்தும் விதத்தில் நடத்தப்பட்டது தொடர்பான அடிப்படை உரிமைகள் தீர்ப்புக்கள் வேதனையளிக்கும் விதத்தில் முன்னுக்குப் பின் முரணானவையாக இருக்கின்றன என்பதை அண்மைய ஆய்வொன்று எடுத்துக்காட்டுகிறது. பாதிக்கப்பட்டவர் சார்பான உறுதியான தீர்மானங்கள், உயர் தொகையிலான இழப்பீடுகளை வழங்குதல் மற்றும் தெளிவாக காவல் துறையின் துஷ்பிரயோகத்தைக் கண்டிப்பது போன்றவை வழங்கப்பட்ட தீர்ப்புகளில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட ஒருவர் அடிப்படை மனுவொன்றை முன் வைத்ததுடன், மனுதாரர் அதிக அளவில் விதிகளுக்குக் கட்டுப்படாத மற்றும் முன்னறிந்து கூறுவதற்கு முடியாத சட்டச் செயற்பாடொன்றை எதிர்நோக்க வேண்டியேற்படுகிறது.

அத்தகைய மனுவொன்றைத் தாக்கல் செய்வதற்குத் தேவைப்படும் நிதி மற்றும் சட்ட வளங்கள் அத்துடன் அத்தகைய மனுக்கள் விசாரிக்கப்படும் இடமான கொழும்புக்கான பிரவேசம் ஆகியவை காரணமாக இப்படியாக நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான மிகச் சீரற்ற ஒரு நிலையையும் ஆய்வு கண்டது.

374. மனுதாரர் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார் என்ற அடிப்படை உரிமைகள் மனுவொன்றை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டபோதிலும், அது பயனுறு குற்றவியல் புலனாய்வு மற்றும் வழக்குத்தாக்கல் செய்தலுக்கு வழிகோலுவதாகக் கொள்ள முடியாது. மேலும், துஷ்பிரயோகமாக நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அடிப்படை உரிமைகள் வழக்குகள் வெற்றியான போதிலும், அதனைத் தொடர்ந்து பயனுறு குற்றவியல் புலனாய்வு மற்றும் நீதிமன்றச் செயற்பாடு ஏற்பட்டதாகவும் இல்லை. மேலும், துஷ்பிரயோகமாக நடத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பற்றிய அடிப்படை உரிமைகள் வழக்குகள் வெற்றிபெற்ற போதிலும், நஷ்ட ஈடு அரசுக்கு எதிராக அல்லது தனிப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக வழங்கப்பட்டதா, இழப்பீட்டின் தொகை மற்றும் தீர்ப்பில் செலவுகளை உள்ளடக்குவது போன்ற தெளிவுபடுத்தப்படாத மற்றும் விதிகளுக்கு உட்படாததாகத் தோன்றும் மாறுபாடுகளைக் காணக் கூடியதாகவுள்ளது.

375. இருந்தபோதிலும், 'பல அடிப்படை உரிமைகள் மனுக்கள், ஆள் கொணர்வு மனுக்கள் மற்றும் அழைப்பாணை மனுக்கள் ஆயுதப்படையினர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன' என அரச குழுவுக்கான அதன் எழுத்து மூலமான பதிலில் தெரிவித்துள்ளது. இந்த அடிப்படை உரிமைகள் அல்லது ஏனைய மனுக்கள் ஏதும் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் பற்றியவையா என்பது தெளிவாக இல்லை. குழு அதன் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு ஏதுவாக அரசு இந்த விடயங்கள் தொடர்பான தனிப்பட்ட விவரம் எதனையும் வழங்கவில்லை. **இப்போது சமர்ப்பிக்கப்படும் ஏதும் அடிப்படை உரிமைகள் மனுக்கள் பொதுவாகக் காலம் கடந்தவை என ஒதுக்கப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்ட மீறல் நடைபெற்ற ஒரு மாதத்தினுள் அவை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற நடைமுறை விதி காரணமாக அவை முழுமையாகச் செயலற்றவையாகி விடுகின்றன.**

(ஆ) தனியார் சிவில் வழக்கு

376. அரச நடத்தை பற்றி, 'மீறல்கள் இருப்பின் சிவிலியன் அதிகாரிகளுக்கு எதிராகத் தனிப்பட்ட சிவில் வழக்குகளைத்தொடரலாம்' என அதன் எழுத்து மூலமான பதில்களில் அரசு குறிப்பிட்டுள்ள போதிலும், அது பற்றிய உதாரணம் எதனையும் அது வழங்கவில்லை.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைத்தொடர்பு அதிகரிப்பால் பெண்களின் வாழ்வு...?

நவீன மயமான வாழ்க்கை முறையில் மனிதனின் தேவைகளும் தொடர்பாடல்களும் அதிகரித்து வந்த இந்தக் காலகட்டத்தில் பெண்கள் தமது தேவைகளையும் தொடர்பாடல்களையும் விருத்தி பெறச் செய்து விட்டனர். இதனால் பெண்களின் தொடர்புகள் வெளியுலகில் தடம்பதிய ஆரம்பித்ததோடு அவர்களின் திறமைகள் வெளிக் கொணரப்பட்டது. இதனால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சேர்ந்தே விரிவடைய ஆரம்பித்தன.

இத்தகைய வெளித்தொடர்புகளின் அதிகரிப்பால் பெண்களின் பிரயாணத் தேவைகள் அதிகரித்தது. இதனால் வாகனங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இந்தப் பிரயாணங்களினாலும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இன்னும் இன்னும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றனவே தவிர குறைவதற்கு யாரும் இடமளிப்பதில்லை.

குறிப்பாகப் பேரூந்துகளில் பிரயாணங்களை மேற்கொள்ளும் பெண்கள் பாலியல் ரீதியான சுரண்டல்கள், தேவையற்ற விமர்சனங்கள், வேண்டாத நண்பர்களின் தொடர்புகள் அதிகரிப்பு போன்ற பல்வேறு பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதனால் அவர்களின் மன நிலையை பாதிப்படைவதோடு திறமைகளை வெளிக்கொணர முடியாமல் ஒதுங்கி வாழ வேண்டிய நிலையிலும் உள்ளனர்.



-ஜீவன்,
மானிப்பாய்.

குறிப்பாகப் பெண்கள் சாந்தமானவர்கள் என்பது தெரிந்தும் பல்வேறு வகையான தூண்டல்களால் பெண்களைத் தவறான வாழ்க்கைக்குள் இழுத்துச் சென்று விட்டுப் பின்னர் எல்லாத் தவறுகளையும் பெண்கள் தான் செய்கின்றனர் என்று கூறுவது முற்று முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

ஆனாலும் தவறுகளுக்குள் இழுத்துச் செல்லப்படும் பெண்கள் சற்று நேரம் சிந்தித்தாலே போதும் தவறுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதை ஏன் எமது பெண்கள் சிந்திக்க மறுக்கின்றார்கள்.

அதுமட்டுமன்றித் தவறுகள் புரியும் பெண்களைப் பற்றி அவதூறாகக் கதைக்கும் சமுதாயம் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாட வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

எனவே சமுதாயம் ஒன்றிணைந்தால் போதும் எமது பிள்ளைகளை நாமே பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# பெண் என்பதால்...!

வயதோ பதினெட்டு
கல்வி பயிலும் வயதில்
கல்யாணம் என்னும் பெயரில்
வந்ததே வரன் ஒன்று
யார் என்று தெரியாது
முகவரியும் தெரியாது - ஆனால்
வெளிநாட்டு மாப்பிள்ளையாம்
திடீரென கோயில் ஒன்றில்
திருமணமும் நடந்தது
சுமை குறைந்தது என
சுகம் அடைந்தோர் சிலர்
பெருமைப்பட்டோர் சிலர்
பெருமூச்சு விட்டோர்
சிலர் கண்ணின்
கனவுகளை
காற்றில் பறக்கவிட்டு
கால்கள் கட்டுண்டு
போனது அவளது வாழ்க்கை
நாள்கள் நகர்ந்தனவே
தபாற்காரன் வாசலிலே
தந்தியுடன் நிற்கின்றான்
மாப்பிள்ளைக்கு...
ஈரைந்து மனைவியாம்
வாழ்த்தினோர், போற்றினோர்
வாய் அடைத்துப் போய் நிற்க
வாழ்க்கை என்னும்
நாடகமும் முடிந்ததுவே
அவள் 'பெண்' என்பதால்
மௌனமாய் நிற்கின்றாள்
பெரிய கதையினை புனைகின்றனர்
பெருமையாக அவளை வைத்து



யசிந்தா பாலச்சந்திரன்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

# அடிமைத் தனத்தை அடியோடு அழித்து உரிமையை நிலைநாட்டுபவளே பாரதி கண்ட புதுமைப் பெண்

பாரதி கண்ட புதுமைப் பெண் அற்புதமானவள். அவள் உலகின் விடிவெள்ளியாகவும் திகழ்கின்றாள். மாதர் தம்மை அடக்கி வைக்கும் மடமையை ஒழித்து விடுபவளாகவும் விளங்குகின்றாள். வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியுடையவளாக மிளிர்வதோடு இன்று பட்டங்கள் பெறுவதும் சட்டங்கள் ஆள்வதும் பாரினில் பெண்கள் கைகளிலேயே உள்ளன. இத்தகைய நிலை உருவாக வழிகாட்டிய பெருமை பாரதியையே சாரும்.

ஆண், பெண் நிகர், நல்லறம், கற்பு, நடனம், தேசம் ஓங்க உழைத்தல், வாய்மை போற்ற வாழ்தல், ஆகிய உயர்ந்த எண்ணங்களைப் புதுமைப் பெண் ணின் செயலாகக் காட்டுகின்றார்.

இதேவேளை புதுமைப் பெண்ணின் வருகையைச் சேற்றிலே மலர்ந்த செந்தாமரையாக உவமித்துக் கூறுகிறார்.

தாம் கண்ட புதுமைப் பெண்ணைச் சேற்றிலே மலர்ந்த செந்தாமரையாகக் காட்டுவதன் மூலம் பெண்கள் சமுதாயத்தில் விடுதலை பெற வேண்டிய தன் அவசியத்தை உணர்த்துகின்றார். இவள் பெண்ணினத்தின் விடுதலைக் குரலாக மிளிர்கின்றாள். அவளது செயல்கள் எல்லாம் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயன் தருவதாகவே அமையும் என்ற கருத்தினைப் புலப்படுத்துகின்றன.

அவள் ''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச் செருக்கும்'' உடையவளாகத் தோன்றுகிறாள்.

இவள் இலட்சியப் பெண்ணாக மட்டுமன்றி பெண்ணுலகுக்குப் புதுவழி காட்டுபவளாக, பெண்ணடிமைத் தனத்தை அழித்துப் பெண்ணுரிமையை நிலைநாட்டுபவளாகத் திகழ்கின்றாள். எனவே பெண்மையின் சிறப்பினை உணர்ந்து மதித்து வாழ்ந்திடப் பழகுதலே ஏனையவர்களின் கடமையாகும்.



-க. தவலட்சியா,
மாதகல் வடக்கு, மாதகல்.

# அன்னையின் ஒரு வரம்



பத்துமாதம் கருவறையில்
பரிதவித்து எனைச் சுமந்து
பாரினிலே பெற்றவள் நீயே
உன் உதிரத்தைப்
பாலாக - எனக்கு
ஊட்டி வளர்த்தவள் நீயே
அடித்தாலும் அணைத்தாலும்
கரம் ஒன்று தான் என் அன்னை
குணத்தாலும் மனத்தாலும்
குலம் ஒன்றுதான் என் அன்னை
ஆயிரம் உறவுகள் என் அருகில்
இருந்தாலும் அம்மா உன்னைப் போல்
வேறு ஓர் உறவு உண்டோ
பசி தூக்கம் மறந்து
பகலிரவாய் கண் விழித்து
பத்துமாதம் எனைச் சுமக்க
என்னபாடு பட்டாயோ?
தெய்வத்தின் வடிவமே
தேவதையின் உருவமே
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும்
உன் வயிற்றில் பிறக்கும்
வரம் வேண்டும் தாயே!

வி. அஜுந்தன்,
மருக்காரம் பளை, வவுனியா.

# அனைத்தையும் துறந்து குடும்பத்தைக் காத்த அன்னையை ஒதுக்கி வைக்கும் பிள்ளைகள்

குடும்பத்தில் உள்ள பெண்கள் எந்தளவுக்கு உயர்ந்த பொறுப்புடையவர்களாக இருந்தாலும் அவர்களுக்குரிய மரியாதைகள் அரவணைப்புக்கள் யாவும் அவளது வயதெல்லையில் தான் தங்கியுள்ளது.

இன்று பல குடும்பங்களில் வயோதிபம் அடைந்த பெண்களில் அதிகமானோர் குடும்பத்தில் அடிமைப் படுத்தப்பட்டவர்களாகவோ அல்லது ஒதுக்கப்பட்டவர்களாகவோ தான் காணப்படுகின்றனர்.

இவர்கள் முன்னர் 'தாய்' என்னும் நிலையில் இருந்து பல்வேறு குடும்பப் பொறுப்புக்களையும் கணவன், பிள்ளைகளின் கடமைகளையும் தியாக உணர்வுடனும் தாய்மை அன்புடனும் நிறைவேற்றி ஓய்வடைந்தவர்கள் என்பதைப் பிள்ளைகள் மறந்து விடுகின்றனர்.

இந்த ஓய்வு நிலையில் இருக்கும் பெண்களில் அதிகமானோர் அவர்களின் பிள்ளைகள் வீட்டில் வேலைக்காரி வடிவில் அதிக சுமைகளுடனும், துன்பங்களுடனும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் இவர்களின் மனநிலை எந்தளவுக்குப் பாதிப்படைந்திருக்கும், பாதிப்படைகின்றன என்பது பற்றி பிள்ளைகள் சிந்திப்பது கிடையாது.

பிறந்த ஒவ்வொருவரும் வயோதிபம் அடைய வேண்டியது காலத்தின் கட்டாயம். இவ்வாறு வயோதிபம் அடையும் ஒருவர் குழந்தைகள் போன்றவர்கள் என்று பெரியவர்கள் கூறியிருக்கின்றார்கள். இவர்கள் பிள்ளைகளின் கடமைகளையும் கணவனின் கடமைகளையும் தியாகமாகச் செய்துவிட்டு தனக்கென எதுவுமே சேர்த்து வைக்காமல் உழைத்துக் களைத்து ஓய்ந்து போய் பிள்ளைகளின் அரவணைப்பையும், ஆதரவையும் நாடி அவர்களுடன் சேர்ந்து வாழ்கின்றார்கள். இவர்களைப் பாசத்துடன் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு பிள்ளைகளினதும் கடமையாகும்.

அவர்களின் தேவைகள், ஆசைகளை நிறைவேற்றிக்கொடுக்க வேண்டிய கடப்பாடும் பிள்ளைகளுக்கே உள்ளது என்பதை நாம் அனைவரும் மறந்து விடக்கூடாது.

'அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதைப் போல வயோதிபம் அடைந்த எமது தாய் தந்தையைப் பராமரித்து அன்பு செலுத்த முன்வருவதோடு காலப்போக்கில் நாமும் முதியவர்கள் ஆக வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதை உணர மறந்து விடக் கூடாது.



-சோபியா,
உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 மில்லியன் ரூபா செலவில் சர்வதேச தரத்திலான மைதானம்

## கிளிநொச்சியில் விரைவில் அமையும்

கிளிநொச்சி, ஜூன் 6

இலங்கையில் உள்ள 9 மாகாணங்களிலும் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை விளையாட்டுத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

முதற்கட்டமாக வடமாகாணத்துக்கான மைதானம் கிளிநொச்சியில் 300 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற அடிப்படையில் வடமாகாணத்தில் இந்த விளையாட்டு மைதானம் முன்னுரிமை அடிப்படையில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மைதானத்துக்கான கட்டுமானப் பணிகள் யாவும் விளையாட்டுத்துறை அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது மைதானம் அமைப்பதற்குரிய திட்ட மதிப்பீடுகளை விளையாட்டுத்துறை சார் நிபுணர்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பெரும்பாலும் அடுத்த மாதம் இறுதியில் இதற்கான முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (த-9)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிக்கெட் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் பணிப்புரைக்கு அமைய இலங்கை கிரிக்கெட் சபையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரம் இரண்டு நாள் பயிற்சி முகாம் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி ஆகியவற்றில் இடம்பெற்றன.

இந்தப் பயிற்சி முகாமில் வடமாகாண கிரிக்கெட் பயிற்றுநர் ரவிந்திர புஸ்பகுமார, வடக்கு கிழக்கு மாகாணக் கனிஷ்ட தேர்வாளர் ஏ.எஸ்.நிசாந்தன், யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் லக்சிதஹேரத், மன்னார் மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் ஆர்.ஜே. ஜெயக்குமார், வவுனியா மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் வி.ஆர். கெங்காதரன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்கள்.

பயிற்சி முகாமைத் தொடர்ந்து பாடசாலை அதிபர்கள் பாடசாலை விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களுடன் கிரிக்கெட்டின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றது. (த-23)

# பாடசாலை அணிகள் பங்குகொள்ளும் விளையாட்டுப் போட்டி அடுத்த வாரம்

வலி.வடக்கு, ஜூன் 6

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாண மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் விளையாட்டுப்போட்டிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

போட்டிகளில் முதலாவதாக வடமாகாண கல்வித் திணைக்களத்தால் முதல் தடவையாக அறிமுகம் செய்யப்பட்ட அரை மரதன் ஓட்டப் போட்டியுடன் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி அரை மரதன் ஓட்டப் போட்டிகள் கோப்பாயில் இருந்து ஆரம்பமாகி கரவெட்டியில் நிறைவு பெறவுள்ளன.

இந்தப் போட்டியில் வவுனியா, மன்னார் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்ட வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர். (த-86)

# எல்லே சுற்றுப் போட்டியில் மாகாணச் சம்பியனானது யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணம், ஜூன் 6

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான எல்லே போட்டியில் யாழ். மாவட்ட அணி வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய யாழ். மாவட்ட அணி 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தார்கள்.

ஜெயசஞ்சீவன், சிவதாசன் தலா 3 ஓட்டங்களையும் சத்தியசீலன் 2 ஓட்டங்களையும் ஜெயசீலன் ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து விளையாடிய மன்னார் மாவட்ட அணி 6 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தார்கள். அவுகத் 3 ஓட்டங்களையும் நபீஸ் மில்கான், ஜெகான் தலா ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய யாழ். மாவட்ட அணி அனைவரும் ஆட்டமிழந்து மீண்டும் 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சுதர்சன் 5, சஜீபன் 4, ஜெயசுபன் 3, சுகிர்தன், சிவரூபன் தலா ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தார்கள்.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அணி 23 : 6 ஓட்டங்கள் நிலையில் மன்னார் மாவட்ட அணியை வெற்றி பெற்று வடமாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-86)

# வென்றது சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணி குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (த-23)

# வவுனியா வீரர்கள் 18,19 ஆம் இடங்களில்

கிளிநொச்சி, ஜூன் 6

புத்தளத்தில் நடைபெற்ற தேசிய மட்ட ஆண்,பெண் இருபாலாருக்குமான மரதன், வேக நடை, சைக்கிள் ஓட்டப்போட்டிகள் இடம்பெற்றன.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நவநீதன் 18 ஆவது இடத்தையும் வேக நடைப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். சமிந்தன் 19 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர். (ஐ-23)



தாவடி காந்தி கலை வளர்ச்சி மன்ற சரஸ்வதி தேவி சிறுவர் முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் பாண்ட் வாத்திய இசையுடன் அணிவகுத்துச் செல்லும்பாலர் முன்பள்ளி சிறுவர் சிறுமியர்கள்.

# இன்றைய ஆட்டங்கள்

கைதடி,ஜூன் 6

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சி பிரதேச ரீதியாக நடத்திவரும் ''செற்றப்'' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் மட்டுவில் வான்மதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஐ-288)

✸ ✸ ✸

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

✸ பிற்பகல் 3.45 மணி- பாரதி வி.க. எதிர் ஆனைக் கோட்டை யூனியன் வி.க.

✸ மாலை 5 மணி- குருநகர் பாடும்மீன் வி.க. எதிர் குருநகர சென். றோகஸ் வி.க. (ஐ-23)

# பாடும்மீன், யூனியன் அணிகள் வெற்றி

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டங்களில் குருநகர் பாடும் மீன், ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதியது. குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் யாழ்.பல்கலைக்கழக அணியை வெற்றி கொண்டது. (ஐ-23)



யாழ். துரையாப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மை போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட யாழ்.கல்வி வலயத்துக்கான வெற்றிக் கிண்ணத்தை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாலசிங்கத்தின் பாரியார் திருமதி பா. செல்வராணி சென்.ஜோன்ஸ் வீரர் பானு விடம் கையளிக்கிறார். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறப்பாக ஆடினேன்...

## மனம் திறக்கிறார் சானியா!

பிரெஞ் ஓபன் இறுதிச் சுற்றில் தோல்வி யடைந்தது மறக்க முடியாத வலி தான். ஆனா லும் சிறப்பாக விளையாடியது மனநிறைவை தந்துள்ளது என்று இந்திய ரெனிஸ் வீராங் கனை சானியா தெரிவித்துள்ளார்.

பிரெஞ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் போட்டியின் மகளிர் இறுதிச் சுற்றில் இந்தியா வின் சானியா-ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி 4-6, 3-6 என்ற நேர் செட்களில் செக்.குடியரசின் அண்ட்ரியா-லூசி ஜோடியிடம் தோல்வி கண்டது.

இதுகுறித்து சானியா மேலும் கூறியதாவது:

எந்த நிலையிலும் தோல்வி, தோல்விதான். ஆரம்பத்தில் அது வேதனையானதுதான். இருப்பினும் எனது கடந்தகால ரெனிஸ் வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில் இப்போது இறுதிச்சுற்று வரை முன்னேறியது மனநிறைவு அளிக்கின்றது. இறுதி ஆட்டத்தில் எங்களின் எதிர் ஜோடியான அண்ட்ரியா-லூசி ஜோடி எங்களைவிட சிறப்பாக ஆடினர் என்றார்.

தன்னுடன் ஜோடி சேர்ந்து விளையாடிய ரஷ்யாவின்' எலினா வெஸ்னினா குறித்துப் பேசிய சானியா, நான் இதுவரை விளையாடிய வர்களில் வெஸ்னினாவே எனக்கு மிகச்சிறந்த ஜோடி என்றார்.

சானியா-வெஸ்னினா ஜோடி சிறப்பாக ஆடிவருவது குறித்து கேட்ட போது, நாங்கள் இருவரும் இளம் வயதில் இருந்தே நல்ல தோழிகள். வெஸ்னினா மிகச்சிறந்த பின் கை ஆட்டக்காரர். முன் கை ஆட்டக்காரர்க ளின் சேவீஸ்களை முறியடிக்க பொருத்தமா னவர். இதுவே எனக்கு பலம் சேர்த்தது என்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பெரிய அளவில் சோபிக்காதது குறித்து சானியா விடம் கேட்ட போது ஒற்றையர் பிரிவு ஆட்டங் களில் முன்னணி வீரர்களை எதிர்கொள்வதும் தோல்விக்கு ஒரு காரணம். ஒற்றையர் பிரிவில் தோற்றதை துரதிருஷ்டமாக பார்க்கவில்லை. என்னை விட சிறந்த வீராங்கனைகளிடமே தோற்றுள்ளேன்.

ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில் ஜஸ்டின் ஹெனினிடமும், பிரெஞ்ச் ஓபனில் அக்னீஸ்கார ரத்வன்ஸ்காவிடமும்தான் தோற் றேன். இருப்பினும் ஒற்றையர் பிரிவில் கடினமான பயிற்சி மேற்கொண்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன். இன் னும் சில மாதங்களில் தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள் வருவேன் என்றார். (15)

# எளிதான அணியல்ல

மேற்கிந்தியத்தீவுகள் எளிதாக வெல்ல கூடிய அணி இல்லை, என்று இந்திய சுழற்பந்துவீச் சாளர் ஹர்பஜன் தெரி வித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுக ளுக்குச் சுற்றுப்பயணம் சென்றுள்ள இந்திய அணி, எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதி முதல் ஒரு நாள் போட்டியில் பங்கேற் கின்றது. இது குறித்து அணி யின் துணைத் தலைவர் ஹர்ப ஜன் கூறியதாவது:

மே.தீவுகள் அணியில் அதிரடி வீரர் கெய்ல், சந்தர்போல் போன்ற அனுபவ வீரர்கள் இல்லாத போதும், மற்ற வீரர் கள் நல்ல 'போர்மில்' உள்ளனர். இவர்களை வெல்வது எளிதான காரியமல்ல.

சொந்த மண்ணில் பல வெற்றிகளை பெற்று வந்த எங்களுக்கு, இது நெருக்கடியை கொடுக்கும் என்று நினைக்கின்றேன். முதல் ஒரு நாள் போட் டிக்காக கடினமான பயிற்சி மேற்கொண்டு வருகி றோம். - இவ்வாறு ஹர்பஜன் கூறினார். (15)

# பதிலடி கொடுக்கிறது இலங்கை

## இரட்டைச் சதத்தை தவறவிட்டார் டில்சான்

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியில் இலங்கை அணி பலமான நிலையை அடைந்துள்ளது. அணித்தலைவர் டில்ஷான் 7 ஓட்டங்களால் இரட்டைச் சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி யின் தலைவர் டில்ஷான் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸிக்காக 486 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அந்த அணி சார்பில் பிரியர் 131 பந்துகளில் 126 ஓட் டங்களை ( 19 பவுண்டரிகள்) விளாசினார். குக் 96 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் வெலகதர 4 விக்கெட்டுக்களை யும், லக்மால் 3 விக்கெட்டுக்களையும், ஹேரத் 2 விக்கெட் டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப் பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி முதலாவது விக் கெட்டுக்காக மிகச் சிறப்பான இணைப்பாட்டத்தை பகிர்ந்து கொண்டது. 207 ஓட்டங்களை டில்ஷான்- பரண விதான ஆகியோர் எடுத்து சிறப்பான அடித்தளத்தை இட்டனர்.


மிக அபாரமாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த பரணவிதான 65 ஓட்டங்களைப் ( 10 பவுண்டரிகள்) பெற்ற நிலையில் பின்னின் பந்து வீச்சில் ஸ்ரோரஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். மறு முனையில் டில்ஷான் சதம் கடந்து அசத்தினார்.

இரண்டாம் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 231 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்திருந்தது. டில்ஷான் ஆட்டமிழக்காமல் 127 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் மூன்றாம் நாளும் இலங்கையின் கையே ஓங்கத் தொடங்கியது. ஒருபுறம் டில்சான் பந்துகளை எல் லைக்கோட்டை நோக்கி விரட்டிக் கொண்டிருகக குமார் சங்கக்கார விக்கெட்டைக் காப்பதில் குறியாக இருந்தார். எனி னும் இலங்கை அணி 288 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தன்னுடைய இரண்டாவது விக்கெட்டாக சங்கக் காரவை இழந்தது. டிரம்லட்டின் பந்தில் விக்கெட் காப்பாளர் மத்தியூபிரேயரிடம் பிடிகொடுத்து 26 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார் சங்கக்கார. 93 ப்ந்துகளைச் சந்தித்து இந்த ஓட்ட எண்ணிக்கை அவர் பெற்றிருந்தார்.

தொடர்ந்து வந்த மஹேல ஜெயவர்த்தன டில்ஷானுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை உயரத் தொடங்கியது. இந்த நிலையில் இரட்டைச் சதம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்த டில்ஷான் பின்னின் பந்தில் எதிர் பாராத சமயத்தில் போல்ட் ஆனார். 193 (253 பந்துகள்) ஓட் டங்களுடன் களத்தை விட்டு டில்ஷான் வெளியேற சமரவீர உள்நுழைந்தார். எனினும் மாலை தேநீர் இடைவேளைக்கு முன்னர் மழை கொட்டத் தொடங்கியதால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது. இதன்போது மஹேல ஜெயவர்த்தன 40 ஓட்டங்களுடனும் சமரவீர ஒரு ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். இலங்கை அணி 3 விக்கெட் இழப்புக்கு 372 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நான்காம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.

# மீண்டும் ஹசான்...



இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான அரவிந்த டி சில்வா மற்றும் சனத் ஜெயசூரிய ஆகியோர் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹசான் திலகரட்ன இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷேவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் தம்மீது சுமத்தப்பட்ட இந்தக்குற்றச்சாட்டை அரவிந்த டி சில்வா மறுத்துள்ளார். சனத் ஜெயசூரியவும் தம் மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ளார். (15)

# லீ பதித்தார் முதல் வெற்றி



சம்பியன் பட்டம் பெற்ற லீ

பிரெஞ் ஓபன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதன் முறையாக சீனாவின் நா லீ சம்பியன் பட்டம் கைப்பற்றி அசத்தினார். சீன வீராங்கனை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்வது இதுவே முதன் முறை. பரிசில் பிரெஞ் ஓபன் ரெனிஸ் கிராண்ட்ஸ்லாம் தொடர் நடக்கின்றது.

இதன் பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் 'நடப்பு சம்பியன்' இத்தாலியின் பிரான்செஸ்கா ஷியாவோனே, சீனாவின் நா லீயை சந்தித்தார். ஆரம்பத்தில் இருந்தே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நா லீ, முதல் செட்டை 6-4 என்று கைப் பற்றினார். இரண்டாவது செட் டில் ஷியாவோனே பதிலடி தருவார் என்று எதிர் பார்க்கப்பட்டது.

ஆனாலும் 'டை பிரேக்கர்' வரை நீடித்த இந்த செட்டையும், நா லீ தன்வசப்படுத்தினார். இறுதியில் 6-4, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்ற சீனாவின் நா லீ, முதன் முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுநாயக்க சம்பவம்:
# ரகசியப் பொலிஸாரின் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 06

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான மோதல்களில் முன்னின்று செயற்பட்டவர்கள், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்களை அடையாளம் காண்பதற்காக வீடியோப் பதிவுகள், தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள் ஆகியவற்றின் மூலமான தகவல்களை பாதுகாப்பு அதிகாரிகள் திரட்டி வருகின்றனர்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல இதைத்தெரிவித்துள்ளார்.

தேசிய புலனாய்வுப் பணியகத்திடம் இப்பணி ஒப்படைக் கப்பட்டுள்ளதாக வும் அவர் கூறினார்.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள தனி நபர் ஆணைக் குழுவிடமும் இத்தகவல்கள் கையளிக்கப்பட்டு குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப் படும் எனவும் லக்ஷ்மன் ஹுலுகல்ல கூறினார்.


## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த
மலேசியாவில் வசிக்கும், 12இல் செவ்வாயும்,
கேட்டை நட்சத்திரம் 4ஆம் பாதமும் கொண்ட
01.09.1968 இல் பிறந்த அழகான டாக்டருக்கு
டாக்டர் அல்லது வெளிநாட்டு பட்டம்பெற்ற தொழில்
தகைமையுடைய மணமகளை எதிர்பார்க்கிறார்கள்.
விருப்பம் உள்ளவர்கள் அண்மையில் எடுத்த
முழுப்புகைப்படத்துடன் சாதகத்தையும்
கீழ்வரும் விலாசத்துக்கு
அனுப்பிவைக்கவும்.

(49,20,22)

P.O.Box No.155, Kajang Post Office,
43007, Kajang, Selangor, Malaysia.
தொடர்பு: 0776143684





## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய
## கர வருஷ வருடாந்த மஹோற்சவம் – 2011

அலைகடல் சூழ் நடுவே அமைந்திருந்து வேண்டுவார் வேண்டுவதை அருளி அருள்பாலிக்கும் வரலாற்றுப் புகழ்மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவம் இந்த ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து ஆடி மாதம் 16ஆம் திகதி தெப்போற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

அம்பாளின் ஆலய புகுமுக 108 அடிக்கோபுர வேலைகள் முடிவுறும் நிலையிலுள்ளதுடன், தெற்கு வீதி நுழைவாயில் அலங்காரக்-கோபுரம், ஆலய வளாகத்தில் அமைந்துள்ள கேணி, கலையரங்கு என்பன புதுப் பொலிவுற அமைக்கப்பட்டு உற்சவகாலம் முழுவதும் ஆன்மீகச் சொற்பொழிவு, திருமுறை ஓதல், இன்னிசைக் கச்சேரி என்பன இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் யாத்திரிகர்களின் வசதி கருதி இலங்கை போக்குவரத்துச் சபையினர், புங்குடுதீவு தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் போன்றவை மேலதிக பேருந்து சேவைகளை யாழ்-குறிகாட்டுவான் துறைமுகம் வரை தினமும் நடத்தவுள்ளதுடன் நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினால் பாதுகாப்பான படகுச் சேவைகளும் தொடர்ந்து இடையூறின்றி நடத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாத்திரிகர்களின் வசதி கருதி சுகாதார வசதிகள் குடிதண்ணீர் வசதிகள் வழமை போன்று அமுதசுரபி அன்னதான சபையினரின் அன்னதான ஒழுங்குகளும் சிறப்பாக நடைபெற ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

ஆலயத்துக்கு வரும் அடியார்கள் சைவ கலாசார மரபுகளுக்கிணங்க ஆடைகள் அணிந்து கொள்வதுடன் தங்க ஆபரணங்கள் முதலியன அணிந்து வருவதையும் பாதுகாப்புக் கருதித் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அடியார்களுக்கு உதவ சாரணர் இயக்கத்தினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், செஞ்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், மக்கள் நலன்புரி சங்கம், ஆலய தொண்டர் சபையினர் தமது சேவைகளையும் வழங்கவுள்ளனர்.

அடியார்களின் தேவைகருதி ஆலய அறங்காவலர் சபையினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

எனவே அம்பிகையின் அடியார்கள் அனைவரும் அலைகடல் எனத் திரண்டு வந்து அம்பிகையின் உயர் திருவிழாவில் கலந்து அன்னையின் தெய்வீக திருவருளைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அன்பாக வேண்டுகின்றோம்.

### உயர் திருவிழாக் கால அட்டவணை

| | | |
|---|---|---|
| 01.07.2011 | வெள்ளிக்கிழமை | 01ஆம் திருவிழா பகல் கொடியேற்றத்துடன் (12 மணி) |
| 05.07.2011 | செவ்வாய்க்கிழமை | 05ஆம் திருவிழா இரவு முத்துச்சப்பரம் |
| 07.07.2011 | வியாழக்கிழமை | 07ஆம் திருவிழா இரவு கைலைக் காட்சி |
| 09.07.2011 | சனிக்கிழமை | 09ஆம் திருவிழா பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 10.07.2011 | ஞாயிற்றுக்கிழமை | 10ஆம் திருவிழா பகல் சிவபூஜை கைலைக்காட்சி<br>10ஆம் திருவிழா இரவு திருமஞ்சம் |
| 11.07.2011 | திங்கட்கிழமை | 11ஆம் திருவிழா பகல் விசேட கருட-சர்ப்ப பூஜை, வாயு பட்சணி நாகம் வீதியுலா (இரவு பூந்தண்டிகை) |
| 13.07.2011 | புதன்கிழமை | 13ஆம் திருவிழா பகல் கைலைக்காட்சி, இரவு சப்பரம் |
| 14.07.2011 | வியாழக்கிழமை | 14ஆம் திருவிழா பகல் தேர் 09.30 மணி |
| 15.07.2011 | வெள்ளிக்கிழமை | 15ஆம் திருவிழா காலை தீர்த்தம் |
| 15.07.2011 | வெள்ளிக்கிழமை | 15ஆம் திருவிழா இரவு திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 16.07.2011 | சனிக்கிழமை | 16ஆம் திருவிழா இரவு தெப்போற்சவம் (பூங்காவனம்) |

அறங்காவலர் சபையினர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

(39) (சி/484)



## உயர் தேசிய பட்டயக்கல்விக்கான யூன் மாத மாணவர் உள்ளீர்ப்பு
## HND June Intake

IDM Chavakachcheriதனது வெற்றிகரமான 6வது பிரிவு உயர்தேசிய பட்டயக்கல்வியை (HND) ஆரம்பிக்கவுள்ளது. இதுவரை எம்மிடம் கற்ற முதலாவது பிரிவு மாணவர்கள் வெற்றிகரமாக கற்கை நெறியை பூர்த்திசெய்து மிகவிரைவில் தொழில்வாய்ப்பு மற்றும் வெளிநாட்டுக்கல்வி வாய்ப்பைப் பெறவுள்ளனர்.

வெற்றியாளர்கள் வரிசையில் உங்களையும் இணையுங்கள்.June intake **HND BATCH 6**இல் இணைவதனுடாக

குறிப்பு:
உயர் தேசிய பட்டயக்கல்வி தொடர்பான விசேட Let's HaNDs together season 3 எனும் நிகழ்ச்சித்திட்டம் வரும் வெள்ளி 10.06.2011 அன்று எமது சாவகச்சேரி கிளையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து HND தொடர்பான மேலதிக அறிவை பெற்றுக்கொள்ள முடியும். கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடும் சந்தர்ப்பம் கிட்டும். இந்நிகழ்ச்சி முற்றிலும் இலவசம். வருகை தர விரும்புபவர்கள் உங்கள் வருகையை 0217 200 600 என்ற இலக்கத்திற்கு 08.06.2011ஆம் திகதிக்கு முதல் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

✓IELTS கற்கை நெறியை பயிலும் வாய்ப்பு இப்போது எம்மிடமிருந்து.

HND

Registrations on or before June 30th

IDM CHAVA
Chavakachcheri Branch
Step into (pvt)Ltd.
No :- 5 1/1, Kandy Road, Chavakachcheri.
Tel :- +9421 2 270 270 / +9421 7 200 600
web:- www.stepinto.lk






எமது வாடிக்கையாளர்களுக்கு....

புதிய கட்டடத்திலே பிரமாண்டமான டிஜிற்றல்
இயந்திரங்களுடன் சிறப்பானதோர்
திறப்புவிழா
அனைவரையும்
வருக வருக என உவகையுடன்

NET DIGITAL COLOUR LAB

....வரவேற்கின்றோம்...

எங்கே?
V.T.K கட்டடம்
இல.94, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

எப்போ?
06 ஆனி 2011
11.30 - 1.00

Tel: 0212240766

(49,20,21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணஅறிவித்தல்கள்

## செல்வி அன்ரன் சேவியர் டொறின் கொண்சலா (வினி)



சிலாவத்தை, 3ஆம் கட்டை, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் அகஸ்தியார் ஒழுங்கை, இளவாலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அ.டொறின் கொண்சலா கடந்த 04.06.2011 சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் அன்ரன் சேவியர் மரியகொறற்றி தம்பதியரின் அன்புப் புதல்வியும் நியோமி, மெற்றில்டா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மரியநாயகம் மற்றும் திரேசம்மா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (06.06.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புகையிரத நிலைய வீதி, மிருசுவிலில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித நீக்கொலாஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக் காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
மிருசுவில். (4948) (34)

தகவல்:
திருமதி றோமலோயோசேப் (பவா).

## (விஷகடி) கணபதிப்பிள்ளை கண்ணம்மா



மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் டச் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கண்ணம்மா நேற்று (05.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஷகடி வைத்தியர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான நாகலிங்கம்-மாரிமுத்து தம்பதியரின் அருமை மகளும் காஞ்சென்றவர்களான நல்லையா, நாகேஸ்வரி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரகுநாதன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் தேவராசா ஆகியோரின் பாசமிகு தாயும் வட்சலாவின் அருமை மாமியும் ஜீவனா, ஜீவாகரன், சிவாகரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் அளவெட்டி, கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் வீதி,
உடுவில். (4945) (34)

தகவல்:
குடும்பத்தினர் (தேவராசா-மகன்).

## ஓய்வூதியத் திட்டத்தின் நன்மை.... (05ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைவிட வேண்டும். மக்கள் இந்தத் திட்டத்தினால் வரும் நன்மைகளை அறியாமல் இருக்கிறார்கள். தப்பான பிரசாரமே காரணம். இது அரசுக்கு நல்ல தல்ல என்றார். சிரேஷ்ட அமைச்சர் பியசேனகமகேயும் இதேகருத்தை வெளியிட்டார். இந்தக்கட்டத்தில் தொழில் அமைச்சர் ஆத்திரமடைந்து பொதுமக்களுக்கு விளக்கம் மளிக்கத் தாம் போதிய நடவடிக்கைகளை எடுத்தார் என்று விளக்க முற்பட்டார். இதில் திருப்பதியடையாத ஜனாதிப்தி தொழிலாளர்களுக்கு சரியான விளக்கம் அளிக்கப்பட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கமாட்டாது என்றார்.

அமைச்சர் கமகே தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் அனைவரும் ஜனாபதிக்கு வாக்களித்தவர்கள். இந்தப் பிரச்சினையை இப்போது ஜனதா விமுக்தி பெரமுனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றது என்றார். ஜனாதிபதி கடந்த வாரம் தெரிவித்ததுபோல் தொழிலாளர்கள் இத்திட்டத்தை விரும்பாவிட்டால் அவர்களின் தொண்டைகளில் அதனைத் திணிக்கவேண்டியதில்லை. திட்டம் முழுமையாக வாபஸ் பெறப்பட வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டதுடன், இந்தத் திட்டம் செயல்படுத்தப் படுவதை விரும்பும் மக்களும் இருக்கக் கூடும் அதனால் இத் திடத்தின் மீது நாம் தொடர்ந்து செயல்படுவது தேவைப்படுவதாகும். இதற்கு மாற்றாக ஒரு சட்ட நகலைத் தயாரித்து, அம் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து மேற்கொண்டும் போராட்டங்கள் நடக்காமல் இருப்பதை உறுதிசெய்வோம் என்றார்.

### ஜே.வி.பி.மீதே குற்றச்சாட்டுகள் அனைத்தும்

சமீபகால பிரச்சினைகள் அனைத்துக்கும் ஜே.வி.பியே காரணம் என்று கூட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது. ஜே.வி.பியினர் ஜனாதிபதியின் நிர்வாகத்தின் மீது கரி பூ சுவதற்கு முயற்சி செய்கின்றனர் என்று கூறப்பட்டது. பல் கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில்வழங்கப்படும் தலைமைத்துவ பயிற்சிகளையும் அவர்கள் குற்றஞ் சாட்டுவதாக கூறப் பட்டது.

ஓய்வூதிய திட்டத்தைக் கைவிட்டு விழிப்புணர்வு திட்டம் ஒன்று முன் எடுக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் சுகாதார அமைச்சருமான மைத்திரி பால சிறிசேன, அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் செயலாளரும் எரிபொருள் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த முதலியவர்கள் முன்மொழிந்தார்கள். இதற்கு அமைச்சர் லொக்குகேயும் இணக்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தாமும் இதற்கு இணங்குவதாகக் கூறி மார்க்ஸிய லெனினிஸபாணியில் ''நாம் ஓர் அடி பின்வைத்து இரண்டு அடிகள் முன் நகர்வோம்'' என்றார்.

அன்றிரவு வெளியிடப்பட்டிருந்த அதிகாரப்பூர்வ அறிக்கையொன்றில் கட்சியின் மத்தியகுழுவில்,ஓய்வூதியத்திட்டத்தைகைவிடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக் கப்பட்டிருந்தது. காரணம் கூறப்படவில்லை. ஆனால் சுதந்திர வர்த்தக வலயத்தில்- ஏற்றுமதி தனியார்துறை வலயத்தில் தொழில்துறை அமைதி உறுதிப்படுத்தவேண்டும் என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## கிளிநொச்சி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் பங்கேற்க விருக்கிறார். புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அரச ஊழியர்களுக்கான இழப்பீடு, கடும் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவு, சுயதொழில் உதவிக் கொடுப்பனவு என 1300 பேருக்கு உதவி வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்.

ஜனாதிபதியின் வருகையை ஒட்டி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஏ-9 வீதியில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினர் குறுக்கு வீதிகளில் பணியாற்றுகின்றனர். வீதியில் செல்வோர் சோதனை செய்யப்படுகின்றனர்.

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Mitsubishi Lancer Car, கன்டர் (Body) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. குறைந்த விலையில் குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள் (Japan) என்பன உடன் விற்பனைக்குண்டு.

0771727241, 0778693332

(ஐ-405)

# வேலை வாய்ப்பு


1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (Technical Officers) - 2
கட்டட/ வீதி வேலைகளை மேற்பார்வை செய்யக்கூடிய தராதரமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை. தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் பயிலுனராக விண்ணப்பிக்கலாம்.
2. அலுவலக எழுது வினைஞர் (Office Clerk) - 2
கா.பொ.த உயர்தர சித்தி.
3. வீதி றோலர் இயக்குநர் (Road Roller Operators) - 2
பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.
4. ரிப்பர் றைவர் (Tipper Drivers) -2

உடன் விண்ணப்பிக்கவும்:-

லீடிங் கொன்ஸ்ரக்ஷன்,
# இல.205, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பே:-0776751512.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 ★ 07 ★ 1952



மறைவு
06 ★ 06 ★ 2005

## முத்து கதிரமலை (செல்லக்கிளி)

(உரிமையாளர், கிருபா கிறசர், வல்லைச் சந்தி, அச்சுவேலி)


வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது தெய்வமே!
ஒளி தரவென ஓய்வின்றி உழைத்தீர்கள்
ஒய்வெடுத்து ஆனதையா ஆறாண்டுகள்!
வாழ்வில் நாம் உயர நல்ல ஏணியாய் - நீயிருந்தாய்
நாம் உயர்ந்த வேளை - எம் உயர்வை
காண முடியாமல் விண்ணுலகம் சென்றதேனோ?
அன்பால் அனைவரையும் கவர்ந்து விட்டு
அவனியில் எமை விட்டுச் சென்றதேனோ?
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அழியாத
நினைவுகளால் என்றும்
எங்களுடன்...

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

விளையாட்டரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (4940)

மனைவி,
பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இரத்தினம் தங்கராசா

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 15.04.1937
மறைவு 18.05.2010
திதி- பஞ்சமி

வைரவர் கோயிலடி
கே.கே.எஸ். வீதி
மல்லாகம். (4942)

என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் கந்தசாமி (கருணா ஸ்ரோர்ஸ், மில் வீதி, வவுனியா)

காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் இல. 18/10, பிள்ளையார் கோயில் வீதி, வெளிக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கருணா ஸ்ரோர்ஸ் (இல. 25, மில் வீதி வவுனியா உரிமையாளர் )ஆறுமுகம் கந்தசாமி கடந்த(04.06.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- பார்வதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - முத்துப்பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், கருணாகரன் (ஜெயசிறி காட்வெயர் மில்வீதி),காலஞ்சென்ற கருணாவதி ம்ற்றும் கருணாநிதி(லண்டன்), கருணாதேவி (கனடா) கருணாறஞ்சனி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகாஷனி, சிவபாலன் (வேல்முருகன் ஜூவலறி, கண்டி வீதி, வவுனியா), சத்தியசுமதி (லண்டன்), ஞானபண்டிதன் (கனடா), றவீந்திரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனும், பிரியதர்சினி, பிரியதர்சனா, பிரியதர்சன், மிதுலன், டிலக்சனா, சங்கவி, சஞ்சை, கவினா, சரண், கவின், சிபிஷன், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி கருணாகரன்,
இல.18/10, பிள்ளையார், கோயில் வீதி,
வெளிக்குளம், வவுனியா. (4944)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசிட் வீச்சுக்கு இலக்கான இளவாலை யுவதி ஒன்றரை மாதங்களின் பின்னர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 6

இளவாலைப் பகுதியில் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் அசிற் வீச்சுக்கு இலக்கான யுவதி சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு சிலாவத்தை, மூன்றாம் கட்டையைச் சேர்ந்தவரும் இளவாலைப் பகுதியில் வசித்து வந்தவருமான அன்ரன் சேவியர் டொறின் கொன்சலா (வயது-23) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

இளவாலையைச் சேர்ந்த கண்ணன் ரகுமாரன் (வயது-20) என்ற இளைஞன், தன்னைத் திருமணம் செய்துகொள்ளுமாறு கொன்சலாவை தொலைபேசியூடாக அழுத்தம் கொடுத்து வந்தார். எனினும், இதற்கு கொன்சலா சம்மதம் தெரிவிக்கவில்லை. இதனால் ஆத்திரமுற்ற ரகுமாரன் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி இரவு 9 மணியளவில் கொன்சலாவின் வீட்டுக்குச் சென்று கொன்சலாவின் மீது அசிட்டை ஊற்றிவிட்டு தப்பியோடிவிட்டார்.

அசிட் ஊற்றப்பட்டதால் கொன்சலாவின் உடல் எங்கும் எரிகாயங்கள் ஏற்பட்டன. வலியால் அவர் பெரும் குரல் எடுத்துக் கத்தினார். அவரது அவலக் குரல் கேட்டு வீட்டிற்குள் இருந்த பெற்றோரும் சகோதரிகளும் ஓடி வந்தனர். காயங்களால் துடித்துக் கொண்டிருந்த கொன்சலாவை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்காகத் தூக்கினர். எனினும், கொன்சலாவின் உடலில் இருந்த அசிட் துளிகள் தூக்கியவர்கள் மீதும் பட்டதால் அவர் களும் எரிகாயங்களுக்குள்ளானார்கள். பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் கொன்சலா சங்கானை வைதிய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

அங்கு அவருக்கு ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா அவர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கொன்சலாவுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

கொன்சலாவைத் தூக்க முற்பட்ட போது எரிகாயங்களுக்குள்ளான அவரது பெற்றோரான ம.அன்ரன் சேவியர் (வயது -57), அ.மரியகொறற்றி (வயது-52), சகோதரிகளான அ.லியோமி (வயது-16), அ.மற்றில்டா (வயது-13) ஆகியோரும் சிகிச்சை பெற்றனர்.

இந்த நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து வார்ட்டுக்கு மாற்றப்பட்ட கொன்சலா நேற்றுமுன்தினம் பி.ப. 5.40 மணியளவில் மரணமானார். இவரின் மரண விசாரணையை இள வாலைப் பொலிஸாரும், மேலதிக விசா ரணையை மல்லாகம் பதில் நீதிவான் அரியநாயகமும் மேற்கொண்டனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் யுவதியின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, கொன்சிகா மீது அசிட் ஊற்றி விட்டுத் தப்பிச் சென்ற கண்ணன் ரகுமாரன் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## எமது வாழ்வா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டாக்காலி மாடுகளும், பன்றிகளும், விஷப் பாம்புகளும் எமக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன. இப்போது நாம் சிறிது சிறிதாகக் காணிகளைத் துப்புரவு செய்து வருகின்றோம். எனினும், காணிகளைத் துப்புரவு செய்வதற்கு கூலிக்கு ஆள்களை அமர்த்த முடியாத நிலையிலேயே நாமுள்ளோம். அதற்கான வருமானமும் எம்மிடம் இல்லை.

இந்தப் பிரதேசத்தில் தனித் தனியாகக் குடியமரமுடியாது. சில குடும்பங்கள் ஒன்றிணைந்தே குடியமரவேண்டும். இல்லாவிட்டால் காட்டுப்பன்றி, கட்டாக்காலி மாடுகளின் தாக்குதல்களுக்கு இலக்காக நேரிடும் அபாயம் உண்டு.

நாம் இப்பிரதேசத்தில் குடியமரத் தேவையான பாதைகள் மற்றும் குடிதண்ணீர் கிணறுகள் என்பவற்றை அமைத்துத் தரவேண்டும் -

பாதையும் குடிதண்ணீரும் இல்லாத நிலையில் நாம் எப்படி அங்கு குடியேற முடியும்? இன்னும் வாடகை வீடுகளிலும் உறவினர்களின் வீடுகளிலுமே தங்கி இருக்கின்றோம்.

எங்களுக்கு உதவிசெய்ய வரும் தொண்டு நிறுவனங்கள் காணிகளைத் துப்புரவு செய்த பின்னர் தான் உதவமுடியும் என்கின்றன.

காணிகளைத் துப்புரவு செய்ய மண்வெட்டிகளை வழங்கியவர்கள், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சிக்கு வாக்களித்தால் மட்டுமே உங்கள் பிரதேசம் மேலும் அபிவிருத்தி செய்யப்படும் என்று கூறுகிறார்கள். எங்களுடைய வாழ்வாதாரத்தை அவர்கள் தேர்தல் வெற்றிக்கு பணயமாக வைக்கின்றனர்.

இன்று எமது அவசியத் தேவை குடிதண்ணீர், சீரான பாதை, மின்சாரம் என்பனதான். இவற்றைப் பெற்றுத்தர உதவ வேண்டும் - என்று கேட்டுக்கொண்டனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்கள் சந்திப்புக்குச் சமுகம் தராதமையால் கூடிய விரைவில் பிரதேச செயலகத்தில் ஒரு சந்திப்பை ஏற்படுத்தி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுவோம் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு உறுதியளித்தனர்.

2)

## அரச நிகழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜூன் மாதம் போசாக்கு மாதமாகும். இதனை முன்னிட்டு "எல்லோருக்குமான போசாக்கு - உங்கள் செயற்பாடு" என்ற தலைப்பிலான கருத்தரங்கு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமதி சிவசங்கர் திருமகன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட துறைத் தலைவர் பேராசிரியர் என்.சிவராஜா உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டு போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கான வழிவகைகள் குறித்து விளக்கமளித்தனர்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர்கள், பொதுசுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரப் பகுதியினர் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இந்தக் கூட்டத்தின்போது மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் போசாக்கு குறைவாகவுள்ள பிரதேசங்கள் எவை என இனங்காணுதல்.

✱ அவ்வாறு இனங்காணப்பட்ட பகுதிகளில் வீட்டுத் தோட்டம் மேற்கொள்வதற்காக காய்கறி மரக்கன்று களுக்கான விதை வழங்குதல்.

✱ மாவட்டத்திலுள்ள வைத்திய சுகாதார அதிகாரிகள் பணிமனைகள் ஊடாக எளிய முறையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நிகழ்வில் திட்டங்களை அமுல்படுத்தல்.

✱ அரச திணைக்களங்களில் இடம்பெறும் நிகழ்வுகளின் போது போசாக்குள்ள உணவுவகைகள் மற்றும் குடிபானங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த மாதத்தில் இருந்து இந்தத் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படவேண்டும். இதற்கு பிரதேச செயலர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் இவை அமுல்படுத்தப்படும் எனவும் அங்கு முடிவு எடுக்கப்பட்டது.

(ஒ-14)

# இந்திய மீனவர்களின் ஊடுருவலைக் கண்டித்து துணைத் தூதரகம் முன் 10ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 06

வடபகுதிக் கடலில் அத்துமீறிய இந்திய மீனவர்களது ஊடுறுவலைத் தடுப்பதற்கு இந்திய அரசு இதுவரை நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து எதிர்வரும் 10ஆம் திகதி யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தவுள்ளதாக வடமாகாண கடற்றொழில் கூட்டறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு-

எமது கடல் வளங்களை இந்திய மினவர்கள் அள்ளிச் செல்ல, நாம் வீடுகளில் பட்டினியாய் இருக்கிறோம்.

மீனவ சமூதாயத்தின் வற்றாத சொத்தான எமது கடல் வளம் அழிக்கப்படுவதையும், எல்லை மீறிய இந்திய மீனவரது மீன்பிடியை உடனடியாக நிறுத்தி, எம்மை சுதந்திரமாக கடற்றொழில் செய்ய அனுமதிக்குமாறும் இந்திய, இலங்கை அரசுகளைக் கண்டித்து எமது போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் இந்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளோம்.

இப்படி அவர் கூறியுள்ளார்.

(ஐ-சி)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு நேற்றுமுன்தினமும் நேற்றும் 900 முன்னாள் போராளிகள் விடுவிக்கப்படுவர் என ஏற்கனவே அறிவித்திருந்தது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினமும், நேற்றும் விடுதலையை ஒட்டி வவுனியா கலாசார மண்டபத்தில் பல நிகழ்ச்சிகளும், கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றன.

வைபவத்தில் தெரிவித்தபடி 900 பேர் விடுவிக்கப்படவில்லை. 337 முன்னாள் போராளிகள் மாத்திரமே விடுவிக்கப்பட்டனர். இதனால், முன்னாள் போராளிகளின் பெற்றோரும், குடும்பத்தினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதிகளில் அமர்ந்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அந்த இடத்துக்கு விரைந்த புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்க தற்போது தம் வசம்- 337 போராளிகள் தொடர்பான கோவைகளே இருக்கின்றன என்றும், ஏ... சியோர் விரைவில் விடுவிக்கப்படுவர் என்றும் உறுதி அளித்த பின்னர் போராட்டம் நடத்தியவர்கள் கலைந்து சென்றனர்.

(ஐ-சி)

## ஜெயலலிதா - ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட முயற்சியின் பிரகாரம் ஜெயலலிதாவும் இந்தச் சந்திப்புக்கு இசைந்தார். இதனையடுத்து விசேட விமானத்தில் இந்தியாவுக்குப் பறந்த மிலிந்த மொறகொட தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்து சில நிமிடங்கள் கலந்துரையாடினார். எனினும் இக்கலந்துரையாடலின் விவரங்கள் வெளிவரவில்லை.

இலங்கை-தமிழக அரசுக்கு இடையிலான புதிய உறவுக்கு இந்தச் சந்திப்பு வழிவகுக்கும் எனக் கருதப்படுகிறது.

கடும் போர்க் குற்றங்கள் புரிந்த ஜனாதிபதி மஹிந்தவைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடையை இந்தியா விதிக்க வேண்டும் என ஆட்சிக்கு வந்த மறுகணமே ஜெயலலிதா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ் வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 337 பேர் நேற்று அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதற்கான நிகழ்வு நேற்று வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மேலும் கூறியவை வருமாறு-

புனர்வாழ்வு முகாம்களில் இன்னும் ஐயாயிரத்துக்கும் குறைவான விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளே விடுவிக்க எஞ்சியுள்ளனர். அவர்கள் அனைவரையும் இந்த வருடத்தின் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான ஆலோசனையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனக்கு வழங்கியுள்ளார். இதற்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

இன்று (நேற்று) விடுவிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வுக்கான பயிற்சிகளை நிறைவு செய்தவர்கள். அது மாத்திரமல்ல, புனர்வாழ்வு பெற்ற காலத்தில் தொழில்சார் பயிற்சிகளும் இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

- இப்படி அவர் தெரிவித்தார். (05)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் இழப்புகள் எதுவும் இன்றி புலிகளை இலங்கை அரசு எவ்வாறு தோற்கடித்தது என்பது தொடர்பாக எழுந்துள்ள உலகின் கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் எனக் கருதப்பட்ட போதும் எதுவும் இல்லாதது குறித்து கலந்துகொண்ட பிரதிநிதிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

போர்க் குற்றச்சாட்டு தொடர்பாக முன்வைக்கும் ஒவ்வொரு கருத்தையும் அரசு மறுத்துள்ளது. கருத்தரங்கில் சுய பாராட்டு உரைகள் இடம் பெற்றதுடன், பொதுமக்களின் இழப்புகள் மிகவும் குறைவானவை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயிரக்கணக்கான பொதுமக்களை புலிகள் பணயக் கைதிகளாக வைத்திருந்த நிலையிலும், முன்னேறிவரும் படையினருக்கு எதிராக மனிதக் கேடயங்களாகப் பொதுமக்களை வைத்திருந்த நிலையிலும் எவ்வாறு புலிகளை மக்களிடம் இருந்து வேறுபடுத்தி அழிக்க முடிந்தது என்று கேட்கப்பட்டது. இதற்கு அளிக்கப்பட்ட பதில்கள் நம்பிக்கை ஏற்படுத்துபவையாக இருக்கவில்லை.

- இவ்வாறு அந்தச் சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-சி)

A/L 2012 புதிய பிரிவு
கணக்கீடு
AP.பகீரதன் B.B.A. (FM Spl.)
கிரியக்கணக்கீடு
Tue, Thur-4.00-6.00 pm.)
ஆரம்பம்:- 07/06/2011 (Tue4.00 pm.)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

A/L 2013
கணக்கீடு
AP.பகீரதன் B.B.A. (FM Spl.)
புதிய பிரிவு
(Tue, Fri 3-4 pm.)
ஆரம்பம்:- 07/06/2011
(Tue 3.00 pm.)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

VAN FOR HIRE

யாழ். நகரிலிருந்து கொழும்புக்கு குடும்பத்துடன் சென்று வர மற்றும் விசேட வைபவங்களுக்கு வான் வாடகைக்கு உண்டு.
(இலங்கை முழுவதுக்கும் சென்று வர முடியும்)
T.P. 0777289283
0778096873
தொடர்புகளுக்கு: S.

பொருளியல்
NB.கஜீதரன் B.A., H.N.Dip. in Acc.
A/L 2012
Tue, Wed, Thur 3 - 4 pm.
A/L 2011
Sat, Sun 9 - 10 am.
Sat, Sun 6 - 7.30 pm.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org